www.tamilarangam.net

JUDE

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 12/00

தினமுரசு வாரமலர்

டிச.05-11,1999

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 335

## 'அற்புதனின் கொலையும் அதன் பின் எழுந்த ஊகங்களும்'



## நெற்றிபுரளும் ஜனநாயக விழுமியங்கள்



## எந்த விசயத்திலும் நான் திருப்தி அடைந்ததில்லை

~பிரசாந்த்~

சூடு - சுவை சுவாரசியம் அது தான் தினமுரசு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முரசம்

## எஞ்சப்போவது.....?

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

நீதி கேட்டுக் குரலெழுப்பும்
முரசின் பேரொலி
கொலைப் பீதியினால்
மௌனமாகிவிடப் போவதில்லை!

ஆயிரமாயிரம்
கொலைகளையும், சதிகளையும்,
அரசியல் வஞ்சனைகளையும் கண்டு
அவற்றுக் கெதிராகக் கிளர்ந்தெழுந்த-இந்தப்
போர் முரசம்,
ஒரு கொலையோடு அடங்கிப்
போவதற்கில்லை!

அநீதியின்
இறுதித் துளி இருக்கும்வரை
நீதிக்கான ஒரு குரல்- என்றென்றும்
ஒலித்துக்கொண்டேதான் இருக்கும்.

இந்நாட்டில்
எழுதப்பட்டுச் சென்று கொண்டிருக்கும்- ஓர்
இரத்த ஏட்டின் கொலைப்பட்டியலில்
தினமுரசு ஆசிரியர் அற்புதராஜாவையும்
விதிவிலக்கின்றிச் சேர்த்துவிட்ட வரலாறு- தன்
கோர முகத்தை
மறுபடி காட்டிவிட்டுச் சென்றிருக்கிறது.

ஒரு வரலாற்று நாயகனை
நடுத்தெருவில்- நாதியற்ற பிணமாக்கிய
வெறிச் செயலால் எழுத்துலகம்
வெறிச்சோடிப் போய்விடுமென- அது
கனவு கண்டிருக்கிறது.

மரணம்- அம்
மாமனிதனை மரணிக்க
முடியாதவனாக மாற்றிய கைங்கரியத்தை
மட்டும்தான் செய்து ஓய்ந்தது.

முற்றுப்புள்ளி வைக்க முனைந்தாலும்
கமா(,)வைத்தான் பதித்து- அதன்
தொடர்ச்சிக்கு
வழியமைத்துவிட்டுப் போகத்தான்
அதனால் முடிந்தது.

இதேவேளை
சமூக அநீதிகளுக்கும், அடக்குமுறைகளுக்கும்
எதிராகக் குரல் கொடுக்கவேண்டிய
தார்மீகக் கடமை கொண்ட
எம் நாட்டுப் பத்திரிகை உலகில் நிலவும்
இழி நிலைதான் மிக வேதனை தருகிறது;
வெட்கக் கேடாகவும் உள்ளது.

சரிந்து கிடப்பது, இங்குள்ள
லட்சோப லட்ச மக்களில்
இனந்தெரியாத ஒரு சடலமல்ல;
தினமுரசு என்றால்
தெரியாத வாசகர்களே இல்லையென்றளவுக்கு
தமிழ் நெஞ்சங்களிலும்
பதிந்து- அவர்களின்
ஆத்ம சுருதியாகக் கிளம்பிய- ஒரு
கர்ம யோகியின் சடலம்!

இது பற்றிக்கூட
இப் பத்திரிகைகளுக்கு மாற்றுக்
கருத்துக்கள் இருக்கலாம்.
இருந்தாலும், அனைவரும் அறிந்த,
மிகப் பிரபல்யமான பத்திரிகையின்
ஆசிரியன் என்ற உண்மைகூட
இப் பத்திரிகைகளுக்குத் தெரியாமலிருக்க
நியாயமில்லை.
அவை இப் படுகொலை பற்றி,
ஏன் மௌனம் சாதிக்கின்றன?

பத்திரிகைச் சுதந்திரம்,
கருத்துச் சுதந்திரம்,
சிந்தனைச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம்
என்றெல்லாம் குரலெழுப்பும்
இப் பத்திரிகைகள்- ஒரு
பத்திரிகை ஆசிரியனின்
படுகொலையைக் கண்டிக்கத்
திராணியற்றுப்போனது ஏன்?

பத்திரிகைத் தொழில் வியாபாரமாகிவிட்ட
நிலையில், அதன் தார்மீகப் பொறுப்புகளைவிட,
விற்பனையும் வருமானமுமே
இலக்காகிவிட்டதன் விளைவாக
விறாப்புள்ள எழுத்தாளன் வீழ்த்தப்பட்டதைக்கூட
வியாபார லாபமாகக் கருதிவிட்டனவோ?

பத்திரிகைகள் கண்ணை மூடிக்கொண்டாலும்-
இத்தகைய காத்திரமான
மனிதர்களின் இழப்பு சமுதாயத்தில் எத்தகைய
வெற்றிடத்தை ஏற்படுத்தப் போகின்றதென்பதை
நாம் சிந்தித்தே ஆகவேண்டும்!

சிந்திக்கக் கூடிய மனிதர்களை
மௌனமாக்கிவிடும் ஆபத்தான ஆயுதக்
கலாசாரத்தின் ஆதிக்கம் இன்னும் பல நல்ல
மனிதர்களை இல்லாதொழிக்கவே
வழிசெய்யும்.

எஞ்சுவது ஆயுதமா? மனிதனா? என்ற
கேள்விக்கு எமது சமூகம் பதில்தேட வேண்டிய
கட்டாயத்தில் உள்ளது.

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்

# ஆன்மீகம்



## மனிதனும் தெய்வமாகலாம்

மனிதனில் உறையும் தெய்வீகத்தை உணர்த்துதல், அதனை வெளிப்படுத்த உதவுதல் ஆகியவையே சமயத்தின் மிக முக்கிய பணியாகும். சாஸ்திரங்கள், கிரியைகள், கோவில்கள், பிரசங்கங்கள் முதலியவைகள் இரண்டாந்தரமான அம்சங்களேயென்று சுவாமி விவேகானந்தர் விளக்குகிறார். தெய்வீக மாவதே சமயம் எனப்படுகிறது. பூரணத்துவத்தில் விருப்பங்கொண்ட ஆத்மாவானது அதனையடையவிடாது போராடுவதே சமயமாகும். மனிதன் தன் தெய்வீகத்தன்மையை உணரும் பொழுது, அவன் பேரமைதியையும், பேரானந்தத்தையும் அடைகின்றான். அந்நிலையில் துன்பம், பாபம் முலியவற்றைக் கடந்து விடுகிறான். வாழ்வு, சாவு என்பவற்றையும் கடந்து விடுகிறான். மரணமடையும் தன்மையுள்ள மனிதன் மரணமில்லாப் பெரு வாழ்வு பெறுகிறான். உலக மனிதன் உயர்ந்து தெய்வ மனிதனாகின்றான். சுவாமி விவேகானந்தர் காட்டிய தன்னலமற்ற தொண்டு-மனத்தை தூய்மையாக்க நமக்கு நல்ல பாதைபுகட்டும். தொண்டு- வழிபாடாகச் செய்யும் பொழுது அகங்காரத்தை பண்படுத்துகிறது. அதனால் மனத்தூய்மை ஏற்படுகிறது மனத்தூய்மை ஆன்மீக ஞானத்திற்கு வழிவகுக்கிறது.

தொகுப்பு:- அ.அரசரெத்தினம், சேனையூர்-06, மூதூர்.

## மணவாழ்க்கையும் மாநபியின் போதனையும்

மனித வாழ்விலே மணவாழ்க்கை என்பது மிக முக்கியமானது. ஒரு மனிதன் பூரணத்துவத்தை அடைய வேண்டுமானால் அவன் திருமணம் செய்தாக வேண்டும்.

திருமணத்தின் மூலம் ஏற்படும் கணவன்-மனைவி உறவுதான் மனித வாழ்க்கையில் மற்றெல்லா உறவுகளையும் விடவும் மிக வும் நெருக்கமானது.

இந்தக் கணவன்-மனைவி உறவு முறை எவ்வாறு அமைய வேண்டும் என்பதை அண்ணல் நபி (ஸல்) அவர்கள் அழகாக பின்வருமாறு விவரிக்கின்றார்கள்.

பெண்களை அவர்களின் அழகுக்காக மாத்திரம் மண முடிக்காதீர்கள். அழகு அவர்களை வேறு வழியில் திசை திருப்பிவிடக்கூடும்.

மேலும் அவர்களின் பொருளுக்காக அவர்களை மண முடிக்காதீர்கள். அது அவர்களை வழி கெடுத்துவிட ஏதுவாக அமையும். மணப் பெண் களை மார்க்க (தீன்) ஒழுக்கம் கருதியே மணமுடியுங்கள். அதுவே மண வாழ்க்கையை சந்தோஷமடையச் செய்யுமெனக் கூறியுள்ளார்கள்.

நூல்: இப்னு மாஜா

மணவாழ்க்கை சந்தோஷமடைய மாநபியின் போதனைகளை கடைப்பிடிப்போம்.

எம்.சி.கலீல், கல்முனை-05.

# கவிதைப் போட்டி இல. 332

## பரிசுக்குரிய கவிதை

### உதவி!

அய்யோ!
நிம்மதியாக வாழத்தான்
விடமாட்டீர்கள்!
சாகவாவது
விடுங்கள்!

சமீனா பேகம்-தஸ்கர.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### அடிமைப்பெண்

அறம் அடிசறுக்கி விழ,
மறம் மேல் நோக்கி எழ,
புறம் தள்ளப்பட்ட
புண்ணியவதியே? நீ
சிறுபான்மை இனம்தானே?

சண்முகம் மோகன்-குளொஸ்டர், இலண்டன்.



### கணக்கெடுப்பு

தேர்தல் வருகுதென்று வாக்கெடுப்புக்
கணக்கெடுப்பு முடிந்தது- 'நேற்று'.
கிபீர் வீசிய குண்டுப் பலியில் முடிந்தது
என் குடும்பக் கணக்கெடுப்பு- 'இன்று'.

நல்லையா தயாமதி-மட்/புன்னைச்சோலை

### யாரப்பா?

எங்கப்பா படையப்பா
எம் துயர் கேளப்பா!
தெருவேதான் தஞ்சமப்பா-இதைத்
தீர்த்து வைப்பார் யாரப்பா....?

செழியன் ஜே. பேரின்பநாயகம்-மட்டக்களப்பு.

### எம் இனத்தின் கதி!

அன்று ஆட்சிபீடமேற
உரிமை கொடுத்த இனம்
இன்று அகதிகளானோம்!
ஒரே மொழி ஒரே இன நாட்டில்!

மூதூர்-மனு பிக்கேல்.

### பிரார்த்தனை!

பஞ்சடைந்து ஊனுடலும்
பாரில் விழமுன்
நெஞ்சம் குமுறி
நீண்டு ஒலிப்பது
பிஞ்சுகள் வாழவரம்கேட்டு...!

செ.ஞானராசா-சின்னப்பண்டிவிரிச்சான்-மடு.

### தப்பியது எப்படி?

குறி தவறாமல்
குண்டு வீசினோம்,
புலி அணித் தலைவி நீ....
தப்பியது எப்படி?

எஸ்.எஸ். நாதன்-கல்லடி, உப்போடை, மட்டக்களப்பு.

# கவிதைப் போட்டி இல.335



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளில் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி 11.12.1999

கவிதைப் போட்டி இல.335
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசக(ர்)சாலை

உன்னை ஆவலோடு பார்க்க காத்திருந்த எமக்கு அற்புதனின் மறைவு படத்தைத் தந்து எமது கண்களில் கண்ணீரை வரவழைத்துவிட்டாய். எமது அன்பின் அற்புதனின் அற்புதமான படைப்புக்களைப் பார்த்து வியந்ததில் நானும் ஒருவன். இவ்வாறான அற்புதமான மனிதனை இவ்வுலகில் காண்பது அரிது. நல்லவர்களை- உண்மை பேசுபவர்களை இந்த மானிட உலகம் சீக்கிரம் அனுப்பிவிடுகிறது. நாட்டில் என்ன நடக் கிறது, என்ன நடக்கப் போகிறது, தமிழ்கட்சிகள் என்ன செய்கிறது என் பதை மட்டுமல்லாமல் அனைவரது முகத்தையும் உலகின் முன் காட்டிய வன் நீ! உன்னைக் கொலை செய்தவர்கள் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும். அரசாங்கம் தண்டிக்காவிட்டாலும் ஆண்டவன் நிச்சயம் தண்டிப்பான்!

அற்புதராஜாவின் குடும்பத்தாருக்கும் தினமுரசு ஊழியர்களுக்கும் எனது கண்ணீர் அஞ்சலி....

நியூட்டன் நந்தனி, புத்தளம்.

உன் குருவை நீ இழந்த செய்தி அறிந்து. இரு சிறகுகளையும் இழந்த பறவை போலானோம். நாம் தமிழர், ஓர் உன்னதமான ஒரு தமிழ்ப் பத்திரிகையின் ஆசிரியரை இழந்து தவிக்கின்றோம். இனி வரும் முரசில் அற்புதனின் தொடரை எப்பகுதியில் தேடுவது? பதில் சொல்வாயா? முரசே? எமதும் எம்மைப் போன்ற பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களின் இதயங்களை நீ தொடக் காரணமாய் இருந்த ஓர் அற்புதமான ஆசிரியர் அற்புதராஜாவை எம்மைவிட்டு பிரித்த கயவர்களை உன் அபிமானிகளாகிய எமக்கு நீ அறியப்படுத்துவாய் என நம்புகின்றோம். எமது இதயம் கவர்ந்த தினமுரசின் பிரதம ஆசிரியர். நடராஜா அற்புத னுக்கு எமது ஆழ்ந்த கவலையையும் அனுதாபத்தையும் தெரியப்படுத்துவ தோடு. அவர்களது ஆத்மா சாந்தியடையவும் இறைவனிடத்தில் வேண்டு கின்றோம்.

எஸ்.சந்திரா, திருமலை.

உண்மைகளை அப்படியே வெளியுலகிற்கு கொண்டுவரும் எமது உயிர் நாடியாகத் திகழும் தினமுரசுக்கு வந்த திடீர் சோதனையென்றே இதனைக் கூறலாம். என்றாலும் 'முரசு' இச் சோதனையைப் பொருட் படுத்தாது, மீண்டும் தனது வெற்றி நடையைப் போட வேண்டும் என்றே நாம் வாழ்த்துகின்றேன்.

முரசின் தொடர்ந்தேர்ச்சியான வளர்ச்சிக்கு எனது பல்லாண்டு கால வாழ்த்துக்கள்.

எம்.முகாஜிரீன், மாவடிச்சேனை.

இனிய முரசே! வந்தனங்கள்.

முதற்கண் மறைந்த எமது 'தினமுரசு' ஆசிரியர் அற்புதராஜா அவர் களுக்கு கண்ணீர் அஞ்சலியைச் செலுத்துவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பேனாவை ஆயுதமாகக் கொண்டு ஈழத் தமிழர்களுக்கு மாபெரும் சேவை செய்த புத்திஜீவியை இன்று இழந்து நிற்கிறது தமிழ் உலகம். அதிகமான தமிழர்களால் அதிகமாக வாசிக்கப்படும் பத்திரிகை 'தினமுரசு' ஒன்றுதான், என்று அடித்துக் கூறலாம். இதற்குக் காரணம் தினமுரசின் உண்மையை சுவைப்படக்கூறும் தன்மைதான்.

ஆசிரியர் அற்புதராஜா அவர்கள் மறைந்தாலும் அவருக்குச் செய்ய வேண்டிய ஒரே நன்றிக்கடன்- தினமுரசின் முன்னைய சுவை. உண்மை குன்றாமல் தமிழ் உலகிற்கு தொடர்ந்து அவர்களின் கைகளில் தினமுரசை தவழ வைப்பதாகும்!

ரீ.குணவர்த்தன, பிரதான வீதி, கஜுவாஞ்சிகுடி.

தினமுரசு நிர்வாகத்தினருக்கு,

எமது ஆசிரியரின் அகால மரணம் வானொலியில் கேட்டு சொல்ல முடியாத அதிர்ச்சியும் வேதனையும் அடைந் தோம். எமது குடும்பத்தில் ஓர் அங்கத்தினரை இழந்துவிட்ட ஒரு தவிப்பு! ஐயா முரசு 333 வரை காலமும் ஆசிரியரின் பெயரோ விபரமோ எமக்குத் தெரியாமல் இருந்தாலும் அவரது எழுத்தாற்றல்-அவரது பங்கு அளப்பரியது. அவரது பணி மேலும் வளர விடாமல் கொன்ற கோழைகளை நிச்சயம் இறைவன் தண்டிப்பான்! அன்னாரது குடும்பத்திற்கும் தினமுரசு குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை வேதனையுடன் தெரிவித்து கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

திருமதி நளாயினி முத்துசாமி,
கொங்கோடியா, எஸ்டேட், கந்தபொலை.

அன்பின் முரசாரே!

அதிர்ச்சியான செய்தி கேட்டு ஆறாத்துயருற்றோம். கேட்டது உண்மைச் செய்தியோ அன்றி வதந்தியோ வென ஒரு கணம் திகைத்திருந்தோம்.

வாரா வாரம் தேன் சொட்டும் தீந் தமிழில் வடித்தெமக்கு வழங்கிவந்த தேனமுது சாய்ந்துவிட்டது. அன்னாருக்கு இதோ எங்களின் கண்ணீரின் சமர்ப்பணம் உரித்தாகட்டும்.

இனி எங்களின் நெஞ்சத்தில் ஏற்பட்ட இடை வெளியை நிறைவு செய்ய யாருளர்!? குறைப்பட்டுபோன தெள்ளு தமிழ் தொடர் காவியம் இனித் தொடருமா?

காலத்தால் அழியாத தமிழ்க் காவியமாக அள்ளி வழங்கி வந்த ஈழப்புதல்வன் அற்புத ராஜனின் தமிழ்ப் பணியதனை அதே பாணியில் காலத்தே கரம் வந்து தவழ்ந்திருக்க அவரின் படைப்பைத் தொடர்ந்தெமக்கு வழங்கி வருவீர்களா?

எட்டுத் திசையும் கொட்டு முரசெனத் தமிழிசை பாடி வந்த அவரின் படைப்பனைத்தையும் 'நூல்' வடிவில் ஆக்கம் பெறும் நன்நாளை எதிர்ப்பார்க்கின்றோம்.

தமிழழகன், ஹற்றன்.

அரசியல் அலசல் கட்டுரைகளை உள்ளதை உள்ளபடி தெட்டத் தெளிவாக எமக்கு அறியத்தந்த 'அற்புதன்' என்னும் பேரில் அற்புதப்படைப்புகளை தந்த எமது அபிமான ஆசிரி யர் அமரர் நடராஜா அற்புதராஜா அவர்களின் மறைவு எங்களுக்கு என்றும் ஈடு செய்ய முடியாத ஓர் இழப்பாகும்...!

அவர் இவ்வுலகை விட்டு மறைந்தாலும், காலத்தால் அழியாத அவருடைய அற்புதப் படைப்புகள் என்றும் எங்கள் நெஞ்சங்களில் பூத்து நிற்கும்.

கண்ணீர் அஞ்சலி செலுத்தும்,

மரியம் காலித், கண்டி.

எமது பத்திரிகையின் ஆசிரியர் திரு-அற்புதராஜா நடராஜா அவர்களின் மரணச் செய்தி கேட்டு மிகவும் அதிர்ச்சி அடைந்தேன். செய்தி நிருபராக 23 வருடங்கள் கடமை ஆற்றிய என்னை ஒரு எழுத்தாளனாக தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தியதே இந்த தினமுரசுதானே!

ஏன் ஐயா இப்படிகொலை செய்கிறார்கள்? என்னால் இவ்வார தினமுரசு பத்திரிகையை படிக்க இயலவில்லை.

தினமுரசு நிர்வாகத்திற்கும் ஊழியர்களுக்கும் அன்னா ரின் குடும்பத்தாருக்கும் எனதும், எனது குடும்பத்தார்களின தும் ஆழ்ந்த துயரத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

பி.புஸ்பராஜா, சிலாபம்.




முரசுக்கோர் வாழ்த்துமடல்!

அறியாமை
பல நீக்கி
அறிவு தரும்
ஆசான் நீ!
***
இளம் கலைஞர்களின்
திறமைகளை
திறப்பட வெளியிட்டு
அவர்களுக்குள்
முயற்சி எனும் தீபம்
முற்றுகையின்றி
தொடர் ஒளியாய்
நின்றொளிர வைக்கும்
தூண்டுகோல் நீ!
***
பொய்களுக்கு மட்டுமே
புகழ்மாலை சூடும்
இம் மண்ணிலே
நிமிர்வுடன் நின்று
உண்மையுரைக்கும்
உத்தமன் நீ!
***
உன்னுடன் போட்டியிட
ஒன்றிரண்டு என்ன
ஓராயிரம் இதழ்கள்
வந்தாலும்
எங்கள் இதயங்களில்
இனிய மணம் வீசும்
முழு மலர் நீதான்!
***
உன் பணி
வாழ்க!
வளர்க!
***

சி.நிதாஜினி, கண்டியன் வீதி, பெரியகல்லாறு-02.

ஒரு நடுநிலை பத்திரிகை ஆசிரியராகவும் தமிழ் மக்களின் உரிமைகளை வெளிப்படுத்தவும், தனது பேனாவை உயர்த்திப் பிடித்த கரங்கள் வீழ்ந்தன! தமிழ் வாசகர்களுக்கும் பெரும் வீழ்ச்சியே;

அமரராகிய அற்புதராஜாவிற்கு, எனது பேனா வும் கண்ணீர் சிந்தி அஞ்சலி செலுத்துகின்றது.

வண்ணை தெய்வம், பிரான்ஸ்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

## அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங் கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

www.tamilarangam.net

# "இந்தியா எமது நேசநாடு!"

## இலண்டன் மாவீரர் விழாவில்

## அன்ரன் பாலசிங்கம் உரை

"தமிழீழ விடுதலைக்காகப் போராடி வரும் விடுதலைப் புலிகள், எக்காரணம் கொண்டும் இந்தியாவைப் பகைத்துக்கொள்ள மாட்டார்கள். இந்தியா புலிகளின் நேசநாடு. தமிழீழம் அமைவதால் இந்தியாவின் ஒருமைப்பாட்டுக்கே குந்தகம் ஏற்படும் என்று சிலர் விஷமத்தனமான பிரசாரங்களைப் பரப்பி எமது விடுதலைப் போராட்டங்களைக் கொச்சைப் படுத்தப்பார்க்கிறார்கள். ஆனால் இந்தியாவின்- பிரதானமாக தமிழ் நாட்டின் நலனுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் என்றும் பாடுபட்டேவரும் என்பதை அந்நாட்டின் அரசியல் தலைவர்களுக்கு, மாவீரர் தினத்தைக் கொண்டாடும் இந்தச் சந்தர்ப்பத்தில் எடுத்துக்கூற விரும்புகிறேன்."

இலண்டன் மாநகரில் நடைபெற்ற மாவீரர் தினக் கொண்டாட்டத்தின்போது, தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகரும் தற்போது இலண்டனில் வசிப்பவருமான திரு. அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், "இந்தியாவுக்கும் எங்களுக்குமிடையில் மிக நீண்டகால நல்லுறவு இருந்து வந்திருக்கிறது. ராஜீவ் காந்தியின் வெளிவிவகாரக் கொள்கையினால் எமக்கிடையில் முரண்பாடு தோன்றியது; யுத்தமும் மூண்டது. அது மிகவும் குறுகிய காலம் மட்டுமே! இன்று இந்தியாவுடன் மிக அந்யோன்யமான உறவைக் கொண்டுள்ளோம். சிங்களப் பேரினவாதிகளின் போக்கினால் தமிழீழ மக்கள் பெரும் துன்ப துயரங்களை அனுபவித்து வருகிறோம். அன்றாட உணவு கிடைப்பதே கடினமாகவிருக்கிறது. எமது பிரதேசங்களில் குண்டுகளை வீசியும் எறிகணைகளால் தாக்கியும் அப்பாவிப் பொதுமக்களை வதைத்து வருகின்றனர். வன்னி போன்ற பிரதேசங்களில் வாழும் மக்களுக்கு அன்றாட உணவுக்கே வழியில்லை. போதிய மருத்துவ வசதிகள் கிடைப்பதில்லை. இத்தகைய இழிநிலையைப் போக்க ஒரே வழி தமிழீழத்தை உருவாக்குவதே. இத்தகைய புனிதப் பணியில் முழுநேரமுதையும் செலவிடும் எமக்கு இந்தியாவின் அரசியலிலோ தமிழ்நாட்டு மக்களின் அமைதியான வாழ்க்கையைச் சீர்குலைக்கவோ நேரமில்லை. ஆகவே இந்தியாவையும் விடுதலைப் புலிகளையும் வீணாக விரோதிகளாகச் சித்தரிக்க முனையும் தீயசக்திகளின் விஷமத்தனத்துக்குச் செவிசாய்க்க வேண்டாம் என்று அந்நாட்டின் தலைவர்களைத் தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகிறேன்," என்றார்.

மேலும் திரு.பாலசிங்கம் தெரிவித்த கருத்து வருமாறு:

### தலைவரின் அறிவுரை

"மாவீரர் தினத்தையொட்டி, புலம் பெயர்ந்து வாழும் எம் மக்களுக்கு எத்தகைய தகவல்களைக் கூற வேண்டும் என்று எமது தலைவரிடம் கேட்டேன்.

'ஈழத் தமிழ் மக்கள் தமக்கானதொரு தனி நாட்டைக் கட்டி எழுப்ப இரத்தம் சிந்திப்போராடி வருகிறார்கள். எமது இலட்சியமான தமிழீழத்தைக் கட்டியெழுப்ப வெளிநாடுகளில் வாழும் எமது மக்களின் பங்களிப்பு இன்றியமையாதது. அவர்கள் அளித்துவரும் உதவி ஒத்தாசைகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

வெளிநாடுகளில் பயிலும் உங்கள் குழந்தைகளுக்கு நவீன தொழிலியத்தில் நல்ல தேர்ச்சிகளைப் புகட்டுங்கள். வருங் காலத்தில் அவர்கள் தம் சொந்த மண்ணுக்குத் திரும்பி, நாட்டை ஈடிணையற்ற தேசமாக முன்னேற்ற உழைக்கட்டும். எமது நாட்டின் மண்ணில் புரண்டு, வானில் சுயேச்சையாகத் தவழும் வெண்ணிலாவின் தண்ணொளியில் புரண்டு, இயற்கை வளங்களில் உளம் மகிழ்ந்து வாழ்வார்கள்.'

இவ்வாறு புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரன் கூறியதாக திரு.பாலசிங்கம், பல்லாயிரக் கணக்கான மக்களின் வானளாவிய கரகோஷத்தின் மத்தியில் கூறினார்.

கனடாவில் ரொரண்டோவில் நடைபெற்ற மாவீரர் தினவிழாவில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அணிதிரண்டிருந்தனர். தமிழ்நாட்டிலிருந்து இவ்விழாவில் பங்கேற்க 'நந்தன்' சஞ்சிகையின் ஆசிரியர் சுபவீர பாண்டியன் சிறப்பு அதிதியாக வந்து கலந்துகொண்டார்.

ஐரோப்பாவின் பல நகரங்களிலும் மாவீரர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டதாகத் தகவல்கள் வந்துள்ளன. ■

## தேர்தல் விளம்பரங்களைஅகற்றுவது யார்?

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி, வேட்பாளர்களின் உருவப்படங்கள், பதாகைகள் மற்றும் சுவரொட்டிகள் தடை செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் அலுவலகம் ஏற்கனவே அறிவித்திருந்தது. தேர்தலில் பங்குபற்றும் சகல அரசியற் கட்சிகளின் கூட்டத்திலும் இத்தீர்மானத்தை அனைத்துக் கட்சிகளும் ஆதரித்தன. மேற்படி அம்சங்கள் ஏற்கனவே வெளியிடப்பட்டிருந்தால், குறிப்பிட்ட தினத்துக்கு முன்னர் அவை முற்றாக அகற்றப்படவேண்டும் என்றும் முடிவெடுக்கப்பட்டது. ஆனால் இவை அகற்றப்படுவதற்கு மாறாக மென்மேலும் அதிகரித்து வந்துள்ளன.

முக்கியமாக ஆளும் கட்சியான பொதுஜன முன்னணித் தலைவி ஜனாதிபதி சந்திரிக்காவை ஆதரிக்கும் உருவப் படங்களும் ஏனைய பிரசுரங்களுமே அதிகமாக வெளியிடப்பட்டு வருகின்றன. அடுத்து ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்காவை ஆதரிக்கும் சாதனங்கள் அடுத்த எண்ணிக்கையில் தென்படுகின்றன.

கொழும்பிலும் ஏனைய பிரதேசங்களிலும் தென்படும் இத்தகைய விளம்பர சாதனங்களை அகற்றுவதற்கு பொலிசார் நேரடியாக முன்வரப்போவதில்லை என்றும் அகற்றும் பணியிலீடுபடுபவர்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கு மட்டும் முன்வருவார்கள் என்றும் பொலிஸ் உயர்பீடம் அறிவித்துவிட்டது. இப்பணியில் ஈடுபடுத்தப்படுவதற்கு கூலி ஆட்களைப் பிடிப்பதும் கடினமாக இருப்பதாக பிராந்திய செயலாளர்கள் கூறுகின்றனர்.

இது இவ்வாறிருக்க, ஆளும் கட்சி வேட்பாளருடைய சுவரொட்டிகளையும் பதாகைகளையும் எதிர்க்கட்சியைச் சார்ந்த சிலரே, வாகனங்களில் பவனி வந்து அகற்றுகிறார்களாம். இதே போன்று ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரை ஆதரிக்கும் சாதனங்களை ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களே அகற்றி வருகின்றனராம். இதனால் இரு தரப்பினருக்குமிடையில் ஆங்காங்கே மோதல்கள் எழுவதாகவும் பொலிசாரிடம் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி தலைமைச் செயலகமான 'சிறிகொத்தா' கடந்தவாரம் தாக்கிச் சீரழிக்கப்பட்டுள்ளது. அங்கு வைக்கப்பட்டிருந்த ரணில் விக்கிரமசிங்காவின் உருவப் படமும் சிதைக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.க. பாராளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்காவின் இராஜகிரியாவிலுள்ள அலுவலகம் திங்கட்கிழமை காலை தாக்கப்பட்டுள்ளது. அங்கு பணி புரியும் ஒருவர் கத்திக்குத்துக் காயங்களுக்குள்ளாகி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இவ்வாறு பல சம்பவங்கள் நடைபெற்று வருவதால் சகல விளம்பர சாதனங்களையும், கட்சி சார்பற்ற ஊழியர்களைக் கொண்டே துரித கதியில் அகற்றுவதற்கு தேர்தல் ஆணைய அதிகாரிகள் முயன்று வருவதாகத் தெரிகிறது. ●

## யாழ் மாவட்டத்துக்கு மேலதிகமான வாக்காளர் அட்டைகள்?

யாழ் மாவட்டத்தில் இன்று வாழும் வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு இருமடங்கு மேலதிகமான வாக்காளர் அட்டைகள் அச்சிடப்பட்டுள்ளதாக நம்பத் தகுந்த தகவல்கள் கிடைத்துள்ளன. அரசாங்க அச்சகத்தில் மொத்தம் 6 இலட்சத்து 86 ஆயிரம் வாக்காளர் அட்டைகள், யாழ் மாவட்டத்துக்கென பிரத்தியேகமாக அச்சிடப்பட்டுள்ளன.

இன்று யாழ் மாவட்டத்தில் ஆக 5 இலட்சத்து 55 ஆயிரத்து 975 பேர் மட்டுமே வசிப்பதாக மாவட்ட நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். இவர்களில் வாக்களிக்கும் தகைமையுடையோர் ஆக 3 இலட்சத்து 70 ஆயிரம் பேர் மட்டுமே. 1994ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலின்போது அங்கு 5 இலட்சத்து 96 ஆயிரம் வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர்.

அடுத்த வருடமே இடம்பெற்ற 'ரிவிரச' இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து பெருவாரியான மக்கள் இடம் பெயர்ந்து கிளிநொச்சிக்கும் வன்னியிலுள்ள இதர பிரதேசங்களுக்கும் குடிபெயர்ந்துவிட்டனர். வெகு பலர் கொழும்பில் வசிக்கின்றனர். கணிசமான தொகையினர் பிறநாடுகளில் தஞ்சம் புகுந்து கொண்டனர். இவவாறிருக்க, இத்தகைய மேலதிகமான வாக்காளர் அட்டைகள் யாழ்ப்பாணத்துக்கென அச்சிடப்பட்டிருப்பது பலத்த சந்தேகத்தைக் கிளப்பியுள்ளதாக ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இத்தகவல் ஆங்கிலத் தினசரியான 'டெயிலிமிர'ரில் வெளியாகியுள்ளது. ■

## தூர விலகுமாறு வேண்டுகோள்

வன்னிப் பெரு நிலப்பரப்புப் போர் நிலைமைகளில் ஏற்பட்டுள்ள நிலமை காரணமாக கிழக்கு மாகாணத்திலும் போர் நடவடிக்கைகள் தீவிரமாகும் என்ற அறிகுறிகள் காணப்படுவதாக பரவலாகப் பேசப்படுகிறது.

அதனை எச்சரிக்குமுகமாக கிழக்கு அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களின் எல்லைப் பகுதிகளில் சீருடையினரின் முகாம்களை நெருங்கி வாழும் பொதுமக்களை தூர விலகியிருக்குமாறு புலிகள் கேட்டுள்ளனர்.

கடந்த வாரம் புலிகளால் இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டதாக அறிய வருகிறது. இந்த அறிவித்தல் வெளியான பின்னர் போர் நிலை அச்சம் காரணமாக ஏற்கெனவே பல பொதுமக்கள் சீருடையினரின் முகாம் சுற்றாடலை விட்டு அப்புறப்பட்டு விட்டதாகவும் தெரியவருகிறது.

இதனையறிந்துள்ள சீருடைத் தரப்பும் தமது நிலைகளைப் பலப்படுத்தியுள்ளதோடு, தீவிரமான கண்காணிப்புகளை மேற்கொண்டு வருவதையும் அறியக் கூடியதாகவுள்ளது. ●

## மன்னாரை எதிர்நோக்கும் நெருக்கடிகள்

மன்னார் மாவட்டத்திலுள்ள இராணுவத் தளங்கள், இராணுவ நிலைகள் ஆகியன தொடர்ந்தும் புலிகளில் ஆட்டிலறித் தாக்குதலுக்குள்ளாகி வருகின்றன. இத்தகைய நிலைகளை அண்மித்துவாழும் பொதுமக்கள், இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லவேண்டும் என்று தொடர்ந்தும் எச்சரிக்கை விடுத்து வருகின்றனர் புலிகள்.

ஏற்கனவே வெளியேறி, சில நாட்களின் பின்னர் தமது இருப்பிடங்களுக்கு மீண்டவர்கள் இப்போது குழம்பிப்போய் செய்வதறியாது திகைக்கின்றனர்.

இதே நிலையில் மன்னாருக்கான போக்குவரத்து தடைப்பட்டிருப்பதனால் மன்னாரின் நிலை பாதிப்புக்குள்ளாகி வருகின்றது. மன்னாருக்கான தரை வழிப்பாதை துண்டிக்கப்படுமானால் இராணுவ வசமுள்ள மன்னார் நகரப் பகுதியில் மக்களுக்கான அத்தியாவசிய, உணவுப் பொருட்களின் தேவைகள் மட்டுமல்லாமல் இராணுத்தினருக்கான வழங்கலும் பெரும் சிரமமாகவே இருக்கும். இதனால்தான் முன்னர் மன்னார்-வவுனியா வீதி எடிபல இராணுவ நடவடிக்கை மூலம் மீட்க்கப்பட் டது. இந்த வீதியும் தற்போது அச்சுறுத்த லுக்குள்ளாகியுள்ளது. மன்னார்-வவுனியா வீதியை தக்க வைத்துக்கொள்ள இராணுவம் கடுமையான முயற்சியை மேற்கொள்ள வேண்டியிருக்கின்றது. ●

## கிழக்கில் காணப்படும் சுவரொட்டிகள்?

சமீப சில காலங்களுக்கு முன்னர் 'பந்தேறு குடிகள்' என்று தமிழர்களை வர்ணித்துக் கருத்து வெளியிட்டிருந்தார் ஜனாதிபதி சந்திரிக்கா. அத்துடன் நின்றுவிடாமல் மேலும் ஒரு படி மேலே சென்று இந்துக்களின் புனித தினமாகவும் தேசிய விடுமுறையாகவுமிருந்த சிவராத்திரி தினம் தேசிய விடுமுறையிலிருந்து நீக்கப்பட்டது.

ஆனால் அதே சந்திரிக்கா தற்சமயம் தேர்தல் பிரசார சுவரொட்டிகளை வெளியிட்டுள்ளார். சந்திரிக்காவின் உருவப் படத்தைத் தாங்கிய அந்தச் சுவரொட்டிகளில் 'தமிழர் என்ற பெருமையோடு வாழும், உரிமை தமிழர்களுக்கு உண்டு!' என்று காணப்படுகிறது.

மட்டக்களப்பில் பாதுகாப்புத் தரப்பினரின் சோதனைச் சாவடிகள் உள்ள இடங்களிலும், மற்றும் பொலிஸ், இராணுவ முகாம்களுக்கு முன்னாலும் உள்ள இடங்களிலும் இச்சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இதற்குப் பதிலடியாக புலிகளின் வசமுள்ள பகுதிகளில் சந்திரிக்கா அரசின் ஆட்சிக் காலத்து ஒவ்வொரு வருடத்தையும் சுட்டிக்காட்டி, நடந்து கொண்டிருக்கும் படுகொலைகளை சித்தரிக்கும் சுவரொட்டிகள் புலிகளால் ஒட்டப்பட்டுள்ளன.

சந்திரிக்காவின் கொடும் கரங்களால் தமிழர்களின் கழுத்து நெரித்துக் கொல்லப்படுவதாகவும், பின்னணியில் மண்டை ஓடுகள் கிடப்பதையும் அச்சுவரொட்டிகள் சித்தரிக்கின்றன. ●

## "போரை முடிவுக்குக் கொண்டுவருவேன்!"

## ரணில் விஞ்ஞாபனம்

எதிர்கட்சித் தலைவரான ஐ.தே.க ஜனாதிபதி வேட்பாளர் திரு.ரணில் விக்கிரமசிங்க "மக்களுடனான எனது ஒப்பந்தம்" எனும் தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளர்.

போரினை முடிவுக்குக் கொண்டு வருதல் பற்றி அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "என்னை ஜனாதிபதியாகத் தெரிவு செய்தால்;

* விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பேன்;

* போரின் உக்கிரத்தைக் படிப்படியாகக் குறைத்து, பிரச்சனையைத் தீர்த்து சகஜ நிலைமையை ஏற்படுத்துவேன்.

* வடக்கு-கிழக்கில் ஓர் இடைக்கால நிர்வாக சபையை அமைப்பேன்.

* மக்கள் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதும் நடைமுறைப் படுத்தக் கூடியதுமான தீர்வினை எட்ட முன்னர் அரசியல் யாப்பில் மாற்றத்தினை ஏற்படுத்த மாட்டேன்.

* குற்றமற்ற அப்பாவி மக்களை இம்சைப் படுத்துகின்ற நடவடிக்கையை முடிவுக்குக் கொண்டு வருவேன். ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சில நாட்களுக்குள் படைத் தளபதிகளுடனும் சமூகத் தலைவர்களுடனும் சந்திப்பை ஏற்படுத்தி இரு பகுதிக்கும் ஏற்புடைத்தான வழி வகைகளைக் காண்பேன்.

* நான் போரினால் பாதிக்கப்பட்டவர்களினதும், அகதிகளினதும் பிரச்சனைகளைக் கவனித்துப் பேணக்கூடிய திட்டத்தினை வரைவதற்கு ஒரு சுயமான குழுவை நியமிப்பேன்.

* வட-கிழக்கு மக்கள் தினமும் உணவின்மை, மருந்து மற்றும் வேறு அத்தியாவசியப் பொருட்கள் இல்லாமை போன்றவற்றால் படும் துயரங்களை நானறிவேன். அத்தோடு எமது இனத்தவர்களைச் சந்திக்கும் தேவைக்காக பயணத்தை மேற்கொள்வோரது பயங்கர அனுபவங்களை இட்டு நான் அனுதாபப்படுகிறேன். தேர்ந்தெடுக்கப்பட்டதும் நான் இவர்களது வாழ்க்கையை சௌகரியமாக்குவதற்கு உடனடி நடவடிக்கை எடுப்பேன். முக்கியமாக பாதிக்கப்பட்ட இடத்தில் வசிப்பவர்கள் தங்கள் தொழிலை தொடர்ந்து நடத்தக் கூடிய சந்தர்ப்பத்தினை அளிப்பேன். வட-கிழக்கில் உள்ள சகல மக்களுக்கும் இன வேறுபாடின்றி நியாயமான முறையில் இப்பிரச்சினையை நான் தீர்ப்பேன் என உறுதி கூறுகின்றேன்."

இவ்வாறு ரணில் விக்கிரமசிங்காவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறப்பட்டுள்ளது. ■

## வன்னி தமிழ் அகதிகளுக்கு உதவ முஸ்லிம்கள் ஏற்பாடு

வன்னியில் உக்கிரமடைந்துள்ள போர் அபாயத்தில் சிக்கித் துன்பப்படும் அகதி மக்களுக்கு உதவ மட்டக்களப்பு, ஏறாவூர், காத்தான்குடி முஸ்லிம் மக்கள் முன்வந்துள்ளனர்.

"தற்போதைய இக்கட்டான போர் நெருக்கடியின் விளைவாக உணவு, உடை, உறைவிடமின்றி, மாரி மழையில் துன்பப்படும் மக்களுக்கு இன மத பேதமின்றி அவர்களின் துயர் துடைப்பது மனிதாபிமானமுள்ள ஒவ்வொருவரினதும் கடமையாகும்." என்று ஏறாவூர் நகர பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளரும் இன நல்லுறவுக்கான அமைப்பின் தலைவருமான எஸ்.எச்.அபூஹனீபா தெரிவித்தார்.

1987ஆம் ஆண்டு இந்தியப் படை காலத்திலும் 1990ஆம் ஆண்டின் இன வன்முறைச் சம்பவங்களின் போதும் பாதிக்கப்பட்டு அகதிகளான த்மிழ் மக்களுக்கு ஏறாவூர் முஸ்லிம்கள் உதவி வழங்கியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

"உண்மையான இன உறவு மற்றைய சமூகத்தின் சுக துக்கங்களில் பங்கு கொள்வதிலேயே தங்கியுள்ளது. எனவே பாதிக்கப்பட்ட மக்களுக்கு தங்களாலான உதவிகளை அனைவரும் தாராளமாக வழங்க முன்வர வேண்டும்" என்று உப தவிசாளர் மேலும் சொன்னார்.

இதேவேளை, மட்டக்களப்பு வர்த்தகர் சங்கம், காத்தான்குடி முஸ்லிம்கள் போன்றோரும் வன்னி அகதிகளுக்கு உதவி வழங்க முன்வந்துள்ளனர். ■

## பொலிஸ் அதிகாரிகள் திடீர் இடமாற்றம்?

தேர்தல் ஏற்பாடுகள் நடந்து வரும் கையோடு முதல் நடவடிக்கையாக கிழக்கு மாகாணத்தில் முக்கியமான இடங்களிலுள்ள பொலிஸ் பொறுப்பதிகாரிகள் திடீர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், ஏறாவூர் பொலிஸ் பொறுப்பதிகாரி, அக்கரைப்பற்றுப் பொலிஸ் பொறுப்பதிகாரி ஆகியோருக்கு முதற் கட்டமாக திடீர் இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் பலரையும் இடமாற்றம் செய்யும் முயற்சியில் ஆளும் தரப்பு அரசியல்வாதிகள் இறங்கியுள்ளதாக அறியவருகிறது.

இது போன்று தமிழ் வாக்கு மோசடிகளைச் செய்வதற்கு ஆளும் தரப்பினர் வேறு பல திட்டங்களையும் தீட்டியுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியினர் குற்றம் சாட்டுகின்றனர்.

தேர்தல் நடத்தப்படுவது பற்றிய அறிவித்தல் வெளியாகி தேர்தல் நடந்து முடியும் வரை பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளை இடமாற்றம் செய்ய முடியாது என்ற நியதி இருக்கும் போதே வலுக்கட்டாயமாக இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தமிழ் மக்களது கூடுதலான வாக்குகள் தங்களுக்கே கிடைக்கும் என்று தேர்தலுக்கு முன்னரே ஆளும் தரப்பு உறுதியாகக் கூறி வருகிறது. இதுவே பலத்த சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது என்று அவதானிகள் கருதுகின்றனர்.

கிழக்குப் பகுதியில் சந்திரிக்காவின் சுவரொட்டிகளை ஒட்டுவதில் சீருடையினரும், சீருடையினருடன் சேர்ந்து செயற்படும் தமிழ் ஆயுதக் குழுவொன்றும் ஈடுபட்டுள்ளதாக ஐ.தே.க. கூறுகிறது. ■

## தமிழ் மக்களை ஏமாற்றும் போலி வாக்குறுதிகள்!

"ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளே வெற்றியை நிர்ணயிப்பதற்குப் பக்க பலமாக இருக்கப் போவதாலேயே தமிழ் மக்கள்மீது ஆட்சியாளர்கள் திடீர்க் கரிசனை காட்டத் துவங்கியுள்ளனர்!" என்று பலர் பேசிக் கொள்கிறார்கள்.

சாதாரண வேலை வாய்ப்புக்கள் தொடக்கம் அகதி நிவாரணம் பெறுவது வரை தமிழ் மக்கள் போராட்டம் நடத்த வேண்டியே உள்ளது. அப்படி இருக்கையில் தமிழ் மக்களின் தீர்க்கப்படாத பல பிரச்சினைகளை தாம் தீர்த்துவிடப் போவதாக ஆளும் தரப்பினர் தமிழ் மக்களுக்கு தேர்தல் வாக்குறுதியளித்து வருகின்றனர்.

தமிழ்ப் பகுதிகளில் இன்னமும் சுபீட்சத்திட்ட ஊக்குவிப்பாளர்கள் நியமிக்கப்படாத பல இடங்கள் உள்ளன. ஏற்கெனவே தற்காலிகமாக நியமிக்கப்பட்டவர்களுக்கு இன்னமும் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டாகவில்லை.

எத்தனையோ எதிர்ப்புப் போராட்டங்களை அவர்கள் நடத்திய பின்னர்தான், தற்சமயம், அரசியல் ஆதாயத்திற்காக, நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

அரசியல் ஆதாயத்திற்காகவே சமுர்த்தி நியமனம் வழங்குவதைப் பயன்படுத்த வேண்டியேற்பட்டதாக மட்டக்களப்பில் நடந்த வைபவமொன்றின்போது பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் ஒப்புக்கொண்டுள்ளார்.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# நினைவஞ்சலி





சண்முகநாதன் புஸ்பராணி
(அன்னரத்தினம்)
மண்ணில்:- 31.07.1944
விண்ணில்:- 15.11.1998

சண்முகநாதன் சசிகலா
மண்ணில்:- 05.02.1979
விண்ணில்:- 02.08.1996

பெற்றமனம் பரிதவிக்க, உடன் பிறந்தோர் துடிதுடிக்க, உற்றவர்கள் உருகி நிற்க, பாதி வழியில் பயணத்தை முடித்து பாரினில் நீ மறைந்த மூன்றாண்டில் பெற்றவளையும் உன்னுடன் அழைத்ததென்ன? ஆண்டொன்று சென்றதம்மா ஆதரிக்க ஆயிரம் உறவுண்டு அரவணைக்க ஆயிரம் உள்ளமுண்டு ஆனால் அம்மா என்றழைக்க நீங்களில்லையே! இனி, ஆறுதல் சொல்ல ஆண்டவனே வந்தாலும் உங்கள் அன்பிற்கு ஈடாகுமா? ஏக்கத்தின் எல்லையதனில் எமையெல்லாம் தவிக்கவிட்டு பாரினில் நீங்கள் மறைந்ததன் மாயமென்ன?

என்றும் உங்கள் பிரிவால் துயருறும் கணவர்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளை, அப்பா,
சகோதர சகோதரிகள், அண்ணிமார், மருமக்கள்.
தகவல்: எஸ்.வசந்தகுமார் (கனடா)

# நான்காண்டு இதய அஞ்சலி



திருமதி
ஹரிச்சந்திரா
சுந்தரலிங்கம்

உதயம் : 11.02.1960
மறைவு : 05.12.1995

காலத்தால் நீங்காத ஹரிச்சந்திரா
மகளே
ஞாலத்தில் எம் இதய நல்விளக்கே-
நாள்தோறும்
ஓவென்று ஓலமிட உடலழித்தாா
உத்தமியே
மாசூற்றம் வந்துமக்கு வருடம்
நான்கானதம்மா!

ஆனை முகன் அழைத்துக்
கொண்டானோ- அன்பாக
போன வழியில்
புதுக்குடியிருப்பூரில்
கன்னகிமின் கன்காணாத்
தேசம் காமுற்றாயோ
என்னி இருப்பதன்றி ஏதும்
வழி உளதோ?

ராஜநடை கான ரஜனிகாந்த்
குலக் கொழுந்தே!
பாசமிகு அப்பா, அம்மம்மா உடன்
பிறந்தோர்
யாண்டும் பரிதவித்து
நானிலத்தில் வாடுகின்றோம்
மீண்டும் வருவாய் மிகு துயரம்
விலக்கிடவே!

பெற்றவர்கள் பாசம் பெரிதும் வதைத்திடவே
பிறந்தவர்கள் ரஜனி, ரஜீவ், பேமானந்தி
முற்றும் உனை நினைத்து மூழ்கி இறையருளில்
உற்றிடவே ஆன்மா உள்ளத்தில் பிரார்த்தித்தோம்!

நினைந்து நினைந்து யாம் நிமலனடியை வேண்டி
புனைந்து கண்ணீரால் நினைவாரம் சூட்டுதலே
இயன்றதன்றி வேறில்லை ஈடேற்றும் எம்பிரான்
செய்யதிருவடியை சேர்ந்திருக்கத் தாழ் பணிந்தோம்.
உங்கள் பிரிவால் பரிதவிக்கும் அன்புக் கணவன், பெற்றோர், பிள்ளைகள்,
உடன் பிறந்தோர், மைத்துனர்மார், மைத்துனிமார் மற்றும் உறவினர்கள்.
(இலங்கை, சுவிஸ், ஜேர்மன், இலண்டன்)

தகவல்: திருமதி அ.சிவப்பிரகாசம்- கடற்கரை வீதி, காரைதீவு (கி.மா)

# 31ம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

(10.11.99)



தோற்றம் : 30.01.1932
மறைவு : 11.10.1999

திரு. அப்பாத்துரை சதாசிவம்
(Post Office. கிளி)

யாழ்ப்பாணம் அரியாலை ஈச்சங்காட்டைச் சேர்ந்த ஓய்வு பெற்ற தபால் ஊழியர் திரு. அப்பாத்துரை சதாசிவம் அவர்களின் மரணச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும், செய்தி கேட்டு நேரிலும், உறவினர் வீடுகளிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறியோருக்கும் அன்னாரின் 31ம் நாள் கிரியையில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தித்த அனைவருக்கும் மற்றும் பல வழிகளில் உதவிகள் புரிந்தும் எங்கள் துன்பத்தில் பங்கு எடுத்துக் கொண்ட அன்பர்கள் எல்லோருக்கும் எமது நன்றிகள்.

குடும்பத்தின் சார்பில்
மகன்: DR. A.S.பாஸ்கரன். 739344.


# மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு. மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**
50, THEATRE ROAD,NINTHAVUR-21, SRI LANKA. ☎ 067-50349

# சிங்கப்பூரில் இலங்கையர்களுக்கான திருமண சேவை

வெளி நாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை சிறந்த முறையில் சமய முறைப்படி ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். மற்றும் பதிவுத் திருமணம், தங்குமிட வசதி, தங்கும் இடங்களில் சமைத்துச சாப்பிடும் வசதி, போக்குவரத்து வசதிகள், அனைத்தும் சிறந்த முறையில் குறைந்த செலவில் ஒழுங்குசெய்து கொடுக்கப்படும்.

தொடர்பு. N .THANGA,
T.PRINCI.
5. STARLIGHT ROAD. SINGAPORE 217758
OPPOSITE RANGOON ROAD T.P.2974924,
HP 97546610. 298619, 97546610.

# TINY TOTS' MONTESSORI

USING AMI MONTESSORI METHOD AND PRE SCHOOL METHOD

2000ம் ஆண்டுக்கான அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

- முதலாவது மொழி ஆங்கிலம். இரண்டாவது மொழி தமிழ்/சிங்களம்.
- குறிக்கப்பட்ட அனுமதிகள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.
- வயதெல்லை 2 1/2 வருடம் முதல் 4 வயது வரை.
- அனுமதிகளை டிசம்பர் 10க்கு முன்பு பெற்றுக்கொள்ளவும்.

ACA 55, ST. LUCIA'S ST, KOTAHENA.
TEL : 335287

# மலையாள மாந்திரிகம்





மலையான மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இதுதான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
**Dr.P.K. SAAMI J.D.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**
தபாலொலியாகவும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831

# Timint Cream (Herbel) டைமின்ட் கிரீம்

விந்தின் சக்தியின்மை, வீரியமின்மையை போக்கி தாம்பத்ய வாழ்க்கையில் நீண்ட நேர இன்பத்தை கொடுக்கும். நீண்ட நேர தாம்பத்ய சுகம் புத்துணர்ச்சி, இன்பத்தை ஏற்படுத்தும்.



SUPER X 50 சுப்பர் X 50

வீரியமின்மை, விந்தின் சக்தி குறைவினால் ஏற்படும் பலவீனம், நரம்புத் தளர்ச்சியை போக்கி புத்துணர்ச்சியையும், விந்தின் சக்தியை அதிகரிக்கவும் உதவுகிறது. இல்லறவாழ்வில் தெவிட்டாத இன்பத்தையும் நீண்ட நேர சுகத்தையும் கொடுக்கின்றது. 100% இயற்கை தாவரச் சாறுகளினால் தயாரிக்கப் பட்டுள்ளது. வயது முதிர்வினால் ஏற்படும் பலவீனத்தை போக்கி நீண்ட நேர இன்பத்தை தரவல்லது.

விநியோகிப்போர்:
யூனியன் கெமிஸ்ரி, யூனியன் பிளேஸ், மெக்ஸ் பாமஸி (கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்) நியூ லீ மெடிக்கல், தலதா வீதி, கண்டி, சிங்ககிரி பாமஸி, பண்டாரவளை, ஆருணா பாமஸி, மாத்தறை, தங்கல்ல, குருநாகல் மெடிக்கல் குருநாகல், சுஹத பாமஸி சிலாபம், நியூ கண்டி மெடிக்கல் கேகாலை, விஜய நிட்டம்புவ, றோயல் கந்தானை, சமீரா சாரங்க பாமஸி மஹரகம, எஸ்.எம்.எஸ். ட்ரக்ஸ் நீர்கொழும்பு, பேராதெனிய மெடிக்கல் பேராதெனிய, சாலுகா பாமஸி ஆமர் வீதி, லங்கா மெடிக்கல், மெயின் வீதி இரத்தினபுரி, ப்ம்பலப்பிட்டி பாமஸி (விஜய கொம்பிளெக்ஸ்) பம்பலப்பிட்டி, சிடி பாமஸி, மலபார் வீதி, கம்பளை.
R.No: 183272

# எங்கும் மகிழ்ச்சி ! எங்கும் குதூகலம் !!

## 2000ம் ஆண்டுக்கான அஷ்டலக்ஷ்மி வெளியீடுகள்

முழுமை - முதன்மை - புதுமை

**அஷ்டலக்ஷ்மி தினத்தாள் கலண்டர்**
விலை ரூபா 120/-
இலங்கையில் முதன்முறையாக தினமும் (அன்றைய) கிரக நிலைப்படம் அறிமுகப்படுத்தப்படுகின்றது.
கலண்டருடன் இலவச திருக்குறள் (கையடக்க) பதிப்பு

**2000ம் ஆண்டுக்கான இராசிப்பலன்**
விலை ரூபா 40/-
புதுவருடப்பலன் 12 ராசிக்கும் ஒரே புத்தகம்.
ஆசிரியர்: இந்திய சோதிடப் பேராசியர்
என். சிவசுப்பிரமணியம். - மதுரை (தமிழ்நாடு)

**2000ம் ஆண்டு வியாழ மாற்றப்பலன்**
(01.01.2000 - 31.12.2000)
விலை ரூபா 40/-
புத்தகத்துடன் கண்திருஷ்டி கணபதி படம் அன்பளிப்பு.
ஆசிரியர்: இந்திய சோதிட மேதை டாக்டர்
ஏ. என். ராஜமணி M.A. - ஸ்ரீரங்கம் (தமிழ்நாடு)

**2000ம் ஆண்டுக்கான விசேட பதிப்பு**
**அஷ்டலக்ஷ்மி பஞ்சாங்க சித்திரக் கலண்டர்**
விலை ரூபா 50/-
முதன் முறையாக கிரக நிலை அம்சங்களுடன் பலவர்ண சித்திரப் படங்களுடன் வெளிவந்துள்ளது.

உங்கள் வீடு, தொழிற்சாலைகளில் கண்திருஷ்டி, பொறாமை அகலுவதற்கான கண்திருஷ்டி கணபதி படம் (கண்ணாடியில் அமைந்தது) ரூபா. 100/= தனிப்படம் ரூபா. 7.50

அஷ்டலக்ஷ்மி பதிப்பகம்
320, செட்டியார் தெரு, கொழும்பு -11.
தொலைபேசி: 334004

TALENT A&M

# சிந்தித்துப் பாருங்கள்

நோவு, வலி ஏற்படுகின்றபோது வைத்தியரின் ஆலோசனையின் படி, மருந்து வில்லைகளை பாவிப்பதே சிறந்தது. எனினும், எல்லாவகையான வலி, நோவுகளுக்கும் மருந்து வில்லைகளை உட்கொள்வது சிறந்ததா?

மரம், செடி, வேர், மலர், பட்டை ஆகியவற்றின் சாரைக்கொண்டு உற்பத்தி செய்யப்படும் சித்தாலேபயை தடவி வலி, நோவுகளில் இருந்து நிவாரணம் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை இலங்கையில் இலட்சக்கணக்கான சித்தாலேப பாவனையாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

இலங்கை சுகாதாரத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்ற சித்தாலேப ஐ.எஸ்.ஓ. 9002 (ISO 9002) சர்வதேச தர நிர்ணயத்தின் மேற்பார்வையின் கீழ் உற்பத்திசெய்யப்படுகின்றது.

சித்தாலேப

ஹெட்டிகொட இன்டஸ்ரீஸ் (பிரைவெட்) லிமிட்டெட்.
33/3, ஸ்ரீ தர்மாராம வீதி, இரத்மலானை.
டெலிபோன்: 736910 பெக்ஸ்: 735465

TALENT A&M

# மனோதத்துவ வைத்தியம்

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களை
**கொழும்பில் டிசம்பர் 11,12,13 வரை சந்திக்கலாம்**
Dr. P.Arumugam S.A.M.P. REG.9492
SRI SAWBAKIYA INN, 67/A, WOLFENDHAL ST. COLOMBO-13.
T.P:- 338165-338166, 338164, Fax:- 338161, செல்டெல் No. 072-609388
**கல்முனையில் டிசம்பர் 04, 05ம் திகதிகளில் சந்திக்கலாம்**
T.M.M. பார்மசி-கல்முனை. T.P. 067-29329
**வவுனியாவில் அறிவிக்கப்படும்**
(தயவு செய்து பதிவுசெய்து கொள்ளவும்)
(HOTEL VASANTHAM), 40,கண்டி வீதி, வவுனியா. T.P.024-22607, 024-22615, 22365
கடிதத்தொடர்பு:- Resident T.P. 065-24019
Dr. P.Arumugam S.A.M.P.
No. 51/5, Koolavady Road, Batticaloa . SRI LANKA.

# உலகப் புகழ்பெற்ற எக்ஸ் ஒயில்

★வாதத்தால் வரும் வலிகள்
★உணர்ச்சியற்ற பாகங்கள்
★பிரயாணக்களைப்பு
★தலைப்பாரம்
★தலைச்சுற்று
★ஜலதோஷம்
★வயிற்றுவலி
★தலைவலி
★காய்ச்சல்
★பல்வலி
★காதுவலி
★மூக்கடைப்பு
★பூச்சிக்கடிகள்
★தசை வலிகள்
★சுளுக்கு ★இருமல்
★மதுவால் ஏற்படும் பிரச்சினை



Rs. 20.00 Only
(3m.l)

ஆகியவற்றிக்கு உடனடி நிவாரணி

ஏக விநியோகஸ்தர்
SINGHA HOLDINGS (PVT) LTD.
14, Ground Floor-Welikada Plaza-Rajagiriya.
Tel: 888214 Fax: 682984

www.tamilarangam.net



# ஆட்டிலறி யுத்தம்!

# அனல் பறக்கும் வன்னிக் களம்!

வன்னி யுத்தக்களம் யாழ்ப்பாணத்தைப் போல் இருக்கப்போவதில்லை என நாம் முன்பே குறிப்பிட்டிருந்தோம்.

இது அரச படைகளுக்கு ஒரு பயங்கர சாவுகளமாக அமையுமென எச்சரித்துமிருந்தோம். அதில் காரணமில்லாமல் இல்லை.

யாழ்ப்பாணப் புவியியல் தன்மையும் வன்னி நிலவரமும் வேறுவேறு. யாழ்ப்பாணத்திலும் கெரில்லாப் போராட்டத்துக்குரிய 'எலிப் பொந்து ஒழுங்கை அமைப்பு' இருந்தது.

இது இடம்விட்டு இடம் மாறும் கெரில்லாக் குழுக்களின் அசைவுக்கு உகந்ததாயிருந்தது. இருப்பினும் அது 'தாக்கிவிட்டு ஓடும்' யுத்த தந்திரத்துக்கே பொருத்தமாயிருந்தது.

நிலை கொண்டு தாக்க, அல்லது நீண்ட நேரத் தாக்கியழிக்கும் சமர்புரிய இப்பின் புலம் அதிகம் வசதியாக அமையவில்லை.

அதேவேளை இங்கு நில அமைப்பு அதிக விஸ்தீரண மற்றிருந்ததோடு கட்டடங்கள், சிறிய தோட்டக்காணிகள் அமைந்ததாகவே இருந்தது.

அதனால் பாரிய இராணுவ நகர்வுகளைத் தடுத்து நிறுத்தக்கூடியதாகவும், இராணுவத்தைப் பரந்த பரப்பிற்குச் சிதறச் செய்யக் கூடியதாகவும் இருக்கவில்லை.

இராணுவம் ஒன்று குவிந்து தாக்கும் போது பின்வாங்குவது ஒன்றே அங்கு புத்திசாலித்தனமான கெரில்லாத் தந்திரமாக இருந்தது.

பின்வாங்குவது எப்போதுமே தோல்வி என்பதன் அர்த்தமாகாது. பின்வாங்குவது தாக்குவதற்கே.

புலிகள் அதைத்தான் செய்தார்கள். யாழ்ப்பாணத்தில் பின்வாங்கி வன்னியில் தாக்குதலை நடத்தினார்கள்.

வன்னிப் புவியமைப்பு ஒரு கெரில்லா யுத்தத்துக்கு மட்டுமன்றி, ஒரு பாரம்பரிய யுத்த முறைக்கும், அதாவது 'கொன்வென்ஷனல் வோரி'ற்கும் பொருத்தமானதாக அமைந்திருந்தது.

நீண்ட பெரும் அடர் காடுகள் கெரில்லாக் குழுக்களுக்கு மட்டுமல்ல, பாரிய படையணிக்கும் வசதியான திரைமறைப்பாக விரிந்து கிடக்கின்றன.

பிரதேசம் விட்டுப் பிரதேசம், ஏன் பிராந்தியம் விட்டுப் பிராந்தியம் அணிகள் நகர்ந்து செல்லக்கூடிய மறைவுப்பாதையாகவும் விளங்குகின்றன.

புலிகள் தம் நிரந்தரச் செயற்பாட்டுக்கான களமாக யாழ்ப்பாணத்தை விடுத்து வன்னியைத் தேர்ந்தெடுத்தார்கள்.

இராணுவத்தினர் மேற்கொண்டிருந்த குறிக்கோள் வயப்பட்ட இராணுவ நகர்வு,

ஓர் அரசியல் நோக்கத்துக்கான இராணுவக் குறிக்கோளாகவே அமைந்தது.

யாழ்ப்பாணத் தீபகர்ப்பத்தைக் கைப்பற்றிய வெற்றிப் புளகாங்கிதம், அதனோடு இணைந்த இன்னோர் அரசியல் இலக்காக யாழ்ப்பாணத்துக்கான போக்குவரத்துப் பாதையை அமைப்பதான முஸ்தீபாகவே தொடர்ந்தது.

யுத்தத்தை, யுத்தத்தின் பரிமாணங்களுக்குத் தக்க வடிவமைக்காது, வேறுபட்ட அரசியல் இலக்குகளின் பால் இழுத்துச் செல்வதன் ஆபத்தை வன்னி யுத்தக்களம் புலப்படுத்துவதாயுள்ளது.

பாரிய இராணுவச் செயலாற்றலானது ஒரு நேர்கோட்டு யாத்திரையில் வீணாய் இறைக்கப் பட்டது.

முட்டுக்கட்டைகளைப் போட்டுக் கொண்டே புலிகள் வன்னிப் பெருநிலத்தில் தம்மை வளர்த்துக் கொண்டனர். புலிகள் பெருந்தாக்குதலை நிகழ்த்தக்கூடிய வாய்ப்புக்கும் சந்தர்ப்பத்திற்கும் காத்திருந்தார்கள்.

இப் பாதையமைக்கும் படையினரோ நீண்டு ஈய்ந்து நிற்கவேண்டிய நிலையில் இருந்தார்கள்.

☆☆☆

இம்முறை நடைபெற்ற வன்னி யுத்தமானது ஆட்டிலறியின் யுத்தம்! யுத்தத்தின் உத்திகள், பரிமாணங்கள் மாறிக்கொண்டே வருகின்றன.

படையணியின் வளர்ச்சி, ஆயுதங்களின் தரம், கள அமைப்பு, எதிரியின் நிலை, கால நிலை என்பவற்றோடு மாறுபடுகின்றன.

புலிகளால் இப்போது மேற்கொள்ளப்பட்ட யுத்தமுறை, இதுவரை நிகழ்த்தாதது. படையினர் எதிர்பார்க்காதது. இதன் மூலவிசை ஆட்டிலறி சுடுகலன். அதற்குத் துணையான பெருவாரியான மோட்டார் ஷெல் வீச்சுக்கள்.

இந்த யுத்தம் புலிகளின் மாவீரர் தினத்தை ஒட்டிய தம் பலத்தைக் காண்பிப்பதற்காக நிகழ்த்திய ஒரு தாக்குதல் போலத் தோன்றினாலும், இத் தாக்குதலுக்கான ஓர் உள்ளார்ந்த அவசியமும் புலிகளுக்கு இருந்தது.

வவுனியா-யாழ் பாதையை நோக்கிய படையினரின் நகர்வு ஒரு கட்டத்துடன் தேக்கமடைந்து நின்றுவிட்டது. இதனைத் தொடர்ந்து அவர்களால் புலிகளின் இதயப் பிரதேசத்துக்கு ஊடறுத்துச் செல்லமுனையும் முனைப்புக்களும் மேற்கொள்ளப்படத் தொடங்கிவிட்டன.

அவ்வாறு சிற்சில சந்தர்ப்பங்களில், புலிகள் கவனிக்காத, அல்லது அசமந்தமாக இருந்த வேளைகளில் புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த சில பிரதேசங்களை சடுதியான படை நகர்வுகளால் படையினர் தம்வசமாக்கியுமிருந்தனர்.

புலிகளின் பிரதேசங்களின் புறப்பகுதியிலிருந்து என்நேரமும் அவர்களுக்கு நெருடலைக் கொடுக்கும் வண்ணம் இராணுவத்தின் தொல்லை இருந்து கொண்டிருந்தது.

இத் தொல்லைகளையும் ஊடறுப்புகளையும் உதறித்தள்ளி தனது இயங்கு பரப்பை பெருப்பித்துக்கொள்ள வேண்டிய தேவை புலிகளுக்கு இருந்தது.

இம் மாவீரர் காலத் தாக்குதல் திட்டம் தன் புறப்பகுதிகளில் உறுத்தும் படை முகாம்களைத் தாக்கியழிப்பதாகவே இருந்தது.

இதற்காக வகுத்த புதிய யுத்த முறைதான், ஆட்டிலறியை மையமாக வைத்த ஷெல் மழைத் தாக்குதலுடன் முகாம்களை நோக்கிய ஆவேசப் பிரவேசம்.

ஆட்டிலறியானது நீண்டதூரத் தாக்குதலை மேற்கொள்ளக்கூடிய கனரக ஆயுதம்.



அதன் வீச்செல்லை 20 முதல் 30 கிலோமீட்டர் வரை செல்லும்.

இதனால் ஏவப்படும் ஷெல்கள் பாரிய அதிர்வையும் சேதத்தையும் விளைவிக்க வல்லன.

முல்லைத்தீவு இராணுவ முகாம் உட்பட வெவ்வேறு முகாம் தாக்குதல்களின்போது புலிகள் இவ்வாட்டிலெறி சுடுகலன்களையும் அதற்கான ஷெல்களையும் பெற்றிருந்தார்கள்.

அவர்கள் அவற்றை இப்போதுதான் முதன் முதலில் பயன்படுத்தியுள்ளார்கள்.

சிறிய சிறிய தாக்குதல்களில் அதைப் பயன் படுத்தி, அதுபற்றி படையினரை விழிப்படையச் செய்துவிடாமலிருந்துவிட்டு பாரிய தாக்குதலொன்றிலேயே இதைப் பயன்படுத்தியுள்ளார்கள்.

புலிகள் சடுதியான தாக்குதலொன்றை நிகழ்த்தி படையினரை மாற்று வழிபற்றிச் சிந்திக்கத் தெரியாது திணறடிக்கவே தருணம் பார்த்துக் காத்திருந்தார்கள்.

புலிகள் முதலில் குறிவைத்து ஒட்டிசுட்டான், நெடுங்கேணி ஆகிய இரு இராணுவ முகாம்களிலேயே தாக்குதல் மிக உக்கிரமாக நடத்தினார்கள்.

சடுதியான ஆட்டிலறி மற்றும் மழை போன்ற மோட்டார் ஷெல் வீச்சுக்களை நடத்தியபடி ஆவேசப் பிரவேசம் செய்த போதும் அதில் புலிகள் ஒரு பிரதான யுத்த நுட்பத்தைக் கையாண்டார்கள். அதாவது எதிரியின் பின் வாசலைத் திறந்துவிட்டுத் தாக்கும் யுத்த போர்த்தந்திரமே அது.

ஒரு பூனையானாலும் அதைப் பூட்டிய அறைக்குள் வைத்துத் தாக்கினால், தப்பிக்க வழியில்லாத கட்டத்தில் உயிராவேசத்துடன் தாக்குபவரின் முகத்தில் பாய்ந்து கீறும்.

ஒரு சிறு யன்னலைத் திறந்துவிட்டு காலால் சற்றுத் தரையை உதைத்தாலே பூனை அதனூடு பாய்ந்து ஓடிவிடும்.

போரிலும் எதிரி தப்பிக்க வழியில்லாத விடத்தில் மூர்க்காவேசத்துடன் எதிர்த்துத் தாக்குவான்.

அவன் தப்பிக்கும் வழியை நாம் திறந்துவிட்டால் அவனது எதிர்ப்புத் தன்மை மிக மிகக் குறைந்துவிடும்.

புலிகள் ஓட இடம் கொடுத்து நடத்திய தாக்குதல் அவர்களுக்கு வெற்றியளித்தது.

இம் முகாம்களிலிருந்து தப்பிச் சென்றவர்கள் அருகிலிருந்த மற்றைய முகாம்களிலும் கிலியைப் பரவச் செய்தனர்.

அவர்களும் ஓட முற்பட, புலிகளுக்கு அது எதிர்பாராத வாய்ப்பைக் கொடுத்தது.

சந்தர்ப்பத்தைச் சமயோசிதமாகப் பயன்படுத்தி புளியங்குளம் வரையிலான இராணுவ நிலைகளையெல்லாம் கலைத்தெறிந்தனர்.

இராணுவத்தினர் 19 மாதங்களில் மெல்ல மெல்ல நகர்ந்து பிடித்த இவ்விடங்களிலிருந்து புலிகள் மூன்றே மூன்று நாட்களில் விரட்டியடித்தார்கள்.

இராணுவத் தரப்பில் முக்கியமான பலஹீனம், புலிகள் எத்தகைய ஆயுதங்களையும் உத்திகளையும் பயன்படுத்துவார்களென்று முன்கூட்டியே கணிக்க முடியாமல் இருந்தமை.

புலிகளிடம் ஆட்லறி சுடுகலன்கள் இருப்பது அவர்களுக்கு ஏற்கனவே தெரியாததல்ல. இராணுவத்தினர் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எதையுமே மேற்கொள்ளவில்லை.

தாக்குதல் நிகழ்ந்தபோது இராணுவத்தினருக்கு சரியான வழிநடத்தல் இருக்கவில்லை.

பலமான பின் உதவி இருக்கவில்லை. போர்க்களத்தில் இறக்கப்பட்ட புதிய இராணுவ வீரர்கள் மிக இளம் வயதினராகவும் அதிக முன்னனுபவமில்லாதவர்களாகவும் இருந்திருக்கலாம்.

ஆயினும் அதேயிடத்தில் முடி வெடுத்து எதிரியின் தாக்குதல் உத்தியைச் சட்டெனப் புரிந்து கொண்டு மாற்று வழிகளைத் தீர்மானிக்கும் திறன் இத்தகைய ஆபத்தால் சூழப்பட்ட படை முகாம்களுக்கு இருக்க வேண்டியது அத்தியாவசியம்.

இத் தோல்வியை ஒத்துக் கொண்டுள்ள அரசாங்கம் யுத்தமென்பதில் வெற்றி தோல்வி ஏற்படுவது சகஜம் எனக் கூறுகிறது.

இராணுவத்தின் உள்ளே அரச விரோதிகள் சிலர் மேற்கொண்ட ஒரு சதி இத் தோல்விக்குக் காரணமாக அமைந்திருக்கலாமெனச் சந்தேகங்கள் ஏற்பட்டுள்ளதாக அரச தரப்பு கூறுகிறது.

அரசாங்கத்தால் செய்யப்படவேண்டியது யாதெனில், வன்னிப் போர்கள தோல்வியின் காரணங்களை அரசியல் கலப்பற்ற இராணுவ ஆய்வினால் ஆராய்ந்து கண்டுபிடிப்பதே.

வன்னிக்கள நிலையில் தோன்றியுள்ள புதிய பரிமாணமான இந்த ஆட்டிலறி யுத்தத்தை எப்படி முகம் கொடுப்பது என்பதே இனி இராணுவம் எதிர்நோக்கியாக வேண்டிய பாரிய கேள்வி.

இக் கேள்வியையே இராணுவம் உணர முன்னர் புலிகளின் நட வடிக்கை அடுத்தடுத்து சடுதியாக முன்னேறியது.

ஆட்டிலறி யுத்தத்தின் பெரும் அனுகூலத்தைக் கண்டுகொண்ட புலிகள் நிலைமை மாறுமுன்னரே அதன் அதிகூடிய பலன்களைப் பெற்றுவிட உடனடியாகத் திட்டமிட்டு காரியத்தில் இறங்கினர்.

வெற்றிப் புளகாங்கிதச் செயற்பாட்டின் மிதமிஞ்சிய ஒரு முயற்சியே, வவுனியாவைக் கைப் பற்றப்போவதாக அச்சுறுத்தியது.

வவுனியாவைத் தாக்கப்போவதாகவும் மக்களை வெளியேறும் படியும் புலிகளின் குரல் வானொலி மூலம் புலிகள் பணித்தனர்.

வவுனியாவைத் தாக்க முடியுமாயிருந்தாலும் அதனைக் கைப்பற்றிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர அப்போதைய நிலைமையில் புலிகளால் முடியாது.

அதற்கான படை நகர்வை வவுனியா நகருக்குள் மேற்கொள்ளக்கூடிய அளவுக்கு அவர்கள் தயாராக இருக்கவில்லை.

அப்படி ஒருசிறு குழு புகுந்து தாக்குதல் நிகழ்த்தினாலும் அது திடீர் தாக்குதலாக அமைந்து அத் தாக்குதலின் பின் பின்வாங்கிச் சென்றுவிடுவதாக மட்டுமே அமைய முடியும்.

நிலைமையை சாதகமாக்கிக்கொள்ள எத்தனித்தபோதும் இம்முயற்சி அதீத எதிர்பார்ப்பாகவே இருந்தது. பின்னர் யதார்த்தத்திலும் அது அவ்வாறே முடிந்தது.

புலம் பெயர்ந்த மக்களைத் திரும்பிச் செல்ல புலிகளே அனுமதி வழங்கினர்.

வவுனியாவுக்குள் நிகழ்த்தப்பட்ட ஒருசில மோட்டார் ஷெல் வீச்சும் எதையும் சாதிக்கவில்லை. ஓரிரு பொதுமக்கள் உயிர்ப்பலியுடன் முடிந்தது. அதற்குப் புலிகள் மன்னிப்புக் கோரியிருந்தனர்.

இது ஒரு உளவியல் போரைக் கிளப்பிவிட்டுள்ளது. தகுந்த ஆயத்தத்துடன் மீண்டும் எந்நேரத்திலும் வவுனியா தாக்குதலுக்குள்ளாகலாம் என்ற அச்சத்தை அடிமனதில் புதைத்து விட்டது.

சரியான தூரக் கணக்கீட்டுடன் தொலைவிலிருந்து விமானத் தளங்கள், இராணுவ முகாம்கள், முக்கிய கேந்திர மையங்கள் தாக்கப்படலாம் என்பதையும் இது எடுத்துரைப்பதாய் அமைந்துவிட்டது.

இதில் விளைந்த மற்றொரு அம்சம் யாதெனில், ஆட்டிலெறி மூலம் எல்லையோரச் சிங்களக் கிராமங்கள் தாக்கப்பட்டால் என்னாவது என்ற அச்சமே.

எல்லைக் கிராமங்களிலிருக்கும் சிங்கள மக்களே அகதிகளாகவேண்டி அரசுக்கு மற்றோர் அழுத்தம் தலைமிலேறும். படைகளை இவ் எல்லையோரங்களில் பாரிய அளவில் நிலைகொள்ளச் செய்வது அவசியமாகிவிடும். இராணுவத்தின் படைப்பலத்தை வேறோர் திசைக்குத் திருப்பும் உத்தியாக அமைந்துவிடும்.

சிங்களப் பிரதேசங்கள் புலிகளின் வசம் ஒரு முறையேனும் விழுமாயின் அது பாரிய உணர்வலைகளை சிங்கள மக்கள் மத்தியில் எழுப்பிவிட வழி செய்துவிடும்.

இதுவரை இவ் யுத்தத்தை ஓர் எதிர்ப்புப் போராட்டமாகக் கண்ட அவர்கள் அதை ஒரு படையெடுப்பாக உணரத் தலைப்படுவார்கள்.

இதே சூழ்நிலைக்குக் கட்டியம் கூறுவதாக இந்த ஓயாத அலை யுத்தப் பெருக்கெடுப்பில் ஏற்பட்ட மற்றொரு அதிமுக்கியமான விடயம்தான் மணலாறு மண்மீட்பு.

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு அடி கோலிய விடயங்களின் மிக முனைப்பான தாற்பரியம் மிக்க விடயமாக அமைந்திருந்தது தமிழ்ப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள்.

இது இரண்டு வகையானதாக நிகழ்த்தப்பட்டு வந்தது.

தமிழ்ப்பிரதேசங்களில் மேற்கொள்ளும் வலுக்கட்டாயமான சிங்களக் குடியேற்றங்களால் குடிசனம் பரம்பலின் விகிதாசாரத்தை மாற்றி, அப்பிரதேசத்துத் தமிழர்களின் அரசியற் பலம், வாக்குப்பலம் ஆகியவற்றை நொய்தாக்குவது.

பாதுகாப்பின்மை, அச்ச உணர்வு, பதற்றம் என்பவற்றால் அப்பகுதி வாழ் தமிழர்களைத் தாமாகவே புறந்தள்ளிச் செல்ல வைப்பது, தொடர்ச்சியான பிரதேசமாக இருக்கும் வடக்கு கிழக்கு தமிழ்ப் பிரதேசங்களில் நொய்தான, மெல்லிய கழுத்துப்போல் உள்ள இடங்களில் சிங்களக் குடியேற்றங்களைச் செய்து அத் தொடர்ச்சியைத் துண்டறுப்பது.

புவியியல் ரீதியாக இரு பகுதிகளாகத் தனிமைப்படுத்துவடன் ஒருமிக்க சமூகம் என்ற உணர்வு நிலையை உறுதியற்றதாக்குவதும் இதன் நோக்கமாக இருந்தது.

இராணுவ முகாம்கள் அமைந்துள்ள பகுதிகளைப் பாதுகாப்பானதாக்கிக் கொள்ளவும் ஆங்காங்கு குடியேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன.

தொடர்ச்சியான தமிழ் பிரதேசத்தைத் துண்டறுக்கும் வகையில் 1984 டிசம்பர் 24ம் திகதி ஜே.ஆர். அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட ஒரு திட்டமிட்ட குடியேற்றமே மணலாற்றுக் குடியேற்றம்.

இக் குடியேற்றத்தால் 'மணலாறு' என்ற தமிழ்ப்பிரதேசம் 'வெலிஓயா' என்ற சிங்களப் பிரதேசமாக மாற்றப்பட்டது.

இது தமிழ் மக்களின் இதயத்தில் அறைந்த ஓர் ஆணியாக நிலையூன்றி நின்று வந்தது.

தமிழ்த் தரப்பின் எத்தனையோவித எதிர்ப்பும், முறையீடும், கூக்குரலும் இத் திட்டத்தை ஒன்றுமே செய்ய முடியவில்லை.

இப்போது நிகழ்ந்த வன்னி யுத்தம் அதிசயிக்கத்தக்க விதத்தில் இச் சூழலைத் தலைகீழாக மாற்றிவிட்டது.

வெலியோயாக் குடியேற்றம் தானகவே கலைந்துபோனது. உயிர்ப் பலியுடனான விரட்டியடிப்பால் ஏற்படாது, எவ்வித இரத்தமும் சிந்தாது ஏற்பட்டதே இதில் காணக்கூடிய மற்றொரு தாற்பரியம்.

இப் பகுதிகளைக் கைப்பற்ற வேண்டும் என்ற கொள்கை புலிகளிடமிருந்தது.

அதைத் தாக்க வேண்டிய அவசியமன்றி, தனது யுத்தச் சமபலத்தின் உயர் நிலையை உணர்த்துவதால் மட்டுமே தானாகப் பின்வாங்க வைத்து இப் பகுதியை அவர்கள் மீட்டுக் கொண்டார்கள்.

அதைத் தக்கவைக்க முடியுமா என்ற கேள்விக்கு குறி இன்னும் இருந்தாலும் மறுபுறம், சிங்களக் குடியேற்ற வாசிகள், மறுபடி அங்குவரத் துணிவார்களா என்ற கேள்வியும் மறுபுறத்தில் இருக்கவே செய்கிறது.

இப்போர்த்திட்டத்தில் வவுனியாத் தாக்குதல் திட்டத்தைத் தற்காலிகமாக மாற்றிக் கொண்ட புலிகள் மேற்கொண்ட அடுத்த நகர்வு மன்னார் தாக்குதல்.

சில மாதங்களின்முன் இராணுவம் திடீர் நகர்வொன்றை மேற்கொண்டு மன்னாரின் கட்டுப்பாடற்ற பகுதிகளை ஊடறுத்து, விடத்தல் தீவைக் கைப்பற்றி மடுத் தேவாலயத்தையும் தனது வலயத்தின் கீழ் கொணர்ந்தது.

இதன்போது புலிகளின் அதிகளவு எதிர்ப்பு இருக்க வில்லை. ஆனால் இப்போது இராணுவம் ஊடறுத்து நின்ற பிரதேசங்களிலிருந்து அவர்களை விரட்டி மடுத் தேவாலயத்தை மீண்டும் கட்டுப்பாட்டுக்குள் புலிகள் கொணர்ந்தனர்.

அதுவல்ல இங்கு பிரதான விடயம். அங்குள்ள பாரிய முகாமான தள்ளாடி முகாமைச் சுற்றிவளைத்து புலிகள் தொடுத்துள்ள தாக்குதலே இப்போது அதிக இக்கட்டை ஏற்படுத்தியுள்ளது.

தள்ளாடி முகாமின் அமைவிடம் மன்னார் தீவிலிருந்து ஒருமைல் தொலைவில் பெரு நிலப்பரப்பில் அமைந்துள்ளது.

-நரன்-

அதற்குள்ளே சாதகமான அம்சம் அது கண்ணுக்கெட்டிய தொலைவுவரை ஒரு வெட்ட வெளியில், பாரிய முகாமாக அமைந்திருப்பதே.

எதிரியின் நகர்வை அவதானிக்க முடியும். எதிரி உட்புகுவது கடினம். பாதகமான அம்சம் அதற்கு பின்பலம் வழங்கக்கூடிய பெரும் முகாம்கள் பின்னணியில் இல்லை.

அது ஒருவகையில் மற்றோர் பலத்தை அம்முகாமுக்கு வழங்கியுள்ளதெனவும் சொல்லலாம். அதாவது தப்பிச் செல்ல வழியில்லாத உணர்வில் இறுதி மூச்சுவரையான எதிர்த் தாக்குதலை நடத்தும் உணர்வை அது கொண்டிருக்கிறது.

இதனாலேயே நெருங்க முடியாதிருந்த இம்முகாம் இப்போது புதிய சிக்கலை எதிர்நோக்கியுள்ளது.

புலிகளின் தொலைவிலிருந்து தாக்கும் ஆட்டிலெறித் தாக்குதலுக்கு இலக்காகி வருகிறது.

இதனால் மட்டுமே அதனை வீழ்த்திவிட முடியாதென்றாலும் முடக்கி வைக்க முடியும்.

புலிகள் அதன் சுற்றுவட்டாரங்களில் தாராளமாக உலவ வழிவிடும்.

அதனால் அம் முகாம் இருந்தும் இல்லாதிருப்பது போன்ற நிலைக்குத் தள்ளும்.

யுத்த தந்திரத்தில் பலவகை அம்சங்கள் உள்ளன. எவ்வித நிலைமையிலும் வெற்றி என்பது கைப்பற்றல் மட்டுமல்ல, அனுகூலங்களை ஏற்படுத்திக்கொள்வதும் வெற்றியின் அம்சமே.

வன்னிக் களத்தில் இந்தப் புதிய பரிமாணம் தொடுத்துள்ள பாரிய கேள்விகளை இனி எப்படி அரச தரப்பு யுத்த தந்திரங்கள் வெற்றிகொள்ளப்போகின்றன என்பதை காத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

இந்த யுத்த களச் சமநிலை மாற்றம் இப்போது இந்நாடு எதிர்கொள்ளும் தேர்தல் களத்திலும் பாதிப்பை ஏற்படுத்தி விடக் கூடும்.

அது இனி இங்கு அரங்கேறப்போகும் அடுத்த நகர்வுகளிலும் தங்கியுள்ளது. □



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

~ஸ்பெஷல் ரிப்போர்ட்~

சிவா

# அற்புதனின் கொலையும் அதன்பின் எழுந்த ஊகங்களும்

முரசின் பிரதம ஆசிரியர் அற்புதனின் கொலை தொடர்பான சூத்திரதாரிகள் இன்னமும் இனங் காணப்படவில்லை. ஆனாலும் இது தொடர்பான ஊகங்கள் மட்டுமே ஊடகங்களினாலும், நோக்கர்களினாலும் தத்தமது பார்வைகளில் வெளியிடப்பட்டிருக்கின்றன. இந்த ஊகங்களினால் மட்டும் கொலைக்கான சூத்திரதாரிகளை இனங் கண்டுவிட முடியுமா?.. எழுந்தமானமாகச் செய்யப்பட்ட கொலையென்றில்லாமல் நன்கு திட்டமிட்டே செய்யப்பட்ட கொலையென்பதால் ஊகங்களின் பங்கு இதில் எத்தகையது என்பதும் கருத்தில் கொள்ளப்படவேண்டும்.

நாம் பல தரப்புகளை சந்தேகிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

ஆனால் முரசு பொறுப்பற்ற முறையில் யார்மீதும் பழி சுமத்தாது. இந்த விடயத்தை அற்புதன் போல் துல்லியமாக ஆராய முடியாமல்போனால் வாசகர்கள் எம்மீது வருத்தப்பட்டுப் பிரயோசனமில்லை. அற்புதனை இல்லாமல் செய்தவர்கள்மீதே வருத்தப்பட வேண்டும்.

தமிழ் பேசும் மக்களுக்கான பலம் என்பது நலிந்து போகும்படியாக எதையும் எழுத முரசுக்குச் சம்மதமில்லை. இந்த விருப்பின் அடிப்படையிலிருந்துதான் புலிகள் மீதான முரசின் பார்வையும் இருக்கின்றது. காலத்தின் தேவையறிந்து முரசு எடுத்திருக்கும் இந்த நிலைப்பாட்டினால் முரசுமீது வசைமாரிகளும் பொழியப்பட்டன. ஆனாலும் அற்புதன் அஞ்சாது தன் கருத்தினை எழுதிக்கொண்டேயிருந்தவர். இது பரந்துபட்ட மக்கள் மத்தியில் முரசுக்கு ஒரு நம்பகத்தன்மையை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த நம்பிக்கைதான் இங்கு பிரச்சனைக்குரியதாகவும் உள்ளது.

விடுதலைப் புலிகளின் தவறுகள்கூட சில இடங்களில் முரசினால் சுட்டிக்காட்டப்பட்டே வருகின்றது. அத்தவறுகளை ஏனைய பத்திரிகைகள் சுட்டிக்காட்டுவதை விட முரசு சுட்டிக் காட்டும்போதுதான் வாசகர்களும் நம்புகிறார்கள். இவ்விடயம் புலிகளுக்கு முரசு மீதான அதிருப்தியை ஏற்படுத்தியிருக்கலாம்.

முரசில் இடம்பெறும் புலிகள் பற்றிய விமர்சனங்கள் அனாவசியமானவைதானா என்ற தீர்மானத்தை எடுக்க வேண்டியது வாசகர்கள்தான். புலிகளுக்குச் சாதகமான அம்சங்களே முரசில் அதிகம். அவர்களுக்கு ஒரு இலவசப்பிரச்சாரம் என்ற ஒரு கதையும் வெளியில் உண்டு. அந்த வகையில் புலிகள் செய்திருக்கமாட்டார்கள் என்று அடித்துக் கூறுவோரும் உண்டு. ஆனால் முரசு மீதான நம்பகத்தன்மையென்பது எதிர்காலம் குறித்த ஓர் அச்சத்தைப் புலிகளுக்கு ஏற்படுத்தியிருக்குமோ என்ற கேள்வியும் உண்டு. அந்த வகையில் காற்றுள்ள போதே புலிகள் தூற்ற நினைத்திருக்கலாம் என்ற ஊகங்களும் உலாவுகின்றன. ஆனால் வாசகர்களின் நம்பகத்தன்மையை உடைத்து விடக்கூடாது என்பதிலேயே அற்புதன் கவனமாயிருந்தவர்.

அற்புதன் வேறு யாருக்கும் இறுதியில் பயன்படுகிறாரோ இல்லையோ, தமக்கும் பயன்படமாட்டான் என்றுதான் புலிகள் நினைத்து இதைச் செய்திருக்கலாம் என்றும் சில கருத்துக்கள் உள்ளன. கொலை நடந்த சூழல், பயன்படுத்தப்பட்ட ஆயுதம் என்பவற்றை வைத்துப்பார்த்தால் இது புலிகளின் வேலையாக இருக்க முடியாது. ஆனால் சோதனைச் சாவடிகளையும் தாண்டி காற்றுப்புக முடியாத இடத்திற்குள்ளும் புகுந்து விளையாட வல்லவர்கள் புலிகள்.

அரசபடைகளின் அத்துமீறல்களையும், மனித உரிமை மீறல் சம்பவங்களையும் துணிந்து வெளியிட்டு வருவது முரசு மட்டுந்தான். தீர்வுப் பொதிக்கு எதிரான பிரச்சாரத்தில் முரசு ஈடுபட்டதாக அரசுக்கு தமிழ்க் கட்சிகள் புகார் கொடுத்ததற்கான ஆதாரங்களும் உள்ளன. கொழும்பில் இருந்து கொண்டு தம்மையே காரசாரமாக விமர்சிக்கும் முரசுமீது அரசுக்கு அதிகமான அதிருப்தியும், ஆத்திரமும்தான். அரசு செய்யாமல் விடுவதற்கான காரணங்கள் பாரியளவில் இல்லையென்றாலும் இரண்டு முக்கிய காரணங்களைப் பார்க்கலாம்.

1. பத்திரிகைச் சுதந்திரத்திற்கு தமது ஆட்சியில் அச்சுறுத்தல் இல்லை என்பதை வெளியுலகுக்குக் காட்ட முற்படுவது.

2. அற்புதன் ஈ.பி.டி.பி.யினரோடு சம்பந்தமுடையவரென்பதால் ஈ.பி.டி.பி.யைத் தற்போதைக்குப் பகைக்க விரும்பாமை. அதுவும் தேர்தல் நெருங்கும் காலம் என்பதால்.

இதைவிட செய்தித் தணிக்கையை அமுல் செய்து தன் நோக்கங்களை அரசு வெளிப்படையாகவே நிறைவேற்றி வருகின்றது. இதன் மூலம் முரசில் வெளியாகும் செய்திகளின் தாக்கத்தையும் ஓரளவுக்காவது தணிக்கவும் முடிகிறது. மற்றவர்களை மாட்டிவிட்டுத் தப்பிவிடும் வேலையும் நீண்ட நாட்களுக்கு நிலைக்காது என்று அரசுக்குத் தெரியும். ஆனாலும் அரசு இக்கொலையைச் செய்வதற்கான சாத்தியங்கள் பற்றியும் சிந்திக்க வேண்டியே உள்ளது.

அற்புதன் தமிழ்க்கட்சிகளுக்கு பெரும் தலையிடியாகவே இருந்தவர். அமைச்சில் ஆலோசகர் பதவி ஏற்றது முதற்கொண்டு வரி வசூலித்தல், ஆட்கடத்தல், கப்பம் வாங்குதல், படையினரோடு இணைந்து செயற்படல் ஈறாக உட்கட்சிப்படுகொலைகள் வரைக்கும் நார் நாராக கிழித்துப்போட்டவர். அதைவிட தங்களது விளம்பர அரசியலுக்கு முரசு முக்கியத்துவம் தரவில்லையென்பதும் சீற்றம்.

இரகசியங்களைப் பாதுகாப்பதில் மிகவும் பலவீனமான இவர்களிடமிருந்தே பல தகவல்கள் கசிந்திருக்கின்றன. தேவை கருதிச் சில வற்றைமட்டும் வாசகர்களுக்கு தரலாம். ஐரோப்பிய நாடொன்றில் தமிழ்க் கட்சியொன்றைச் சேர்ந்த ஒருவர் தமது ஆள் என்று நம்பி இன்னொருவரிடம் இப்படிக் கூறியுள்ளார். "ஒருவருக்கும் சொல்ல வேண்டாம் ராசிக் குறுப்போடு எல்லாம் கதைச்சிருக்கு. கிட்டடியிலை தினமுரசுக்கு நடக்கும்!" இத்தகவல் உடனடியாகவே சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது.

கனடாவில் இதே கட்சியைச் சேர்ந்த இன்னொருவர் "எங்கடை ஆட்கள் ரமேஸை (அற்புதன்) போடப்போறாங்கள்!" என்று அற்புதனோடு தொடர்புடைய ஒருவருக்கு தகவல் கொடுத்துமிருக்கிறார். 1986இல் ஈ.பி.ஆர்.எல்.எ∴ப். தலைமையின் தவறான போக்குகளுக்கெதிராக கருத்து வைத்து முரண்பட்டுக் கொண்டிருந்தவர் அற்புதன். இதன் காரணமாக அவர் தலைமையால் கடத்திச் செல்லப்பட்டது அறிந்த விடயந்தான். அப்போது அற்புதனை மண்டையில் போடுமாறு உத்தரவிட்டவர் தற்போதைய EPRLF செயலாளர் நாயகம் சுரேஸ் பிரேமச்சந்திரன்தான். கட்சி உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் வீதிக்கிறங்கிப் போராட்டம் நடத்தியதின் விளைவாக அற்புதன் விடுதலை செய்யப்பட்டார்.

சுரேஸ் விடுகின்ற அறிக்கைகளில் சில நல்லவற்றை அற்புதன், நேர்மையான பத்திரிகையாளன் என்ற வகையில் பாராட்டி எழுதியிருக்கிறார். மாறாக அற்புதன்மீது சுரேசுக்கிருந்தது இறுதிவரை தீராத கோபம்தான் என்பதை வேறு சில ஆதாரங்களை வைத்து நம்பக்கூடியதாகவே உள்ளது.

மாணிக்கதாசன் உயிருடன் இருந்தபோது "அற்புதனை எப்படியாவது போட்டே தீருவேன்!" என்றுதான் கூறியிருக்கிறார். ஆனால் 'எல்லாரைப்பற்றியும்தானே அவன் எழுதுகிறான்' என்று தனக்குள் திருப்திப்பட்டுக் கொண்ட சம்பவங்களும் உண்டு. அதைவிட தாசன் அற்புதனோடு தொலைபேசிமூலம் காரசாரமான வாதங்களிலும் ஈடுபட்டிருக்கிறார். ஐரோப்பிய நாடுகள் சிலவற்றில் சிலகாலங்கள் முரசு புலிகளால் தடை செய்யப்பட்டிருந்தது தெரிந்த விடயந்தான். அப்போது புளட் இயக்கத்தோடு சம்பந்தப்பட்டவர்கள் முரசை மீண்டும் விற்பனை செய்வதற்கு துணையாகவே இருந்திருக்கிறார்கள். ஆனால் அதே அவர்கள்தான் பிறிதொரு சந்தர்ப்பத்தில் பங்குக்குத் தாமும் முரசின் விற்பனையைத் தடைசெய்யவும் முற்பட்டிருக்கிறார்கள்.

ரெலோ இயக்கத்தினரின் தவறுகள் விமர்சிக்கப்பட்டபோதும் சில கடைகளில் புகுந்து முரசை அள்ளிக்கொண்டு போக முற்பட்டிருக்கின்றனர். அண்மைக் காலங்களில் ரெலோவினர் முரசினால் காரசாரமாகவே விமர்சிக்கப்பட்டு வந்தனர். மொத்தத்தில் இந்தத் தமிழ்க் கட்சிகளுக்கு முரசுமீது ஆத்திரமும், வெறுப்பும் அதிகம்.

முரசுமீது பாய்ச்சல் நடத்தினால் சொற்பமாய் உள்ள ஜனநாயகத்தையும் தம்மால் உச்சரிக்கமுடியாது போய்விடும் என்ற அச்சம் ஒரு புறம். முரசின் பின்பலம் சம்பந்தமான அச்சம் இன்னொரு புறமுமாய் இருந்திருக்கிறார்கள். ஆனால் அண்மையில் நடந்த இயக்க மோதல்களில் ஒரு இயக்கம் இன்னோர் இயக்க முக்கியஸ்த்தர் ஒருவரைக் கொலை செய்வதற்காக பாதாள உலகக் கோஷ்டியினரைக் கூலிக்கமர்த்தியிருந்ததாகத் தகவல்கள் கசிந்திருக்கின்றன. ஆகவே இவர்கள் அற்புதன் கொலையிலும் இந்த வழிமுறையைக் கையாண்டு தாம் தப்பிவிடும் திட்டத்தை தீட்டியிருக்கலாம் என்ற ஊகமும் உண்டு.

இவர்கள் பல பத்திரிகையாளர்கள், புத்திஜீவிகளைக் கொலை செய்தவர்கள் என்ற வகையில் அந்தப் பழக்க தோஷங்கள் இன்னமும் தொடர்ந்திருக்கலாம். அற்புதனின் மரணத்தின் பின்பு தமிழ்க்கட்சி உறுப்பினர்கள் பலர் தமக்குள் பேசிக்கொண்ட விடயங்களிலிருந்து இந்த மரணத்தில் அவர்கள் திருப்தியடைந்ததையே காணமுடிகிறது. அரசியல் தொடரில் தமக்கு முக்கியத்துவம் கொடுத்து எழுதப்படவில்லை என்ற குமுறல் கட்சி ரீதியாகவும், தனிநபர் ரீதியாகவும் இருந்து வருகின்றன. அதைவிட அற்புதனைப்போல் அனுபவங்களை மீள நினைத்து தங்களால் எழுத முடியவில்லையே என்ற காழ்ப்புணர்ச்சியும் பலருக்கு. மொத்தத்தில் இந்த மரணத்தில் உள்ளூரச் சந்தோசமடைந்திருப்பவர்கள் தமிழ்க்கட்சிகள்தான்.


அற்புதனுக்கும் ஈ.பி.டி.பி. தலைமைக்கு மிடையிலான புரிந்துணர்வுதான் ஒரு நடுநிலைப் பத்திரிகையின் தேவைக்கான தாற்பரியங்களை உணர்த்தி வருகிறது. ஆனால் ஈ.பி.டி.பி.யின் ஊதுகுழலாக மாறி எந்தச் செய்திகளையும் முரசு இதுவரை வெளியிட்டது கிடையாது. மாறாக ஈ.பி.டி.பி.யையும் முரசு விமர்சித்தே வருகிறது. ஆனால் ஏனைய விடயங்களில், குறிப்பாக அவசரகாலச் சட்டத்திற்கு ஆதரவாக வாக்களிப்பு தொடர்பாக அரசை காரசாரமாகவே விமர்சித்து வருகிறது. இதனால் ஈ.பி.டி.பி.யினருக்கு முரசு மீது அதிருப்தி ஏற்பட்டிருக்கலாம் என்ற ஊகங்களையே சில ஊடகங்களும் வெளியிட்டிருக்கின்றன.

அவசரகாலச் சட்ட ஆதரவு விடயத்தில் கட்சிக்குள் முரண்பாடு இருந்ததன் உண்மையை ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவே பகிரங்கமாகக் கூறியிருக்கிறார். ஆனால் கொலை செய்யத் தூண்டும் அளவுக்கு இந்த முரண்பாடு பாரிய ஒன்றாக இருந்ததா?.. இது ஆராயப்படவேண்டும்.

"ஒரு பின்பலம் இல்லாமல் இது போன்ற பத்திரிகைகளை வெளியிட முடியாது" என்று அற்புதன் அடிக்கடி கூறுவதும் உண்டு. அந்தப் பின்பலம் ஈ.பி.டி.பி.யாகவே இருந்து வருகிறது. முரசுக்கு மட்டுமல்ல கொழும்பிலிருந்து வெளியாகும் வேறு சில பத்திரிகைகளுக்கும் ஏதோ ஒருவகையில் ஈ.பி.டி.பி. பின்பலமாகவே இருந்து வருகிறது. ஆனால் தமது விமர்சனங்களில் இவர்கள் ஈ.பி.டி.பி.யையும் விட்டுவைப்பதில்லல.

நம்பகத் தன்மையிலும், விற்பனையிலும் முரசை வெல்ல முடியாமல் எல்லாப் பத்திரிகைகளுந்தான் திண்டாடுகின்றன. உள்நாட்டில் மட்டுமல்ல. வெளிநாடுகளிலும் முரசுதான் முன்னணியில். ஐரோப்பாவிலிருந்து வெளிவரும் பத்திரிகையொன்று முரசின் பக்கமொன்றை மறுபிரசுரம் செய்வதற்கான அனுமதியைப்பெற்று, பின்பு அந்த அனுமதி மறுக்கப்பட்டது. அதனால் அப்பத்திரிகை முரசு மீது எப்போதுமே பாய்ச்சல்தான். அற்புதனின் மறைவுக்குப்பின்பும் அவர்களது ஊடகங்கள் தேவையற்ற விமர்சனங்களையே வெளியிட்டுத் தள்ளிவருகின்றன. அதே போல் இங்குள்ள சில பத்திரிகைகளும் ஒரு மோசமான அரசியல்வாதிக்கு இருக்கக்கூடிய வக்கிர சிந்தனைகளையே வெளியிட்டு, அற்புதனின் மரணத்தில் திருப்தியடைந்திருக்கின்றன. இனிப் போட்டிக்கு முரசு இருக்காது என்ற நினைப்போ தெரியாது.

அண்மையில் அரச தரப்பினர் தமிழ்ப் பத்திரிகையாளர்களையும் அழைத்துப் பேசியிருக்கிறார்கள். புலிகளுக்குச் சார்பான கருத்துக்கள் ஏன் என்று வினாவப்பட்டது. "தினமுரசுதான் அப்படி எழுதுகிறது. அதனால் ஒன்றும் செய்ய முடியாமல் நாமும் போட்டிக்கு எழுதவேண்டி வருகிறது" என்று முரசைக் காட்டிக் கொடுத்துவிட்டு வந்திருக்கிறார் மூத்த பத்திரிகையாளர். முரசு அதில் கலந்து கொண்டிருக்கவில்லை.



தமிழ்ப் பத்திரிகைகள் ஏதோ ஒரு வகையில் முரசைப்பின்பற்றியே எழுதவிரும்புகின்றன. அதைவிட விளம்பரங்களுக்கு இடம் கொடுத்துப் பார்த்தார்கள். விஷேட விலைக் கழிவில் எங்கள் பத்திரிகை விற்கப்பட்டு வருகிறது என்று விளம்பரம் போட்டு கூவியும் அழைத்தார்கள். இருந்தும் புத்தி ஜீவிகள்கூட வாங்குவதாக இல்லை. முரசின் தனித்துவத் தன்மையை உடைத்துவிடும் நோக்கில் அரசியல் முத்திரையும் குத்திப் பிரச்சாரம் செய்து பார்த்தார்கள். எந்தவகையிலும் முரசை வீழ்த்திவிட முடியவில்லை. இறுதியாக சிலர் அற்புதனின் மறைவுக்குப் பின்பு கற்பனையும், கைச்சரக்கும்தான் அற்புதனிடம் இருந்தது என்று கொச்சைப்படுத்தியும் எழுதினார்கள்.

சோக்கிரட்டீஸ் பாணியில் சொன்னால், "கற்பனையும் கைச்சரக்கும் அற்புதனுக்கு மட்டும் சொந்தமானதில்லையே. முடிந்தால் அவர்களும் முயன்று பார்க்கலாமே. பாவம் எழுதித் தோற்றவர்கள். இப்படித்தான் சொல்ல முடியும்.

அற்புதன் அரசியலோடு சம்பந்தப்பட்டவராக இருந்தும் இறுதியில் பத்திரிகைத் துறைக்குள்ளேயும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். ஆனால் சிலர் பத்திரிகைத் துறையோடு சம்பந்தப்பட்டவர்களாக இருந்தும் அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுக்குள்ளேயே தங்களை நுழைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அற்புதனின் கொலை தொடர்பான அவர்களது கருத்துக்களில் காண முடிகிறது.

எமது அரசியல் வரலாற்றில் நடந்த படுகொலைகள் ஆரம்பங்களில் மர்மமாகவே இருந்திருந்தாலும் காலப்போக்கில் அதன் சூத்திரதாரிகள் யாரென்பதை இனங் காணக் கூடியதாகவே இருந்து வருகின்றது. அந்த வகையில் அற்புதனின் கொலைக்கான சூத்திரதாரிகளையும் வரலாறு இனங்காட்டியே தீரும். எழுத்தாளர்கள் மத்தியில் ஒரு நேர்மையான அரசியல்வாதியாகவும், அரசியல்வாதிகள் மத்தியில் ஒரு நேர்மையான எழுத்தாளனாகவும் வாழ்ந்த அற்புதன் எழுதுவதை, சிந்திப்பதை நிறுத்திவிட்டார். அவரது எழுத்துக்களும் சிந்தனைகளும் என்றும் வாழும். முரசுக்கு மரணமில்லை.

# மறுபிறவி

**ராஜீவ் கொலை வழக்கில் தூக்குத் தண்டனை பெற்று, மேன் முறையீட்டில் விடுதலையானவர் புகைப்படப் பிடிப்பாளர் சுபா சுந்தரம். ராஜீவ் கொலை வழக்கு தொடர்பான புதிய தகவல்கள், விசாரணை நடந்த முறைகள் பற்றி அவர் கூறும் தகவல்கள் புதியவை. கண்டிப்பாக நாம் அறிந்து கொள்ள வேண்டியவை.**

மல்லிகையில் சிறை வைக்கப்பட்டேன். நான்கு சுவர்களுக்கிடையே எனது உலகம் முடக்கப்பட்டது. 3ந் திகதியன்று டி.ஐ.ஜி. ரமணி என்னை விசாரணைக்காக அழைத்தார். "உங்களுக்குத் தெரிந்ததை மறைக்காமல் கூறுங்கள்.." என்றார். அவரது குரலில் கடுமை கூடியிருந்தது. "எனக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை," என்பதை தெரிவித்தேன். "ம்..." என்றபடி அன்றைய விசாரணையை முடித்துக்கொண்டார்.

நான் சிறை வைக்கப்பட்டிருந்த மல்லிகையில் பாதுகாப்பு ஏற்பாடுகள் கடுமையாக்கப்பட்டிருந்தன. ஊரடங்கு உத்தரவு போட்டது போல் அந்தப் பகுதியே நடமாட்டம் இல்லாத பகுதியாக இருந்தது. மல்லிகையின் வாசலில் மணல் மூட்டைகளை அடுக்கி, அங்கே ஏ.கே.47 துப்பாக்கியுடன் காவல் போடப்பட்டிருந்தது. உள்ளேயும் காவலுக்கு குறைவில்லை. நான் சிறைவைக்கப்பட்டிருந்த அறையில் என்னுடன் சேர்த்து 5 பேர் அடைக்கப்பட்டிருந்தனர். ஒவ்வொருவருக்கும் ஒரு சி.பி.ஐ. பணியாளர் ம∴ப்டி (சிவில்) உடையில் காவலுக்குப் போடப்பட்டிருந்தார். இதுதவிர டி.எஸ்.பி. பொலிசாரும் அவ்வப்போது வந்து பார்வையிட்டு செல்வார்கள். எங்களுடைய ஒவ்வொரு அசைவும் கண்காணிக்கப்பட்டன.

நான் சிறைவைக்கப்பட்ட சில நாட்களில் 70 வயது பெரியவர் ஒருவர் கைது செய்யப்பட்டு சிறைக்குக் கொண்டுவரப்பட்டார். அவர்தான் கனகசபாபதி, ஈழத்துக்காரர், அவர் கைகளில் எப்போதும் விலங்கு பூட்டப்பட்டே இருந்தது. சாப்பிடும்போது மட்டும் விலங்கு விடுவிக்கப்படும். ஒருநாள் காலையில், கனகசபாபதி தனது கையில் பூட்டியிருந்த விலங்கின் ஒரு பக்க விளிம்பினால் சுவரில் ஏதோ அழுத்தமாக எழுதிக் கொண்டிருந்தார். பாதுகாப்பு காவலர் வேகமாக ஓடிப் போய் அவர் என்ன எழுதுகிறார் என்று பார்த்தார்.

'சாகும்வரை உண்ணாவிரதம்' என்று அழுத்தம் திருத்தமாக எழுதிக்கொண்டிருந்தார் கனகசபாபதி. பதறிப்போன காவலர், "நீங்கள் இப்படிச் செய்தால்... என்னை வேலையிலிருந்து தூக்கிவிடுவார்கள். எதுவாக இருந்தாலும் சி.பி.ஐ. அதிகாரிகளிடம் சொல்லுங்கள்" என்று கெஞ்சாத குறையாகச் சொன்னார். அதன்பின் நடந்த விசாரணையில்தான் கனக சபாபதியின் முடிவுக்குக் காரணம் என்ன என்பது தெரிந்தது. கைவிலங்குகள் பூட்டப்பட்டே இருந்ததால் நான்கு நாட்களாக அவர் குளிக்கவுமில்லை; உடை மாற்றவும் முடியவில்லை. இந்தக் கொடுமைக்கு முடிவு கட்ட வேண்டும் என்பதற்காகத்தான் அவர் உண்ணாவிரத முடிவுக்கு வந்திருக்கிறார். அடிப்படை உரிமைகளையும், அத்தியாவசிய விஷயங்களையும்கூட பெற முடியாத இடமாக இருந்தது அந்த 'ராட்சஸ மல்லிகை!'

ஒருநாள் சிறைவைக்கப்பட்டிருந்த அறையிலிருந்து என்னை அழைத்துக்கொண்டு மேலே உள்ள ஒரு அறைக்குச் சென்றனர் விசாரணை அதிகாரிகள். அந்த அறைக்குள் நுழைந்ததுமே இனம்புரியாத நெருக்கடிக்குத் தள்ளப்பட்டது இதயம்.

அங்கே இருந்த ஒரு நாற்காலியில் உட்கார வைக்கப்பட்டேன். நாற்காலியுடன் கைகள் பிணைக்கப்பட்டன. உடலில் ஒயர்களைப் பொருத்தி, அவற்றை அருகிலிருந்த




ஒரு மெஷினுடன் இணைத்தனர். ஸ்விட்ச் 'ஆன்' செய்யப்பட்டது. விசாரணை அதிகாரி என் அருகே வந்தார். "என்ன நடந்தது, உங்களுக்கு என்ன தெரியும்னு உண்மையைச் சொல்லிடுங்க. பொய் சொன்னால் இந்த மெஷன் கண்டுபிடித்துவிடும்."

கேள்விகள் கேட்டுகொண்டே இருந்தார்கள், எனக்கு தெரிந்தவற்றை மறைக்காமல் சொன்னேன். பதில்களை சொல்லச் சொல்ல அந்த மெஷினில் கிராபிக் (GRAPHIC) கோடுகள் ஓடத்தொடங்கின. பொய் சொல்லும்போது நம்மையுமறியாமல் இதயத்துடிப்பு எகிறும். அதனால் கிராபிக் கோடுகளும் ஏறி இறங்கும். அந்த அளவினை கணக்கில் கொண்டு எந்தெந்தக் கேள்விக்கு பொய்யான பதில்கள் சொல்லப்பட்டிருக்கின்றன என்பதை அதிகாரிகள் கண்டு பிடித்துவிடுவார்கள். இதுதான் பொய் கண்டுபிடிக்கும் மெஷினின் செயல்பாடு. விசாரணை முடிந்ததும் அதிகாரி என்னிடம் சொன்னார். "பரவாயில்லை... கிராபிக் கோடுகள் ஒரே சீராகத்தான் இருக்கின்றன."

அந்த அறையிலிருந்து நான் கீழே அழைத்து வரப்பட்டபோது, இன்னொரு சிறைவாசியை மற்றொரு அறைக்கு காவலர்கள் இழுத்துச் சென்றுகொண்டிருந்தனர். சிறிது நேரத்தில் மல்லிகையையே அதிரச் செய்தது அந்த பயங்கர அலறல்.

இரவு நேரத்தில், காவலர்களிடம் அனுமதி பெற்று பாத்ரூம் சென்று திரும்பும் போதெல்லாம் இது போன்ற அலறல், பலமாக காதுகளைத் தாக்குவது வழக்கமாக இருந்தது. என்ன நடக்கிறது என்பதை என்னால் நேரில் அறிய முடியாவிட்டாலும், சித்ரவதைகளைத் தாங்க முடியாமல் சிறைவாசிகள் அலறுவதை வைத்தே நடப்பது என்ன என்று ஓரளவு யூகிக்க முடிந்தது.

கைதானவர்களைத் துன்புறுத்தி வாக்கு மூலம் வாங்குவதற்கென்றே மல்லிகையில் ஒரு டீம் இருந்தது. Cracking Team என்று அதற்குப் பெயர். உருவம் தடித்த ஆட்களாக அந்த டீமில் இருந்தார்கள். அவர்களை நேருக்கு நேர் பார்த்தாலே நெஞ்சு 'திக் திக்' என்று அடிக்கும். அவர்கள் யாரையாவது அழைத்துச் செல்வதைப் பார்க்க நேர்ந்தால் அன்று முழுவதும் சாப்பாடே இறங்காது. பிடித்துச் செல்லப்பட்டவருக்கு என்ன நேர்ந்ததோ, உடம்பின் எந்தெந்தப் பாகங்கள் பதம் பார்க்கப்பட்டதோ என்ற பயம் கலந்த நினைப்பிலேயே சக சிறைவாசிகள் நடுங்கிக் கொண்டிருப்போம். முதல் நாள் மாலையில்

**சுபா சுந்தரம்**

விசாரணைக்காக அழைத்துச் சொல்லப்படுபவர் மறுநாள் காலையில் தன் உடலெங்கும் மருந்து தடவிக்கொண்டிருப்பதைப் பார்க்க முடியும். என்னுடன் சிறைவாசியாக இருந்த விஜயன், அப்படித்தான் ஒரு நாள் காலையில் மருந்து தடவிக்கொண்டிருந்தார். நான் அவரை நெருங்கினேன்.

"என்னாச்சு விஜயன்?"

"சார், நீங்க வழக்கம் போல் ராத்திரி 9 மணிக்குத் தூங்கிட்டீங்க. 11 மணிக்கு கிராக்கிங் டீம் ஆட்கள் வந்து அழைத்துச் சென்றார்கள். தெரிஞ்சதையெல்லாம் சொல்லிடுன்னு சொல்லி ராத்திரி முழுக்க மாற்றி மாற்றி அடிச்சாங்க. வலி தாங்கவே முடியலை. ஒவ்வொரு அதிகாரியா வந்து திரும்பத் திரும்பத் தகவல்களைத் கேட்டு அடிச்சாங்க. விடியற் காலை 5 மணி வரைக்கும் சித்ரவதை செய்துட்டு அப்புறமாகத்தான் விட்டாங்க. அடிக்கடி இப்படித் தாங்க சார் நடக்கும்."

(தொடர்ந்து வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அலசுவது - இராஜதந்திரி

# நெறி புரளும் ஜனநாயக விழுமியங்கள்

# "இலங்கையின் அரசியல் ஒரு பித்தலாட்டமாக இருக்கிறது"

## அதி வணமடியே பன்னாசிஹ தேரர்

"இலங்கையின் அரசியல் நடவடிக்கைகள் பித்துப் பிடித்துப் போயுள்ளன. எண்ணிலடங்காத அரசியல் கட்சிகளும், அவற்றின் அரசியல்வாதிகளும் நாட்டைப் பாடாகபடுத்தி வருகின்றனர்."

இவ்வாறு கூறியிருப்பவர் வேறுயாருமல்ல. இலங்கையின் மிக மதிப்புக்குரிய பௌத்த மதத் தலைவர்களில் ஒருவரான அதிவணக்கத்துக்குரிய மடியே பன்னாசிஹ தேரர் அவர்களே மேற்கண்டவாறு தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து தமது மனக்கிடக்கையை வெளியிட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மகாநாட்டு மண்டபத்தில் சர்வமதத் தலைவர்களது மகாநாடொன்று இடம்பெற்றிருந்தது. இதில் இலங்கையிலுள்ள அனைத்து மதங்களையும் சேர்ந்த சுமார் 200 மதப்பிரமுகர்கள் பங்குபற்றியிருந்தனர்.

அம் மகாநாட்டிலேயே இலங்கையின் பெரும்பான்மை பௌத்த மக்களின் முக்கிய மதகுருவாக மதிக்கப்படும் அதிவண மடியே பன்னாசிஹ தேரர் இலங்கையின் இன்றைய அரசியலாளர்களை மேற்கண்டவாறு சாடியிருந்தார். அத்துடன் ஜனநாயக அரசியலுக்கு முன்னுதாரணமாக இருக்கும் அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் கூட ஐந்துக்கும் குறைவான அரசியல் கட்சிகளே இருக்கும்போது, இலங்கையில் சுமார் 35 அரசியல் கட்சிகள் பித்தலாட்டம் போடுகின்றன என்றும் அம்மதகுரு தமது கவலையை வெளியிட்டுள்ளார்.

மதகுரு பன்னாசிஹ தேரரின் கூற்றில் நிறையவே அர்த்தம் இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

பிரிட்டிஷாரிடம் இருந்து சுதந்திரத்தைப் பெற்று அரைநூற்றாண்டு காலத்தை இலங்கை கடந்து விட்டது. ஆயினும் அரசியல் ரீதியான பிரச்சனைகள் முடிவுக்கு வந்து நாடு அபிவிருத்திப் பாதையில் முன்னேறுவதற்குப் பதிலாக, அழிவும் அவலமுமே முழு நாட்டையும் பீடித்துள்ளதை அவதானிக்க முடிகின்றது.

ஜனநாயக அரசியலில் ஈடுபட்டுள்ள அரசியல்வாதிகள் மட்டுமல்ல பத்திரிகையாளர்கள், புத்திஜீவிகள் ஆகியோரும் உயிராபத்தை எதிர்நோக்கும் சூழ்நிலைகளே நாட்டில் தோன்றியுள்ளன.

இலங்கையைப் பொறுத்தவரை முழு அளவில் ஜனநாயக ஆட்சி இடம்பெறுகின்றதெனக் கூறுவதற்கில்லை. தென்னிலங்கையில் ஜனநாயக விழுமியங்களுக்கு அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ள அதேசமயம், வடக்கு-கிழக்குப் பகுதிகளில் இராணுவத்தரப்பாரே இருந்து வருவதைக் காணமுடிகின்றது.

சுமார் இரு தசாப்த காலமாக வடக்கு-கிழக்கு யுத்தம் ஒரு முடிவைக் காணாது தொடர்ந்து கொண்டிருக்கின்றது. இந்த யுத்தம் காரணமாக சுமார் 55 ஆயிரம் மக்கள் பலியாகியுள்ளனர். அத்துடன் பல பில்லியன் பெறுமானத்தில் யுத்த அரக்கன் நாட்டின் வளங்களைச் சூறையாடி வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

எனவே இலங்கையில் எத்தகைய தன்மையைக் கொண்ட அரசியல் இடம்பெறுகின்றதென்பதைத் தெளிவாகக் குறிப்பிட முடியாதிருக்கின்றது.

இதன் காரணமாகவே பௌத்த தலைவர் வணக்கத்துக்குரிய பன்னாசிஹா தேரர் இலங்கையின் அரசியல் நிலபரத்தை ஒரு பித்தலாட்டம் எனத் தெரிவித்துள்ளார்.



கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற சில சம்பவங்கள் ஜனநாயகப் பாரம்பரியங்களை வேரறுப்பவையாகவே காணப்பட்டன.

தமிழ் மக்களின் அபிமானப் பத்திரிகையான தினமுரசு ஆசிரியர் நடராஜா அற்புதராஜா மற்றும் சிங்களப் பத்திரிகையான சட்டனவின் ஆசிரியர் ரோஹண குமார ஆகியோர் படுகொலை செய்யப்பட்டமை, தினக்குரல் ஆசிரியர் ஆ. சிவநேசச் செல்வனும் அவரது உதவியாசிரியரும் குற்றப்புலனாய்வுப் பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டமை போன்ற சம்பவங்கள் ஜனநாயக விரோதச் செயல்களாகவே விளங்குகின்றன.

தினமுரசு ஆசிரியர் அமரர் நடராஜா அற்புதராஜா, பட்டப்பகல் வேளை அவரது சாரதி சகிதம் கடந்த மாதம் படுகொலை செய்யப்பட்டமை இலங்கையில் உள்ள லட்சோபலட்சம் தமிழ் வாசகர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கிவிட்டிருந்தது.

இலங்கையில் மட்டுமல்ல, உலக நாடுகள் பலவற்றிலும் புலம்பெயர்ந்து வாழுகின்ற இலங்கைத் தமிழர்கள் கூட தினமுரசு ஆசிரியரின் திடீர் மறைவு குறித்து பேரதிர்ச்சியடைந்துள்ளனர். ஏனெனில் தினமுரசு சர்வதேச ரீதியாகவும் ஏராளமான வாசகர்களைக் கொண்டுள்ளது.

அகால மரணத்தைத் தழுவிய திரு. நடராஜா அற்புதராஜாவின் வாழ்க்கைப் பின்னணியை எடுத்து நோக்கினால் அவர் வெறுமனே ஒரு பத்திரிகையாளராக மட்டுமல்ல ஜனநாயக அரசியலில் ஆர்வம் கொண்டிருந்த அரசியலாளராகவும் விளங்கியிருந்ததையே அவதானிக்க முடியும்.

யாழ்ப்பாணத்தின் சாதாரண குடும்பமொன்றைச் சேர்ந்த மறைந்த பத்திரிகையாசிரியர் நடராஜா அற்புதராஜா சிறுபராயம் முதற்கொண்டு பேச்சாற்றல், எழுத்தாற்றல் கலையார்வம் என்பவற்றை அபரிமிதமாகக் கொண்டிருந்தார்.

எழுபதுகளின் நடுப்பகுதியில் உத்வேகம் பெற்ற தமிழ் தீவிரவாத அரசியலுடன் தம்மை ஈடுபடுத்தி இலங்கையிலும் இந்தியாவிலும் விரிவான அரசியல் நடவடிக்கைகளில் காலஞ்சென்ற நடராஜா அற்புதராஜா குதித்திருந்தார்.

இருந்தபோதிலும் தொண்ணூறாம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் தீவிரவாத அரசியலிலிருந்தும் விலகி ஜனநாயக ரீதியான நடவடிக்கைகளிலேயே அவர் ஈடுபாடு காட்டியிருந்தார். திரு. நடராஜா அற்புதராஜாவைப் போன்று தீவிரவாத அரசியலில் குதித்திருந்த தமிழ் இளைஞர்கள் பலரும் மிதவாத ஜனநாயக அரசியலுக்கு மீளவும் திரும்பியிருந்தனர்.

இந்த இளம் முன்னாள் தீவிரவாத அரசியல்வாதிகளிலிருந்தும் திரு. நடராஜா அற்புதராஜா பெரிதும் வேறுபட்டிருந்தார்.

திரு. அற்புதராஜா ஜனநாயக வழியில் தம்மை முழு அளவில் ஈடுபடுத்திக்கொள்ள முன்வந்ததையடுத்து பேனாவையே தமது ஆயுதமாகத் தெரிவு செய்துகொண்டார்.

'வாளின் கூர்மையைவிட பேனாவின் கூர்மை வலிமை கொண்ட'தெனக் குறிப்பிடப்படுவதுண்டு.

இக்கூற்று எவ்வளவு தூரம் உண்மை என்பதை திரு. நடராஜா அற்புதராஜாவின் எழுத்தாற்றல், 'தினமுரசு' பத்திரிகை வாயிலாக வெளிப்படுத்தியிருந்தது.

அரசியல் ஆக்கங்களைத் தாங்கிவரும் பத்திரிகையாக மட்டுமல்ல, அனைத்துத் தரத்திலுமான வாசகர்களைக் கவரும் ஒரு தரமான ஜனரஞ்சகப் பத்திரிகையாகவே 'தினமுரசு' பத்திரிகையை அற்புதராஜா கட்டி எழுப்பியிருந்தார்.

இந்நிலையில் ஒரு பட்டப்பகல் வேளை அவர் துடிதுடிக்கப் படுகொலை செய்யப்பட்டுள்ளமை, பத்திரிகைத் துறைக்கு விழுந்த வேட்டு மட்டுமல்ல. ஜனநாயக நடைமுறைகளில் நம்பிக்கை வைத்த ஓர் இளம் தமிழரின் அரசியல் அபிலாஷைகளை தவிடு பொடியாக்கிவிட்ட ஒரு சம்பவமாகவுமே அப்படுகொலை விளங்கியிருந்தது.

சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் பிரபல ஆங்கிலப் பத்திரிகையாளரும், கலைஞருமான ரிச்சார்ட் டி சொய்ஸா படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இலங்கையில் ஒரு பிரபல பத்திரிகையாளர் மிருகத்தனமான முறையில் கொல்லப்பட்ட முதலாவது சம்பவமாகவும் அது விளங்கியிருந்தது.

ரிச்சார்ட் டி சொய்ஸா கொலையுண்டபோது ஐக்கிய தேசியக்கட்சியே ஆட்சியிலிருந்தது. காலஞ்சென்ற ரணசிங்க பிரேமதாசா ஜனாதிபதியாகப் பதவி வகித்திருந்தார்.

பத்திரிகையாளர் சொய்ஸாவின் கொலையை சமூகத்தினர் மட்டுமல்ல, அன்று எதிர்க்கட்சியிலிருந்த இன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் அங்கத்துவர்கள் பலருமே போர்க் கொடி உயர்த்தி கண்டித்திருந்தனர்.

1994ம் ஆண்டு தேர்தல் நடவடிக்கைகளில் குதித்திருந்தவேளை, பத்திரிகை சமூகத்தினர் மீதான ஐக்கிய தேசியக் கட்சியினரின் அடாவடித்தனங்களையும் பொதுஜன ஐக்கிய முன்னணியினர் காரசாரமாகவே சாடியிருந்தனர்.

ஆனால் தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணி தனது ஜனாதிபதி ஆட்சியின் முதலாவது பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்து இரண்டாவது பதவிக் காலத்துக்காகவும் போட்டியிடும் இவ்வேளையில், பிரபல தமிழ்ப் பத்திரிகையாளர் நடராஜா அற்புதராஜா படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில் ஜனநாயகத்தின் ஆதார சுருதியாக இருக்கும் பத்திரிகைச் சுதந்திரம் முட்புதருக்குள் வீழ்ந்த ஒரு சேலை போன்றே காணப்படுகின்றது.

இனப்பிரச்சனையே இலங்கையை குட்டிச் சுவராக்கி வருவதையும், இப்பிரச்சனை முடிவுக்கு வராதவரை பிறக்கப்போகும் புதிய நூற்றாண்டிலும் இலங்கைக்கு விமோசனம் கிடைக்கப்போவதில்லை என்பதே தெளிவு.

இருபது வருடங்களுக்கு முன்னர் பெரிதும் ஓர் அரசியல் பிரச்சனையாகவே இனப்பிரச்சினை விளங்கியிருந்தது. ஆனால் தற்போது இப்பிரச்சனை இராணுவ அழுத்தங்களைக் கொண்டதாகவும் இருக்கின்றது.

இனப்பிரச்சனையை அரசியல் ரீதியாகத் தீர்க்க முடியுமென்பதே முடிந்த முடிவாகும். இதனை இன்றைய யுத்தத்தில் எதிரும் புதிருமாக இருக்கும் ஆட்சியாளர்களும், தமிழீழ விடுதலைப் புலிகளும் கூடவே நன்குணர்ந்துள்ளனர்.

இந்நிலையில் ஒரு முற்றுமுழுதான அரசியல் தீர்வைக் காண்பதற்கு ஜனநாயக விழுமியங்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டியது இன்றியமையாததாகின்றது.

ஆனால் பட்டப்பகல் வேளைகளில் ஜனநாயகத் தார்ப்பரியங்கள் வேட்டையாடப்படும் நிலை தொடருமானால் எங்கும், எதிலும் அராஜகமே தலைவிரித்தாடும் என்பதையே எதிர்பார்க்க முடியும்.

---

# நண்பர்கள் நேசித்த நகைச்சுவை உணர்வாளர் அற்புதன்



தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்ற தமிழ்மொழியில் அதிக ஈடுபாடுள்ள நண்பர் தோழர் அற்புதராசாவையும் பாடசாலை நண்பர் அஜந்தனுடனும் இருபது வருடகால உறவுகளின் அடிப்படையில் இன்று அவர்கள் இருவரும் ஆயுதமேந்திய மிருகங்களினால் அழிக்கப்பட்ட நிலையில் அவர்களுடன் நெருக்கமாக பழகியவன் என்ற ரீதியில் இந்த கருத்துக்களை தெரியப்படுத்த விரும்புகிறேன்.

78ம் ஆண்டளவில் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியின் 9ம் வகுப்பில் படிப்பதற்காக வந்து சேர்ந்தவர்கள்தான் இந்த இருவரும். அற்புதராசா எனது வகுப்பு பிரிவிலும் அஜந்தகுமார் வேறு பிரிவிலும் சேர்ந்தார்கள். எனக்கிருந்த அரசியல் ஈடுபாடு காரணமாக விடுதலைப் போராட்டத்தில் அன்று ஈடுபாடு உடைய தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்து 81ம் ஆண்டில் படுகொலை செய்யப்பட்ட பரமேஸ்வரனுடன் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டோம். நாம் மாணவர்களாக இருந்தபடியால் எமது படிப்பு முடியும் வரை பெரிய வேலைகள் எதிலும் ஈடுபடவில்லை. எனினும் ஆவரங்காலில் நடந்த கூட்டணியின் மகாநாட்டில் எமது பங்களிப்பு பரமேஸ்வரனுடன் சேர்ந்து குறிப்பிடும்படியாக அமைந்தது.

எமது பாடசாலை வாழ்க்கையில் நெருங்கிய நண்பர்களாகவும் தினமும் கூடித்திரிந்தும் பழகிய நாட்களில் பொழுது போக்காக சினிமா பார்த்தல், பத்திரிகை,நூல்கள் கதைப் புத்தகங்கள் படித்தல் போன்று எல்லோரைப் போல் இருந்தாலும் சில விடயங்களில் நாம் வித்தியாசப்பட்டிருந்தோம். கலைஞர் கருணாநிதியின் புத்தகங்கள், சாண்டில்யனின் நாவல்கள், சரித்திர நாவல்கள், கவிதைகள் என்று பல்வேறு வகையான நூல்களை எடுத்து வாசித்தோம். இதில் கூடிய ஈடுபாடு அற்புதராசாவிடம் இருந்தது. இதனால் எமக்கும் அந்தப் பழக்கங்கள் உருவானது. அற்புதராசா, அஜந்தகுமார் இருவரும் நல்லூர் முடமாவடிப் பகுதியில் வசித்தனர். அவர்களின் வீட்டிற்கருகே 75களில் தமிழ் இளைஞர்களைக் கைது செய்த இன்ஸ்பெக்டர் பத்மநாதன் என்பவரின் வீடும் இருந்தது. அவரின் வீட்டருகே நாம் சைக்கிளில் செல்லும்போது அற்புதராசா "துரோகி ஒழிக!" என்றும், முன்னாள் மேயர் துரையப்பா, அருளம்பலம் என்று அரசுடன் கைகோர்த்தவர்கள் என்று கூட்டணியினரால் துரோகி என அழைக்கப்பட்டவர்களின் வீட்டருகே செல்லும்போது "துரோகி ஒழிக!" எனக்கூறி விட்டுச் செல்வார்.

இதை யாரும் தடுக்க முயற்சித்தால் அவர்களுடன் பிரச்சனைப்படுவான். ஜீ.சீ.ஈ. சாதாரண பரீட்சையின்போது கடைசியாக ஆங்கில பாடப்பரீட்சை இடம்பெற்றது. எனவே ஆங்கிலப் பரீட்சையின் முதல்நாள் எமது வகுப்பில் பல மாணவர்களாக ஆங்கில சினிமாப்படம் பார்த்துவிட்டு பின்னர் கோப்பாய் கைதடி கடலில் குளித்துவிட்டு அடுத்தநாள் ஆங்கிலப் பரீட்சை எழுதினோம். அன்று அற்புதராசா சொன்னதாவது: "நிச்சயமாக ஆங்கிலம் பாஸ் பண்ணுவோம். ஏனெனில் ஆங்கிலப் படம் பார்த்து ஆங்கிலம் படித்துள்ளோம். இவ்வாறு எமது பாடசாலை வாழ்க்கை மகிழ்ச்சியாக அனுபவித்து நட்புடன் பழகினோம்.

80 ஆண்டில் உயர்தரம் படிப்பதற்காக அற்புதராசா வைதீஸ்வராக் கல்லூரிக்கும், நான் மத்திய கல்லூரிக்கும் சென்றுவிட்டோம். தினமும் சந்தித்த நாம் வாரத்திற்கு ஒரு தடவையாவது சந்தித்துக் கொள்வோம். இந்த நிலையில்தான் அற்புதராசா GUES என்ற அமைப்புடன் தொடர்புகளை ஏற்படுத்தி அவர்களின் வேலைகளில் ஈடுபட்டிருந்தார். என்னை மத்திய கல்லூரியில் GUES அமைப்பினை உருவாக்குமாறும்: அதில் வேலை செய்யுமாறும் கேட்டார். நான் மத்திய கல்லூரிக்கு புதியவன் என்பதினால் எனக்கு அதில் சிரமம் ஏற்பட்டது. எனினும் வேறு பலருடன் சேர்ந்து மத்திய கல்லூரியில் 81ல் ஆரம்ப வகுப்பில் GUES இற்கு ஒரு அமைப்பினை உருவாக்கினோம். GUES இன் பாதயாத்திரையின் பின்னர் எனது பரீட்சையின் நிமித்தம் அவர்களுடன் தொடர்புகளை நிறுத்தி விட்டாலும் எனக்கும் அற்புதராசாவிற்கும் தொடர்புகள் நட்பு ரீதியாக வளர்ந்து வந்தது.

நாட்டில் நெருக்கடி நிலைமைகள் தொடர்பாக 84 இல் இந்தியா சென்ற நான் 85 இல் சென்னையில் அற்புதராசாவை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. எதையுமே மனம்விட்டு பேசக்கூடிய நிலையில் அவர் இருக்கவில்லை.பின்னர் கனடா வந்த நான் எனது பாடசாலை நண்பர்களை சந்திக்கும் போது 88ம் ஆண்டளவில் இந்தியாவில் அவர் கைது செய்யப்பட்டதைப் பற்றியும் விடுதலையாகி இருக்கும் இவரை வெளிநாட்டிற்கு அழைக்க முயற்சிகள் நடைபெறுகின்றன என்றும் தெரிந்துகொண்டேன்.

90களில் பிரேமதாசாவின் அரசு கொடுத்த பாதுகாப்பினை பயன்படுத்தி கொழும்பிற்கு சென்று ஈ.பி.டி.பி. கட்சிகளை அமைத்துவேலை செய்வதை பத்திரிகை மூலம் அறிந்துகொண்டேன். இவருடன் தொடர்பு கொண்ட நான் இவரின் இந்த நிலைப்பாட்டை விமர்சித்தேன். எந்த அடிப்படையில் எதிரியுடன் சேர்ந்து கொண்டு தமிழ் மக்களுக்காக போராட முடியும் என்றபோது அவரின் விளக்கத்தை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. என்றாலும், அவர்களின் நிலைமைகளைப் புரிந்துகொள்ள முடிந்தது.

நண்பனாகவும் உரிமையுடன் என்னுடன் பேசக்கூடியதாக இருக்கின்றது எனக் கூறுவார். அவரினால் இலங்கை வானொலியில் நடத்தப்பட்ட மக்கள் குரல் நிகழ்ச்சியின் பிரதிகளை அனுப்புமாறு கேட்டேன். "விரைவில் பத்திரிகையினை வெளியிட உள்ளேன்" எனவும் அதன் பிரதிகளை எனக்கு கிடைக்க வழி செய்வதாகவும் கூறினார். பத்திரிகை சம்பந்தமாக எனது கருத்துக்களைக் கேட்டார். ஆரம்பத்தில் எனது கருத்துக்களுடன் உடன்பட்டாலும் பின்னர் வந்த பத்திரிகைகளில் உள்ள கருத்துக்கள் பிழையான தவறான, செய்திகள், பல சம்பவங்களை மறைத்து அவர் எழுதிய வரலாற்றுத் தொடர் போன்ற பல விடயங்களில் நான் கூறிய கருத்தினை அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. பல தடவை தவிர்க்கவும் செய்து சிலவற்றினை நியாயப் படுத்தவும் முயன்றார்.

## எல்லாளன்

95ம் ஆண்டில் சில தேவைகளின் நிமித்தமாக இலங்கைக்குச் செல்வதற்கு நான் முடிவு செய்த நிலையில், அற்புதராசாவை தொலைபேசியில் தொடர்புகொண்டு "நான் நாட்டிற்கு வரவிருக்கிறேன். ஏதாவது தேவையென்றால் அதை நான் வாங்கிவர முயற்சிக்கின்றேன்" எனக் கூறியபோது, அவரின் பதில் எனக்கு அவர் மீது இருந்த மரியாதையைக் கூட்டியது. அவர் கூறிய விடயமானது: "நான் நமது நாட்டிற்கு போக முடியாத நிலையில் இங்கு பல வருடமாக இருக்கின்றேன். உனக்கும் நாட்டிற்கு போக முடியாத சூழ்நிலை எனத் தெரியும். நாட்டிற்கு வருகிறேன் என்று சொல்லாமல் கொழும்பிற்கு வருகின்றேன் எனச் சொல்லு. என்றும், என்னைப் பல வருடங்களின் பின் சந்திப்பதை நினைத்து மகிழ்ச்சியாகவும் இருக்கின்றது என்றார். அவரது போராட்ட விடுதலை உணர்வை யாராலும் அழித்துவிட முடியாது என உணர்ந்தேன். கொழும்பில் தங்கியிருந்த நாட்களில் ஞாயிற்றுக்கிழமைகளில் அற்புதராசாவைச் சந்தித்து பல விடயங்களைப் பற்றி கலந்துரையாடினேன். இவ்வாறான கலந்துரையாடலில் விடுதலைப் போராட்டம், விடுதலைப் புலிகள், கொழும்பில் உள்ள அரசியல் சூழ்நிலைகள், தனது வேலைகள், நிலைப்பாடுகள், பற்றி கருத்துக்களை பத்திரிகைகளில் எழுத முடியாதவற்றை என்னுடன் மனம்விட்டுப் பேசினார். அவற்றில் முக்கியமானவற்றை இங்கு தருகின்றேன்.

* கொழும்பு சூழ்நிலையைப் பொறுத்தவரையில் சிங்களம் தெரியாத அடையாள அட்டை இல்லாத, அடையாள அட்டையைத் தொலைத்தவர்கள், எவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறுவது எனத் தெரியாத அப்பாவி தமிழர்களை புலிகள் என சந்தேகித்து அரசினால் கைது செய்யப்பட்டவர்கள் உண்மையில் புலிகள் அல்ல என்றார், சிங்கள மொழி பேசக்கூடிய, சிங்களவர்களின் அடையாள அட்டையுடன் பல புலிகள் கொழும்பில் இருக்கிறார்கள் என்றும் அவர்களை இவர்களால் பிடிக்க முடியாது உள்ளது என்றும் கூறினார்.

நன்றி

'உதயன்' -கனடா


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உண்மைத் தொடர்

அதிர் இடி 87

# இடி அமீன்

**கடந்தவாரம்**

**ஹொட்டல் ரொறோறோவின் நிர்வாகியின் மனைவியைத் தன் அரண்மனைக்கு வருமாறு அழைத்த அமீன், அப்பெண்ணை பலவந்தமாக அனுபவித்தான். அப்பெண் தற்கொலை செய்து கொண்டாள். தொடர்ந்து ஜிஞ்ஜா மருத்துவமனையின் இளந்தாதியையும் கடத்திச் சென்று, பெல்டால் அடித்துத் துன்புறுத்தி, தன் ஆசையைத் தீர்த்துக்கொண்டான். மற்றுமொரு இளந்தாதியை தன் மனைவியாக்க நினைத்து ஏமாந்து போகிறான்.**

இனி...


ஓர் ஆண் ஒரு பெண் மீது ஆசை வைத்தால்- அதுவும் அவன் ஓரளவு வசதி படைத்தவனாக இருந்தால்; சில வெகுமதிப் பொருட்களை தனது நண்பர்கள் அல்லது உறவினர்கள் அல்லாதுபோனால் தனது வேலை ஆட்கள் மூலம், அப்பெண்ணின் பெற்றோருக்கு அனுப்பி வைப்பான். அப்பெண்ணை தனது மனைவியாக்க அந்த ஆண் விரும்புகிறான் என்பதை வெளிப் படுத்தவதற்காகவே இம்முறை உகண்டாவில் நடைமுறையிலுள்ள ஒரு பழக்கம்.

இதே அடிப்படையில்தான் அந்த இளந் தாதியின் வீட்டினுள் நுழைந்த அமீனின் மெய்காப்பாளர்கள் வெகுமதியுடன் புகுந் தனர். அப்பெண்ணின் தகப்பனாரிடம் பண நோட்டுக்களை கத்தை கத்தையாகத் திணித்தவன் அசட்டுத்தனமாக- ஆனால் ஒருவகை ஆகங்காரமான சிரிப்பையும் உதிர்த்தான். "மகாகனம் பொருந்திய உகண்டா நாட்டு அதிபதி மேஜர் ஜெனரல் இடி அமீனிடமிருந்து வந்திருக்கிறோம்!" என்று மட்டும்தான் சொன்னான்.

தாதியின் தகப்பனாருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. பனியிலுறைந்தவர் போல் காணப்பட்டார். அமீனை மருமகனாக ஏற்றுக்கொள்ள எந்தத் தகப்பன்தான் விரும்புவார்? தனது மனைவியரையும் வைப்பாட்டிகளையும் மற்றும் ஆசை நாயகிகளையும் அமீன் எப்படி நடத்துகிறான் என்பது அனைவருக்குமே தெரிந்த விடயம்.

மெய்காப்பாளர்கள் வந்து போகும் வரை அந்த இளந் தாதியோ அவள் தாயே வீட்டினுள்ளிருந்து வெளியே வரவில்லை. அவர்கள் போய்விட்டனர் என்பதை பூட்ஸ் சத்தங்கள் மெல்ல மெல்ல அடங்கி, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் வண்டி அகன்றதன் பின்னர்தான் முன் மண்டபத்துக்குள் வந்தனர். வயதான தந்தையின் மடியில் பணம் கத்தை கத்தையாகக் கிடப்பதையும் பலதரப்பட்ட பொருட்கள் ஆங்காங்கே வைக்கப்பட்டிருப் பதையும் கண்டனர். அப்பொருட்களில் விலையுயர்ந்த வெளிநாட்டுப் புடவைகளும் வேறு பல பொருட்களும் காணப்பட்டன. கூடவே விஸ்கி, பிராந்தி போத்தல்கள் சிலவும் காணப்பட்டன.

சற்று நேரத்துக்கெல்லாம் அந்த வீட்டிலிருந்து அழுகுரல்கள் எழுந்தன. அந்தத் தாதியின் தாய் மாமன்- உகண்டாவிலுள்ள பிறநாட்டுத் தூதரகத்தில் பணி புரிபவன்- வந்து சேர்ந்தான். அழுகைக்குரல்கள் அடங்கின.



அடுத்த நாட்காலை அமீனின் மெய் காப்பாளர்கள் வாகனங்களில் வந்திறங் கினர். முன்புற வாயிற் கதவு பெருமனே சாத்தப்பட்டிருந்தது. ஆனால் அங்கு எவரும் காணப்படவில்லை. முதல்நாள் அவர்கள் கொண்டுவந்திருந்த சகல பொருட்களும் அங்கேயே தீண்டப் படாமல் கிடந்தன. அவர்கள் கொண்டுவந்திருந்த பச்சை இறச்சியிலிருந்து கெட்ட நாற்றம் மட்டும் மூக்கைத் துளைத்தது.

நிலமையை அறிந்துகொண்ட மெய் காப்பாளர்கள் ஆத்திரம் கொண்டமையினால், அங்கிருந்த பொருட்கள் அனைத்தும் அடித்து நொருக்கப்பட்டன. பின்புறமிருந்த வான் கோழிகள் கூண்டோடு வாகனங் களில் ஏற்றப்பட்டன. இவர்களில் தலைவன் எனக் கருதப்பட்டவன் பணம் 700 ஷிலிங்கையும் தன் சட்டைப்பைகளுக் குள் திணித்துக்கொண்டான்.

அமீன் மாளிகையிலேயே, அந்த இளந் தாதி தன்னிடம் வரப்போகிறாள். அவளைக் கசக்கிப் பிழிந்து தனது தாகத்தைத் தீர்க்கலாம் என்று ஆவலோடு காத்திருந் தான். மெய்காப்பாளர் தலைவன் தயங்கித் தயங்கி அமீனருகில் நெருங்கி வந்தான். அவன் முகக் குறிப்பைக் கண்டதுமே, 'பட்சி பறந்து விட்டது' என்ற உண்மை அமீனுக்குப் புலப்பட்டது. அவன் நன்றாக நெருங்கி வந்ததும், "என்னடா நடந்தது? எங்கேயடா அவள்?" என்று அதட்டினான். அவன் பதில் கூறுமுன்னரே அமீனின் வலது பூட்ஸ் கால் மெய்காப்பாளர் தலைவனின் இடது தாடையைப் பதம் பார்த்தது. இரத்தம் வாயிலிருந்து பொழிய அவன் தரையில் சுருண்டு விழுந்தான்.

அமீனின் மாளிகையை விட்டு வெளியேறி, அவனுடைய பிரத்தியேகமான அந்தப் புரத்துக்குப் போனான்.



பண்டைய அரசர்கள் அரண்மனையை ஒட்டி ஒரு அந்தப்புரத்தை வைத்திருப்பார்கள். அங்கு அழகழகான பலதரப்பட்ட பெண்கள் இருப்பார்கள். அரசன் ஒவ்வொரு நாளும் அல்லது சந்தர்ப்பம் கிட்டும் போதெல்லாம் அங்கு சென்று அங்குள்ள அழகிகளில் தனக்குப் பிடித்த ஒருத்தியையோ அல்லது பலரையோ அழைத்து அவர்களுடன் சல்லாபித் திருப்பான்.

இதனை ஒத்த அந்தப்புரம் ஒன்றை அமீனும் அமைத்திருந்தான். இதில் பல நாட்டு அழகிகள் இருந்தனர். அவர்களில் பலருடன் எப்போதாவது ஒருநாள் மட்டுமே அமீன் உறவு கொண்டிருந்திருப்பான். இதனால் அவர்களில் பலர் விரகதாபத்துடன் துன்பப்பட்டுக் கொண்டே இருந்தனர்.

அந்தப்புரமே அவர்களின் வாழ்க்கை. கிட்டத்தட்டச் சிறை வாசம் தான். அவர்கள் வெளியே எங்கும் செல்ல முடியாது. கட்டுக்காவலும் அதிகம். அந்தப்புரத்துக் காவலுக்கு பல முரடர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இருப்பினும் சில குறிப்பிட்ட அமீனின் மெய்காப்பாளர்கள் மட்டும் அங்கு சென்றுவர அனுமதியுண்டு.

## தருவது அழகன்

இத்தகைய மெய்காப்பாளர்களில் சிலர் அதிஷ்டசாலிகள். தடையின்றி அந்தப்புரத்துள் சென்றுவர அனுமதிபெற்றவர்கள் இவர்களில் சிலர் மீது அந்தப்புர அழகிகள் சிலர் மையல் கொண்டனர். தங்களுடைய தீராத ஆசைகளைப் பூர்த்தி செய்ய வழிதேடிக்கொண்டனர்.

வெளியே எவருக்கும் தெரியாமல் நடந்து வந்த நாடகம் ஒருநாள் வெட்டவெளிச்சமாகி மெய்காப்பாளர்களில் இருவர் பயங்கரமாக மோதி ஒருவன் உயிர் துறக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. தனது மெய்காப்பாளரில் ஒருவனால் மற்றொரு மெய்காப்பாளன் கொலையுண்டான் என்ற தகவல் அறிந்த அமீன் நேரடியாக அந்த அந்தப்புரத்துக்கே வந்து விசாரணை நடத்தினான்.

தனது ஆசை நாயகி ஒருத்தியை சம்பந்தப்பட்ட இரு மெய்காப்பாளர்களும் அடைய விரும்பியதால் தான் இருவரும் சண்டைபோட்டனர் என்பதை அறிந்ததும், குறிப்பிட்ட பெண்ணை தனது மாளிகைக்கு அழைத்து வரும்படி காவலர்களுக்கு கட்டளையிட்டான். இதன்பின் உயிருடன் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த மெய்காப்பாளனையும் தனது அரண்மனைக்கு அழைத்து வரும்படி அமைச்சர் சியம்பாவுக்குப் பணித்தான்.

காயமடைந்தவனை நேரடியாகச் சென்று மருத்துவமனையில் பார்த்த அமைச்சர் சியம்பா, அவனுடைய நிலமை கவலைக்கிடமாக இருப்பதாகவும், அந்நிலையில் அவனை எங்கும் கொண்டு செல்ல முடியாது என்றும் அமீனுக்கு தொலைபேசி மூலம் சொன்னார். ஆனால் அமீன் சற்றுக் கடுகடுப்புடன், ஸ்டிரெச்சரில் கிடத்தியாவது அவனை அனுப்பி வைக்குமாறு எச்சரிக்கை போன்று கத்தினான்.

சியம்பாவால் எதுவும் செய்ய முடியவில்லை. அமீனின் முரட்டு சுபாவத்தை நன்கு உணர்ந்தவர் அவர். அதிபரின் ஆணையை நிறைவேற்றினார்.

அடுத்த நாட்காலையில் அமீனிடமிருந்து அமைச்சர் சியம்பாவுக்கு ஒரு தொலைபேசி அழைப்பு வந்திருந்தது. முலாகோ மருத்துவமனை பிரேத அறையில் இரு சடலங்கள் கிடப்பதாகவும், பிரேத பரிசோதனையை நடத்தியபின் தனக்கு அறிவிக்குமாறும் அமீன் கேட்டுக்கொண்டான்.

முதல் நாளன்று நடைபெற்ற சம்பவம் பற்றி முழுவதும் அறிந்திருந்த அமைச்சர் சியம்பா, அச்சம்பவங்களின் எதிரொலியாகவே மேற்படி பிரேதங்கள் இருக்கும் என்பதனை அமைச்சர் அறிந்திருந்தார். பிரேத அறைக்குச் சென்றார். பிரேதங்களை மூடியிருந்த துணியை ஒரு பணியாளன் நீக்கினான். அமைச்சர் சியம்பா அப்பிரேதங்கள் கிடந்த கோலத்தைக் கண்டு துணுக்குற்றார். அவற்றில் மேலாக மூடியிருந்த துணியைத் தவிர வேறு துணி எதுவும் இருக்கவில்லை. மிக மிகக் குரூரமான நிலையில் அப்பிரேதங்கள் காணப்பட்டன என்று மட்டுமே தனது சகாக்களிடம் அமைச்சர் சியம்பா குறிப்பிட்டாரே தவிர வேறு விவரங்களை அவரால் வெளியிட முடியவில்லை.

'இருவரும் தற்கொலை செய்வதற்காக ஓடும் இரயிலில் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டனர்!' என்று மட்டுமே அடுத்த நாள் பத்திரிகைகளில் செய்தி பிரசுரமாகி இருந்தது. இரு பிரேதங்களும் அடையாளம் காணப்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டது.

பெண்கள் மீது, தான் வேறு எவருமே செலுத்த முடியாத அதிகாரத்தைச் செலுத்தும் ஆண்மை உடையவன் என்று தற்பெருமை கூறிக்கொள்ளும் அமீன், அவனுடைய அந்தப்புரத்து அழகி, விரகதாபம் தாங்காமல் இரு ஆண்களிடம் மோகம் கொண்டிருந்தாள் என்பதை வெளியில் எவரும் தெரிந்துவிடக் கூடாது என்பதில் அமீன் கண்ணும் கருத்துமாக இருந்தான்.

பிறநாடுகளிலுள்ள உகண்டா நாட்டின், தூதரகங்களிலும் உகண்டா நாட்டுக்கார இளம் பெண்கள் பலர் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் அமீனால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள். பல்வேறு நாட்டு இராஜதந்திரிகளை வசப்படுத்தி வலையில் வீழ்த்தும் நோக்குடன் அவர்கள் அனுப்பட்டிருந்தனர். அவர்கள் தங்கள் கடமைகளை ஏற்கப் புறப்படு முன்னர் இவர்களுக்கான பிரத்தியேகப் பயிற்சியை நேரடியாக அமீனே நடத்திவைப்பான்.

சட்டப்படியான மனைவியர், ஆசை நாயகிகள், அவ்வப்போது அனுபவிக்கும் அழகிகள் ஆகியவற்றுடன் முப்பது பேருக்குக் குறையாத அழகிகளைக்கொண்ட அந்தப்புரமும் அமீனுடைய ஆதிக்கத்துள் இருந்தது. அதே அந்தப்புரத்துள் நுழைந்த அமீன், அங்குபொறுப்பாளராக இருந்த நடுத்தர வயதுடைய பெண்ணை அழைத்து, அந்தப்புர அழகிகள் அனைவரையும் தன்னிடம் அழைத்து வருமாறு ஆணையிட்டான்.

(இடி தொடரும்)

## நடிகை என்று தெரியாதாம்



'கல்நாயக்' படத்தில் வரும் 'சோளி கே பீச்சே...' பாடலில் வரும் மாதுரி டிக்ஷித்தின் நடனத்தைப் பார்ப்பதற்காகவே பலர் இப்படத்தைப் பலமுறை பார்த்துள்ளார்கள். இப்போது அதற்கு என்ன என்கிறீர்களா?

பல இளசுகளின் தூக்கத்தைக் கெடுத்த மாதுரி டிக்ஷித், அண்மையில் திருமணம் செய்துள்ளார். இவரை திருமணம் செய்திருப்பவர் டாக்டர் ஸ்ரீராம் மாதவ் என்பவர். இருவரும் காதலித்துக் கைப் பிடித்துள்ளனர்.

இருந்தாலும் மாதுரியின் கணவர் சொல்வதை நம்ப முடியவில்லை. என்ன சொல்கிறார் தெரியுமா? மாதுரி நடித்த படங்களை அவரது கணவர் பார்த்ததே கிடையாதாம். மாதுரியை அவர் சந்தித்த பின்னர்தான் மாதுரி ஒரு நடிகை என்று தெரியும் என்று கூறுகிறார்.

ஏனென்றால் ஸ்ரீராம் பிறந்தது வளர்ந்தது எல்லாம் இலண்டனிலாம். பின் அமெரிக்காவுக்குச் சென்று விட்டாராம். திருமணம் முடிந்ததும் இருவரும் ஹவாயில் தேனிலவைக் கழித்தனர்.

பத்து நாட்களின் பின் மாதுரி இந்தியா திரும்பிவிட, கணவர் அமெரிக்கா சென்றுவிட்டாராம். கைவசம் இருக்கும் படங்களை முடித்துக் கொடுத்துவிட்டு மாதுரியும் அமெரிக்கா போகப்போகிறாராம்.

## சுடச்சுட ரெடி, பாம்புக்கறி!

தென் கொரியாவின் சியோல், சீனா, ஹொங்கொங் ஆகிய நாடுகளில் உள்ள ஹோட்டல்களில் மிகவும் பிரசித்திபெற்ற உணவு பாம்புக்கறி.

இந்த உணவை ஒரு கை பார்க்கவே ஹோட்டல்களில் கூட்டம் அலைமோதுகிறதாம். இங்கே வகைவகையான பாம்புகளை அறுத்து சமைத்து வாடிக்கையாளர்களுக்குப் பரிமாறப்படுகிறார்கள்.

பாம்புகளின் தலையை மட்டும் வெட்டி வீசிவிட்டு தோலை நீக்கி துண்டுகளாக நறுக்கி விதவிதமான உணவுகள் சமைக்கப் படுகின்றன. பாம்புகளின் பட ஆல்பங்களை வாடிக்கையாளர்களுக்குக் காட்டி, அதில் எந்த வகைப்பாம்புகளை அவர்கள் காட்டுகிறார்களோ அதை உணவாக்கிக் கொடுக்கிறார்களாம்.

பாம்புக்கறியை உண்பதால் உடல் பலம் பெருகும் என்பது சீனர்களின நம்பிக்கை. சீனாவில் மலைப்பாம்புகளைக் கொன்று தோலைநீக்கி, துண்டுகளாக்கி ஊறுகாய் போடுகிறார்களாம்.

இந்த மலைப்பாம்பு ஊறுகாயை சீனர்கள் விரும்பி உண்கிறார்களாம்.

## கலங்கடிக்கும் கபில்தேவ்!



நியூஸிலாந்து அணி இந்தியாவுக்குப் பயணம் செய்து டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களில் தோல்வி கண்டு திரும்பியது.

இந்தியாவின் இநதப் புதிய உத்வேகத்திற்குக் காரணம் இந்தியாவின் புதிய பயிற்சியாளர் கபில்தேவ். கபில் பயிற்சியாளராகப் பதவியேற்ற பின் சந்தித்த முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி 83 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இது கபிலுக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. கடுகடுப்புடன் காணப்பட்டார். வீரர்கள் எல்லாரும் பயத்துடன் இருந்தனர். அன்றிரவு பத்தரை மணி வரை ஆட்டமுறை குறித்து விவாதிக்கப் பட்டது. மறுநாள் போட்டியில் நியூஸிலாந்தை 200 ஓட்டங்களுக்கு ஆட்டமிழக்கச் செய்ய வேண்டும் என்று உறுதி எடுக்கப் பட்டது.

இரண்டாவது இன்னிங்ஸில் மெதுவாக விளையாடிக் கொண்டிருந்தார், இந்திய தொடக்க ஆட்டக்காரர் சடகோபன் ரமேஷ். இது கபிலுக்கு கோபத்தை ஏற்படுத்தியது. உடனே 12வது ஆட்டக்காரர் ஹர்பஜன்சிங்கை அழைத்து ரமேஷிற்கு ஒரு தகவல் அனுப்பினார்.

"ரமேஷ் ஆமை வேகத்தில் ஆடினால் அவரை வெளியே அழைத்துவிட்டு வேறு வீரரை உள்ளே அனுப்பி விடுவேன்" இது தான் கபில் அனுப்பிய தகவல்.

இந்த உத்தரவு வீரர்கள் அனைவரையும் கலக்கத்தில் ஆழ்த்தியது. அதுமட்டுமன்றி மைதானத்துக்கு வெளியே வீரர்களிடம் ஒட்டோ கிராஃப் வாங்கவோ, அல்லது சந்திக்கவோ அனுமதி மறுத்து விட்டார்.

அதே சமயம் திறமையாக விளையாடும் வீரர்களைப் பாராட்டுவதிலும் கபில் தயக்கம் காட்டுவதில்லை. அத்துடன் நியாயமான கொண்டாட்டங்களுக்கு தடை விதிப்பதுமில்லை.

கபிலின் கண்டிப்பு இந்திய கிரிக்கெட்டை தலைநிமிர்ந்து நடக்கச் செய்யும் என்பது பலரது கணிப்பு. பொறுத்திருந்து பார்ப்போம்!

## புதிய பொண்ட் படம்




ஜேம்ஸ் பொண்ட் படங்களுக்கு எப்போதுமே ஒரு தனிப்பட்ட வரவேற்பு உண்டு. இதுவரை 19 ஜேம்ஸ் பொண்ட் படங்கள் வெளிவந்துள்ளன. இதையடுத்து 20வது ஜேம்ஸ் பொண்ட் படம் கடந்த மாதம் வெளியாகியுள்ளது.

'தி வேர்ல்ட் இஸ் நொட் இனஃப் (THE WORLD IS NOT ENOUGH) இதுதான் படத்தின் பெயர். ஒரு மிகப் பெரிய வெடிக்குண்டு வெடித்ததில் பிரிட்டிஷ் உளவுத்துறையே அதிர்ந்து போகிறது.

இச்சம்பவத்தின் பின்னணியில் இருக்கும் தீவிரவாதிகளைப் பிடிக்க பொலிஸ் முயல்கிறது. அவன் கொலை செய்யப்பட்டுவிட, அவனது காதலி பழிக்குப் பழி வாங்கப் புறப்படுகிறாள். இதைத் தடுக்க வருகிறார் நமது ஹீரோ ஜேம்ஸ் பொண்ட்.

இதில் இரகசிய ஏஜெண்ட் 007 ஜேம்ஸ் பொண்ட் வேடத்தில் பியர்ஸ் புரோஸ்னன் நடிக்கிறார். இதற்கு முன் இவர் 'கோல்டன் ஐ', 'டுமோரோ நெவர் டைஸ்' ஆகிய ஜேம்ஸ் பொண்ட் படங்களில் நடித்தவர்.

பொண்டின் காதலியாக நடிப்பவர் டென்னிஸ் ரிச்சாட். வில்லியாக நடிப்பவர் சோபிமார்க்யூ. இப்படத்தில் நடிப்பதற்காக கதாநாயகன் புரோஸ்னன் வாங்கிய சம்பளம் எவ்வளவு தெரியுமா? 11 மில்லியன் டொலர். நம்மூர் மதிப்பில் சுமார் 77 கோடி ரூபாய்கள்-யப்பா!

## மகளை மறந்த மடோனா

பிரபல பொப்பிசைப் பாடகி மடோனா தனது மகளுடன் ஒரு விழாவுக்கு சென்றிருந்தார். விழா முடிவடைந்ததும் மடோனாவைச் சுற்றிக் கூட்டம் கூடியது.

மடோனாவால் நகர முடியவில்லை. மடோனாவின் குழந்தை மட்டும் ஓடிப்போய் காருக்குள் ஏறிக் கொண்டது. காரில் அம்மாவுக்காகக் காத்திருந்தது. ஆனால் மடோனாவால் கூட்டத்தில் இருந்து தப்பமுடியவில்லை.

எப்படியோ கூட்டத்தில் இருந்து வெளியே வந்து தனது கார் என நினைத்து வேறு ஒரு காரில் ஏறி விட்டார் மடோனா. உட்கார்ந்ததும் கார் உடனே கிளம்பி விட்டது. குழந்தையை மறந்து மடோனா வீட்டிற்குச் சென்றுவிட்டார்.



மூன்று மணி நேரத்திற்குப் பின்னர் தான் மடோனாவின் குழந்தை பத்திரமாக வீடு சேர்ந்தது. தாயைப் பார்த்துக் கொண்டு காரில் இருந்த மடோனாவின் மகளை படப்பிடிப்பாளர்கள் சூழ்ந்து கொண்டு படம் பிடித்துத் தள்ளிவிட்டார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தகவல் பெட்டி

## சாகசப் பயணம்

→ஒரு நாட்டிலிருந்து மற்றுமொரு நாட்டுக்குச் செல்வதானால் கடவுச்சீட்டு, விஸா போன்ற ஆவணங்கள் அவசியம். எமது நாட்டிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு இத்தகைய ஆவணங்கள் எதுவுமின்றி, அந்நாட்டு அதிகாரிகளின் கண்களில் மண்ணைத் தூவி விட்டு கலபமாகப் பலர் நுழைந்து விடுகிறார்கள். சிலர் அவர்கள் கடைப்பிடிக்கும் மார்க்கங்களின் கோளாறுகளினால், பிடிபடுகிறார்கள்: சிலர் தமது உயிரையும் இழந்து விடுகிறார்கள்.

இதோ ஜெர்மன் நாட்டுக்கும் ஒஸ்ட்ரியாவுக்குமிடையிலான அதி உயர மலைச் சிகரங்களில், உறுதியான கம்பியைத் தொடுத்து, அதன் மீது சைக்கிளை ஓட்டியவண்ணம் சாகசம் புரிகிறார் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த ஃபால்கோ என்ற சாகசக்காரர். கம்பியில் அந்தரத்தில் உருளும் சைக்கிளில் கயிறு கட்டித் தலை கீழாகத் தொங்கிய வண்ணம் மற்றுமொரு சாகசக்காரரான தாமரா திரபர் என்பவர் செல்கிறார்.

சட்ட விரோதக் குடியேற்றக்காரர்கள் என்று இவர்களை ஒஸ்ட்றிய அதிகாரிகள் தண்டிக்கமாட்டார்கள். ஏனெனில் 2,963 மீட்டர் உயரமான சிகரங்களில் கம்பி இணைக்கப்பட்டுள்ளது. அதுவும் உல்லாசப் பயணிகளைக் கவரும் நோக்குடன் இச்சாகசச் செயல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ■





## கதிரைக் கோபுரம்

▲அவுஸ்திரேலிய நாட்டில் சில மாதங்களுக்கு முன் தளபாட விழா ஒன்று நடைபெற்றது. அந்த விழாவில் ஒருவர் கதிரைகளைக் கொண்டு ஒரு கோபுரம் போன்று வடிவமைத்திருந்தார்.

இந்த விழாவுக்கு அதிதிகளாக விக்டோரியா மாநில முதல்வரும் அவரது மனைவியும் அழைக்கப்பட்டிருந்தனர். விழாவில் முதல்வரின் மனைவிக்கு இந்த கதிரைக் கோபுரம் பிடித்துவிட, அதில் இருந்த கதிரை ஒன்றில் அமர்ந்து படமெடுத்துக் கொண்டார். ■

## படு வேகம்



▲உலகம் இயங்கும் வேகத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில் மனிதனின் அன்றாடத் தேவைகளும் செயற்பட வேண்டியுள்ளது. இவற்றில் மிக முக்கியமானது போக்குவரத்துத் தான். அதற்கமைய வேகமாகச் செல்லும் விமானங்களும், புகையிரதங்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

ஜெர்மனியில்தான் காந்த சக்தி மூலம் தண்டவாளத்தில் மிதந்து செல்லும்-பறக்கும் ரயில்கள் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் சூப்பர் ஸ்பீட் எனப்படும் அதிவேக ரயில் ஒன்று 'ட்ரான்ஸ்ராபிட்-8' என்ற பெயரில் ஜெர்மனியில் வடிவமைக்கப்பட்டுள்ளது. அந்த ரயிலின் ஒரு பகுதி தான் இது. ■



## சந்தோஷ சவாரி

▲சைக்கிள் கண்டு பிடிக்கப்பட்ட காலத்தில் உருவாக்கப்பட்ட-முன் சக்கரம் பெருத்த-பின்சக்கரம் சிறுத்த-சைக்கிள்களைத் தேடி எடுத்து ஒல்லாந்தைச் சேர்ந்த சிலர் ஒரு சைக்கிளோட்டப் போட்டியை நடத்தினார்கள். ஜெர்மனிலுள்ள ஹம்பேர்க் நகரில்தான் இப்போட்டி நடைபெற்றது. பழங்காலத்தையே பிரதிபலிக்கும் வகையில், அக்கால உடைகளையே இவர்கள் அணிந்து கொண்டு சைக்கிள் சவாரி செய்தனர். ஹம்பேர்க் நகரில் வருடாவருடம் நடைபெறும் தேசிய விழாக்களில் இத்தகைய காட்சிகள் நடைபெறுவதுண்டு. ■

# பல் துலக்கி(ளி)



→நாம் பற்பசை அல்லது பற்பொடி கொண்டு பல் துலக்குகிறோம். கிராமங்களில் வேப்பங்குச்சி, ஆலங்குச்சியால் பல்துலக்குவார்கள். சாம்பல், கரி போன்றவற்றைக் கொண்டும் பல் துலக்குபவர்கள் உள்ளனர்.

ஆனால் கனடாவில் வசிக்கும் 21 வயதுடைய லோமினா என்ற பெண் பல்துலக்கப் பயன்படுத்துவது டேவிட் என்ற பெயருடைய தனது கிளியை. லோமினா காலையில் எழுந்ததும் நேராக தனது கிளி அருகே சென்று வாயைத் திறந்து கொள்வார். டேவிட் ஒவ்வொரு பல்லாகச் சுத்தம் செய்த பின் லோமினா தண்ணீரில் கொப்பளித்து வாயைக் கழுவி விடுவாராம். இதற்கு 13 நிமிடங்கள் செலவாகிறதாம். ●


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சுதந்திரம்

விஜய்-ரம்பா நடித்த 'மின்சாரக் கண்ணா' படத்தைத் தயாரித்தவர் கே.ஆர்.ஜி. இதையடுத்து இவர் பிரமாண்டமாகச் செலவு செய்து தயாரிக்கும் படம் 'சுதந்திரம்'

'செங்கோட்டை' படத்தில் ஜோடியாக நடித்த அர்ஜுன்-ரம்பா இப்படத்தில் ஜோடியாக நடிக்கிறார்கள். இவர்களுடன் பிரகாஷ் ராஜ், ராதிகா, நாசர், ரஞ்சித், விவேக், வையாபுரி, சாப்பிரின்பாலு ஆகியோர் நடிக்கின்றனர்.

'மன்னன்' படத்தில் வில்லனாக நடித்த சரத் சக்ஸேனா இப்படத்தில் வில்லனாக நடிக்கிறார். எஸ்.ஏ.ராஜ்குமார் இப்படத்திற்கு இன்னிசை வழங்க, கனல் கண்ணன் அதிரடி சண்டைக் காட்சிகளை அமைக்கிறார்.

திரைக்கதை, வசனம் எழுதி இப்படத்தை இயக்குவதுடன் முக்கிய வேடமொன்றிலும் நடிக்கிறார் ராஜ்கபூர்.

## விக்ரமன் கட்டிய வீடு

விஜயகாந்தை வைத்து 'வானத்தைப் போல' படத்தை இயக்கி வரும் விக்ரமன், அழகான வீடு ஒன்றைக் கட்டியுள்ளார். கிராமப்படங்களின் பெரும்பாலான படப்பிடிப்புக்கள் நடைபெறும் பொள்ளாச்சி என்ற இடத்தில்தான் வீட்டைக் கட்டியுள்ளார்.

இந்த வீடு சொந்த உபயோகத்திற்காகக் கட்டப்படவில்லை. அதில் படப்பிடிப்புக்களை நடத்துவதற்காகவே கட்டப்பட்டுள்ளது. விக்ரமன் இயக்கும் படங்கள் மட்டுமன்றி, மற்ற படங்களின் படப்பிடிப்புக்களுக்கும் இந்த வீடு வாடகைக்கு விடப்படவுள்ளது.

இனி, படங்களில் அடிக்கடி இந்த வீட்டைப் பார்க்கலாம்.

## மறுத்தார் ரோஜா

பெருவெற்றி பெற்ற 'கிழக்கு வாசல்' வெற்றிப்படக் கூட்டணி கார்த்திக்-ஆர்.வி. உதயகுமார் இணைந்து தரவிருக்கும் புதிய படம் 'உலகை விலை பேசவா'

இப்படத்தில் கார்த்திக்கின் தங்கை வேடத்தில் ரோஜாவை நடிக்க வைக்க விரும்பினார் இயக்குநர் உதயகுமார்.

இந்த வாய்ப்பை ஒரேயடியாக மறுத்த ரோஜா, அதற்குக் கொடுத்த விளக்கம் இதோ:

"இந்தப் படத்துல கார்த்திக்கிற்கு தங்கையாக நடிச்சேன்னா, அதோட சினிமா உலகிலிருந்தே ஒரேயடியா என்னை ஒரங்கட்டிடுவாங்க. தங்கச்சி வேடத்தில் நடிக்கச் சொல்லி முத்திரை குத்திடுவாங்க. அதான் வேண்டாம்னு சொல்லிட்டேன்."

## 25 இலட்ச இரும்புச் சிறை

விஜயகாந்த் நடிக்கும் 'வல்லரசு' படத்தில் ஒரு தீவிரவாதியை இரும்புச் சிறையில் வைத்திருப்பது போன்ற காட்சி எடுக்கப்பட்டது. இந்தச் சிறைக்குள் சண்டைக்காட்சி ஒன்றும் படமாக்கப்பட்டுள்ளது.

இப்படத்திற்காக 4 தொன் எடையுள்ள இரும்பு வரவழைக்கப்பட்டு ஒருமாத காலத்தில் இந்த இரும்புச் சிறை அரங்கு அமைக்கப்பட்டது. இதற்கு 25 இலட்ச ரூபாய் (இந்திய மதிப்பில்) செலவாகியுள்ளது.

என்.மகராஜன் என்ற புதிய இயக்குநர் கதை, திரைக் கதை, வசனம் எழுதி இயக்குகிறார். வல்லரசு என்ற சி.பி.ஐ. அதிகாரியாக விஜயகாந்த் நடிக்கிறார். இயக்குநர் பி.வாசு இப்படத்தின் மூலம் வில்லனாக அறிமுகமாகிறார்.

## மீண்டும் பிரபு

பல காலமாக வெற்றிப் படங்களைக் கொடுக்காத முன்னணி நடிக்கர்களில் பிரபுவும் ஒருவர். படவாய்ப்புக்கள் குறைவாக இருந்த இவருக்கு மீண்டும் மளமளவென்று படவாய்ப்புக்கள் குவிகின்றன.

'மனம் விரும்புதே உன்னை' படத்திற்குப் பின் பிரபு நடித்து அடுத்து வெளிவரவிருக்கும் படம் 'திருநெல்வேலி'. பிரபு புதிதாக ஒப்பந்தமாகியிருக்கும் படங்கள் இவை:

இராம நாராயணன் இயக்கும் 100வது படமான 'திருப்பதி ஏழுமலை வெங்கடேசா', அன்பாலயா பிரபாகரன் தயாரிக்கும் 'தை பிறந்தாச்சு', மம்முட்டியுடன் இணைந்து நடிக்கும் 'நல்லவங்க', பாரதி இயக்கும் 'தம்பி உடையான்'.

அத்துடன் சூப்பர் குட் ஃபிலிம்ஸ் ஆர்.பி.சௌத்ரியின் புதிய படமொன்றிலும் பிரபு நடிக்கவுள்ளார்.



சாந்தினி
படம்: காதலே சாட்சி

## நகைச்சுவை நாசர்

'கண்ணெதிரே தோன்றினாள்' படத்தை இயக்கிய ரவிச்சந்திரன் தற்போது இயக்கி வரும் படம் 'சந்தித்த வேளை' கார்த்திக் சுதா நாயகனாக நடிக்கும் இப்படத்தில் நகைச்சுவை வேடத்தில் நாசர் நடிக்கிறார்.

படத்தில் மேடை நாடகக் கலைஞராகத் தோன்றும் நாசர் 'அவ்வை சண்முகி' போன்ற பெண் வேடத்திலும் தோன்றுகிறார்.

## புனே

பார்த்திப...
நடிக்கும் ஜே...
தேவாவுக்கு ஜோ...
ரேணு தேசாய்.
புனேயைப்...
புதுமுகம்...
மொரா...
தமா...



## மொட்டையடித்த இயக்குநர்

## காணவில்லை



புதுமுகம் அருண்-கே.ஆர்.வத்சலா
படம்: புதிரா புனிதமா?

திரையுலக மறுபக்கம் 128

தமிழ்நாட்டிலிருந்து மயன்

## யார் தெரியுமா இவர்?
## பார்ட்டி கொடுக்கும் நடிகை!

சமீபத்தில் இந்திய வார இதழ் ஒன்றில் 'இவரைத் தெரியுமா?' என்ற கேள்வியோடு வெளியான தகவல்களை சென்றவாரம் தந்திருந்தேன். இவரைப் பற்றி மேலும் சில தகவல்கள் இதோ:

பெண்களிடம் தொடர்பு வைத்துக் கொள்வது என்பது மன்தமராசாவைப் பொறுத்த மட்டில் நாளாந்த பழக்க வழக்கங்களில் ஒன்று.

அதிலும் தற்போது கடன்தொல்லைகளால் அவதிப்பட்டு கோர்ட், கேஸ் என்று திரியும் இரண்டெழுத்து பூ நடிகையை சிறிது காலம் தனது பிடியில் வைத்திருந்தார்.

இந்தப் பூ நடிகை பணத்தைத் தண்ணீராகச் செலவழித்து படங்களை இயக்கும் மணியான இயக்குநரைத் தீவிரமாகக் காதலித்து வருவது ம.ராசாவுக்கு நன்கு தெரியும்.

தனது கட்டுப்பாட்டில் இருக்கும் நடிகையைத் தான் நடிக்கும் ஓரிரு படங்களில் தனக்கு ஜோடியாக நடிக்க வைப்பார். சிறிது காலத்தின் பின் அவர்களைக் கழற்றி விடுவார்.

எல்லா நடிகைகளிடமும் பழகி விட்டு அவர்களைக் கழற்றி விட்டதுபோல் தற்போது பூ நடிகையையும் கழற்றி விட்டு விட்டார்.

இப்போது மராசாவின் பிடியில் இருப்பவர் மும்பாயில் இருந்து வந்திருக்கும் புதிய நடிகை ஒருவர். இவர் இரண்டெழுத்து பூ நடிகையின் சாயலைக் கொண்டவர். ம.ராசா நடிகரின் மனதில் சஞ்சலத்தை ஏற்படுத்தியிருக்கும் இந்த நடிகையின் பெயர் 'மா' என்ற எழுத்தில் தொடங்கி 'கா' என்று முடிகிறது.

இந்த நடிகை படங்களில் சான்ஸ் பிடிப்பதற்காக எதிலும் தாராளமாக இருப்பார். ம.ராசா நாயகனாக நடித்த 'வனம்' என்று முடியும் படத்தில் இவர் இரண்டாவது நாயகியாக நடித்தார்.

படப்பிடிப்பில் ஒய்வு கிடைக்கும் நேரங்களில் எல்லாம் நடிகையும், ம.ராசாவும் மேக்-அப் அறையில் படு நெருக்கமாக இருந்தார்களாம்.

முன்னணி ஏழு நடிகர்களில் ஒருவரான இந்தத் தீராத விளையாட்டுப்பிள்ளை மறைந்த நவரச நடிகரின் பிள்ளை. தற்போது அதிக படங்களைக் கைவசம் வைத்திருக்கும் ஹீரோவும் இவர்தான். இப்போது தெரிகிறதா யார் இவர் என்று.

### திரும்பி வந்தார்

'என் இனிய தமிழ் மக்களே' என்ற முன்னுரையுடன் தன் படங்களை ஆரம்பிக்கும் 'மண்வாசனை' இயக்குநரால் அறிமுகமானவர் இந்த நடிகை.

'ஆர்' என்ற ஆங்கில எழுத்தில் தொடங்கும் பெயர் மாற்றத்துடன் அறிமுகமானவர்.

எல்லாரையும் அனுசரித்துப் போகும் திறமையால், இவர் சில காலம் முன்னணி நடிகைகளில் ஒருவராக வலம் வந்தார். ரஜினி, கமல், தவிர ஏனைய முன்னணி நடிகர்களுடனும் 'டிஸ்கஷன்' நடத்தி அவர்களுடன் ஜோடியாக நடித்தார்.

ஒரு கட்டத்தில் சினிமா வாழ்க்கை வெறுத்து விட நடிப்புக்கு குட்பை சொல்லிவிட்டு இராணுவ வீரர் ஒருவரை மணந்தார்.

திருமண வாழ்க்கையெல்லாம் தனக்கு சரிப்பட்டு வராது என்பதைப் புரிந்துகொண்ட இவர் போன வேகத்தில் திரும்பி விட்டார். 'நடிகை' என்ற பெயருடன் வாழ்வதென்ற முடிவுக்கே வந்து விட்டார்.

அதற்காக தன்னோடு நடித்த ஹீரோக்களுக்கு ஃபோன் செய்து, "உங்களை நான் எப்போது பார்க்கலாம்?" என்று நேரம் கேட்டு அவர்களுடன் 'டிஸ்கஷன்' நடத்தினார். நடிகையுடன் சந்தோஷமாக இருந்து விட்டு அவர்கள் கையை விரித்து விட்டார்களாம்.

கடைசியில் தனது குருநாதரிடம் சென்று "நீங்கள் தான் எனக்கு வழி காட்ட வேண்டும்" என்று கண்களைக் கசக்கினாராம். அவரைக் கட்டியணைத்து ஆறுதல் சொன்னாராம் இயக்குநர்.

அத்துடன் தனது மகள் நடித்த படத்தில் வாய்ப்பும் கொடுத்துள்ளார்.

சினிமாவில் அக்கா, அண்ணி வேடங்கள்தான் இவருக்கு வருகிறதாம். இதனால் வெறுத்துப் போன நடிகை சின்னத்திரையில் வாய்ப்புத் தேடி வருகிறார்.

இதற்காக சின்னத்திரை தயாரிப்பாளர்கள், நடிகர்கள், இயக்குநர்களுக்கு பார்ட்டி கொடுத்து வருகிறார். இதன் காரணமாக சில தொடர்களில் நடிக்கும் வாய்ப்பு கிட்டியுள்ளதாம். 'ர'வில் தொடங்கும் நான்கெழுத்து பெயருடைய இந்த நடிகைக்கு.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## புதுமுகம்

...-பிரபுதேவா இணைந்து ...பாண்டு படத்தில் பிரபு ...டியாக நடிப்பவர் புதுமுகம்

...றப்பிடமாகக் கொண்ட இந்த ...ன்னாள் இந்தியப் பிரதமர் ...தேசாய்க்கு தூரத்து சொந்

...தமிழில் தான் புதுமுகம். ஏற் ...னவே தெலுங்கில் அறிமுக மாகிவிட்டார்.'ஆனந்த மழை' பவன் கல்யாண் ஜோடியாக 'செல்வி' என்ற தெலுங்குப் படத்தில் நடித்துள்ளார் ரேணு தேசாய்.

## காதோடு சொல்லுகிறோம்

**வா**ய்ப்பு இல்லாமல் வீட்டிற்குள் இருந்தாலும் சினிமா சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் என்றால் அதில் ஆஜராகி விடுவார்களாம் கஸ்தூர நடிகையும், செண்பக நடிகையும். அதுவும் விழாக்களுக்கு வரும்போது அனைவரின் பார்வையும் தங்கள் மீது பதிய வேண்டும் என்பதற்காக கவர்ச்சியாக உடையணிந்து வருகின்றனர்.

**தா**ய்க்குலத்தின் ஏக கெடுபிடிக்குள் இருந்த 'கனக' நடிகை இப்போது எல்லா விஷயத்திலும் சுயமாகவே முடிவு எடுக்கிறாராம். அது 'விவேக'மான நகைச்சுவை நடிகருடன் ஏற்பட்ட நட்பின் மூலம்தான் ஆரம்பமாகியுள்ளது. போயும் போயும் தமாசு நடிகருடனா நட்பு வைக்க வேண்டும் என்று புலம்புகிறாராம் 'கனக' நடிகையின் தாய்க்குலமான முன்னாள் நடிகை.

**இ**யக்குநராக 'அவதாரம்' எடுத்த முன்றெழுத்து நடிகர் 'ஆசை' நாயகனை தான் இயக்க வுள்ள அடுத்த படத்தின் ஹீரோவாக நடிக்க அட்வான்ஸ் கொடுத்தார். இதற்கு முன் 'அவதார' நடிகர் இயக்கிய இரு படங்களும் படு தோல்வி. தற்போது வர்த்தக ரீதியில் வெற்றிகளைக் குவித்து வரும் 'ஆசை' நாயகன் தன் மார்க்கெட்டைக் காப்பாற்றிக் கொள்வதற்காக, 'அவதார' நடிகரிடம் வாங்கிய அட்வான்சைத் திருப்பிக் கொடுத்து விட்டாராம்.

**தொ**ழிலில் போட்டி போடும் கவுண்டர் 'பெல்' நடிகருக்கும் வைகைப்புயல் நடிகருக்கும் நடிகைகள் விஷயத்திலும் போட்டிகள் ஏற்படும். இப்போது இவர்கள் சின்னத் திரையில் அம்மா வேடங்களில் நடித்து வரும் 'கவிதை' நடிகைக்காக மோதி வருகிறார்கள்.

## அங்கே வெற்றி

ராஜ்கிரண்-ரேவதி நடித்த 'தலைமுறை' படம் தமிழில் எதிர்பார்த்தளவுக்கு ஓடவில்லை. ஆனால் தெலுங்கில் இது 'பொப்பிலி வம்சம்' என்ற பெயரில் தயாரிக்கப்பட்டு வெளியிட்டார்கள். படம் பெரு வெற்றி பெற்றுள்ளது.

தமிழில் ராஜ்கிரண் நடித்த வேடத்தில் தெலுங்கில் டாக்டர் ராஜசேகர் நடித்துள்ளார். தெலுங்கில் இது வசூலில் புதிய சாதனை நிகழ்த்தும் என்று கூறப்படுகிறது.

## கற்றுக் கொடுத்தவர்

'இதயம்', 'காதல்தேசம்', 'காதலர் தினம்' போன்ற படங்களை இயக்கியவர் கதிர். இவர் முதன்முதலில் உதவி இயக்குநராக ஜெயதேவியிடம் பணியாற்றினார்.

கதிருக்கு படங்களை இயக்கும் முறையைக் கற்றுக் கொடுத்த ஜெயதேவியின் கணவரும் ஒரு பிரபல இயக்குநர்தான். அவர் வேறு யாரு மல்ல 'புரட்சிக்காரன்' படத்தை இயக்கி வரும் வேலு பிரபாகரன்தான்.

## பெயர் மாற்றம்

ஆர்.பி.சௌத்ரி தயாரிக்க, சரத்குமார் கதாநாயகனாக நடிக்கும் படம் 'மாயி'. ராஜ்கிரண் நடித்த 'மாணிக்கம்' படத்தை இயக்கிய பாண்டியன் தான் இப்படத்தை இயக்குகிறார், பெயர் மாற்றத்துடன்.

இப்போது இவர் தனது பெயரை சூர்ய பிரகாஷ் என்று மாற்றியுள்ளார்.

## எத்தனை நாயகிகள்?

கே.சுபாஷ் இயக்கும் 'ஏழையின் சிரிப்பில்' படத்தில் நாயகன் பிரபுதேவாவுக்கு ஜோடியாக கௌசல்யா, ரோஜா, சுவலட்சுமி அஞ்சு அரவிந்த் ஆகியோர் நடிக்கின்றனர். இப்போது இவர்களுடன் இந்துவையும் சேர்த்துள்ளனர்.

யப்பா இத்தனை நாயகிகளா? கொடுத்து வைத்தவர் பிரபுதேவா.

## கமலின் ஐடியா

கமல் தயாரித்து இயக்கி நடிக்கும் 'ஹேராம்' படத்தை டிசம்பருக்குள் முடித்துவிடத் தீர்மானித்துள்ளார்.

இருபத்தோராம் நூற்றாண்டின் முதல் தமிழ்ப்படம்' என்று சரித்திரத்தில் இடம் பெறுவதற்காக 2000ம் ஆண்டு ஜனவரி மாதம் 1ம் திகதி படத்தை வெளியிடுவதுதான் கமலின் ஐடியா.

கமலின் இந்த முயற்சி வெற்றி பெற நாமும் வாழ்த்துவோம்.

## சுதந்திரக் கிளி

வீட்டுக்காக உழைத்து உழைத்து ஓடாகி, தந்தைக்குலத்தின் கெடுபிடியில் கூண்டுக்கிளியாய்ச் சிக்கித் தவித்தவர் ரோஹினி. பின் கூண்டை உடைத்து வெளியே வந்து ரகுவரனைக் காதல் திருமணம் செய்து கொண்டார்.

ஒரு குழந்தைக்குத் தாயாகி சுதந்திரமாக சந்தோஷமாக ரகுவரனைக் கவனித்துக் கொண்டிருக்கிறது இந்தக் கிளி.

## இதெல்லாம் என்னாச்சு?

படங்களின் பெயர்களை அறிவிப்பதில் மன்னனாகத் திகழ்பவர் பார்த்திபன். 'கருப்பண்ண சாமி', 'காங்கேயம் காளை', 'சோத்துக்கட்சி' 'ப்ரியமானவளே', 'பார்க்கணும்போல இருக்கு', 'விசில்', 'இரட்டைச் சூரியன்', 'விவரமான ஆளு', 'காதல் ஒழிக', 'கல்யாணசுந்தரம்' போன்ற படங்கள் பார்த்திபன் நடிப்பதாக, இயக்குவதாக, தயாரிப்பதாக அறிவிக்கப்பட்டவை.

இவை ஆரம்பிக்கப் பட்டதாக செய்திகள் வெளியாகின. இப்போது இவையெல்லாம் என்னாச்சு?



முரளி-ரோஜா
படம்: ஊட்டி



விஜயகாந்த்-சிம்ரான்
படம்: கண்ணுபடப் போகுதய்யா

## அஜித்தின் அக்கா

ஐந்து வயதில் மேடையேறி 35 வருடங்களாக ஆடிக் கொண்டிருக்கும் பிரபல பரதநாட்டியக் கலைஞர் அனிதா ரத்னம் 'கண்டுகொண்டேன் கண்டுகொண்டேன்' படம் மூலம் சினிமாவில் நுழைகிறார்.

"படத்தின் இயக்குநர் ராஜீவ் மேனன் எங்கள் குடும்ப நாண்பர் அதனால் தான் நடிக்க ஒப்புக் கொண்டேன்" எனக்கூறும் அனிதா ரத்னம் இப்படத்தில் அஜித்குமாருக்கு அக்காவாக நடிக்கிறார்.

## ...யாச விஸ்வஜித்

...ராணி விஜயசாந்தி நடித்து ...டிக் கொண்டிருக்கும் ...தில் சர்வதேச தீவிர ...த்தில் நடித்தவர் ...ப் பயிற்சியாளர் ...த்துளர். ...பட பல ...டைக் ...வெ...





## மினி சினி

★'கண்ணோடு காண்பதெல்லாம்' படம் சுமாராக ஓடியிருந்தாலும் அதன் இயக்குநர் பிரபு, பாஸ் மார்க் வாங்கி விட்டார். இவர் அடுத்து அஜித்குமார் நடிக்கும் படத்தை இயக்கவுள்ளார்.

★ 'ஹேராம்' படத்தில் முன்னாள் இந்தி நடிகை ஹேமமாலினி கமலுக்கு மாமியாராக நடித்துள்ளார்.

★ 'ஜோடி' வெற்றிப்படம் இந்தியில் தயாராகவுள்ளது. தமிழில் பிரசாந்த்-சிம்ரான் நடித்த வேடங்களில் இந்தியில் ஷாருக் கான்-ஐஸ்வர்யா ராய் நடிக்கவுள்ளார்கள்.

★ குணச்சித்திர வேடங்களில் நடித்து வரும் கே.ஆர். விஜயாவின் சகோதரி கே.ஆர். வத்சலா, 'இது புதிரா புனிதமா' படத்தில் படு கவர்ச்சியாக நடித்து வருகிறார்.

★ 'கைவிளக்கு' என்ற படத்தைத் தயாரித்து வருபவர் நியூஸிலாந்து நாட்டைச் சேர்ந்த ரிச்சர்ட் என்பவர். இவர் 'விஜயகாந்தின் 'வல்லரசு' படத்தில் முக்கிய வேடத்தில் நடித்து வருகிறார்.

★ 'ஊட்டி' படத்தில் கவர்ச்சியான உடையில் ஒரேயொரு பாடலுக்கு நடனமாடியிருக்கும் பானு, பெருவெற்றிபெற்ற 'குப்த்' இந்திப் படத்திலும் ஒரேயொரு பாடலுக்கு நடனமாடியுள்ளார்.

★ 'கேசவன்' படத்தின் மூலம் யுகபாரதி என்பவர் பாடலாசிரியராக அறிமுகமாகிறார். இவர் 'கணையாழி' என்ற சஞ்சிகையில் உதவி ஆசிரியராகப் பணிபுரிந்து வருகிறார்.

★ 'ஹிட்' இது தமிழில் தயாராக இருக்கும் புதிய படமொன்றின் பெயர். இப்படத்தின் கதாநாயகனாக நடிப்பவர் பிரபல ஓரிய நடிகரான சித்தானந்த் முன்னா என்பவர்.

★ ரஞ்சித்தைத் திருமணம் செய்து கொண்ட பிரியாராமன் திருமணத்திற்குப் பின் நடிக்கமாட்டேன் என்று கூறியிருந்தார். இப்போது அதில் மாற்றம். மறுபடி நடிக்க வந்துவிட்டார். பெரிய திரையில் அல்ல, சின்னத்திரையில்.

★ அரவிந்தசாமியை வைத்து 'சாசனம்' படத்தை இயக்கி அதை வெளியிட முயற்சி செய்து வரும் மகேந்திரன் அடுத்து விஜய் நடிக்கும் படமொன்றை இயக்கவுள்ளார்.

## திருப்தி அடைந்ததில்லை
## பிரசாந்த் பேட்டி

இந்த இருபத்தியாறு வயது இளைஞனின் வயதையொத்த நாயகர்கள் கல்யாணம், காதல் என்றிருக்க இவர் மட்டும்தான் தன் பாதையை சரியாகச் செப்பனிட்டுக் கொண்டிருக்கிறார். அவர் வேறு யாருமல்ல இளம் நாயகன் பிரசாந்த். அவரது பேட்டியில் இருந்து சில துளிகள்:

**கேள்வி: காதல்மீது உங்களுக்குப் பிடிப்பு இல்லையா?**

**பிரசாந்த்:** அய்யய்யோ! நான் ஒன்றும் சாமியார் இல்லை. நெஞ்சு நிறைய காதல் பூத்துக் குலுங்கத்தான் செய்கிறது. ஆனால் இந்தப் பூந்தோட்டத்தில் பூப் பறிக்கத்தான் சரியான பெண் சிக்கவில்லை.

**கே: சினிமாவில் நிலையான இடத்தைப் பிடித்து விட்டீர்கள். இது திருப்தி அளிக்கிறதா?**

**பிர:** உண்மையைச் சொல்வதென்றால் இதுவரை நான் எந்த விஷயத்திலும் திருப்தி அடைந்ததில்லை. இன்னும் இன்னும் புதிய விஷயங்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்ற துடிப்புத்தான் அதிகமாக உள்ளது.

**கே: உங்களைப் பற்றி கிசுகிசுக்கள் அவ்வளவாக வருவதில்லையே ஏன்?**

**பிர:** நானுண்டு என் வேலையுண்டு என்று எந்த வம்புக்கும் போகாமல் இருக்கிறேன். நடிப்பில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிறேன். எனவேதான் என்னைப் பற்றிய கிசுகிசுக்கள் வருவதேயில்லை.

**கே: சினிமாவுக்கு வந்து 8 வருடங்கள் ஆகிவிட்டன. இன்னமும் இவர் இயக்கத்தில் நடிக்கவில்லையே என்று ஏங்க வைக்கக்கூடிய இயக்குநர்கள்?**

**பிர:** சினிமாவை இயக்கும் எல்லா இயக்குநர்களின் படத்திலும் நடிக்க வேண்டும் என்பதே என் விருப்பம். பாலச்சந்தர், பாரதிராஜா, பாக்யராஜ், விக்ரமன், கதிர், கஸ்தூரி ராஜா, ராஜீவ் மேனன், ரவிக்குமார், உதயகுமார், களஞ்சியம், சுந்தர்.சி, வி.சேகர், வின்சென்ட் செல்வா, பாலசேகரன், வாசு, சுந்தர்.

## சர்ச்சைக்குரிய கதை

தம்பி மனைவி மீது கண் வைத்த அண்ணன் பற்றிய கதை 'வாலி'. இப்படத்தை இயக்கியவர் எஸ்.ஜே.சூர்யா. இவர் அடுத்து இயக்கும் படம் 'குஷி'. விஜய்- ஜோதிகா ஜோடியாக நடிக்கிறார்கள்.

'வாலி' படத்தின் கதையைப் போன்று 'குஷி' படத்தின் கதையும் சர்ச்சைக்குரியதுதானாம். இதில் அம்மா-மகள் இருவரையும் காதலிக்கிறாராம் நாயகன். இது எங்கே போய் முடியுமோ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## அணைந்துவிட்ட அற்புதன்

அற்புதமான
படைப்புககளை
அள்ளித் தந்த
அற்புதராஜனே..!
நீ!
அநியாயமாக
அற்பர்களால்
அழிக்கப்பட்டு
விட்டாய்!
❀
இல்லை–இல்லை,
அற்புதமானவனாக
ஆக்கப்பட்டுவிட்டாய்!
❀
அன்புள்ளவனே!
உன்,
அற்புதப் படைப்புக்கள்
என்று வருமென்று
வழிமேல்– விழிவைத்து
கடையடிகளில்
காத்திருந்தோம்:
பார்த்திருந்தோம்!
❀
அத்தனைகளிலும்
அள்ளிப்போட்டு மண்ணை
அமரனாகி விட்டாய்!
என்றுனை
இனிக் காண்போம்?
❀
ஏக்கங்கள் கலைந்து
இனிப்புடன் வாழ்வோம்?
இனியவனே!
இலை மறை காயாக
இருந்துகொண்டு
எத்தனை புதுமைகளை
எமக்களித்தாய்
எழுத்தாக!
❀
இனி என்று காண்போம்
அற்புதன் என்ற பெயர(றை)?
❀
அச்சாகும் முரசத்தில்
நீ,
உருவத்தால் மட்டுமே
அழிக்கப்பட்டாய்!
❀
உருவாக்கிச் சென்ற
எழுத்துக்கள்
உலகம் உள்ளளவும்
உன்னை
நினைவு கூரும்!
❀
இளஞ்சிங்கமே!
நீ
இப்பிறவியிலே
இரும்பிதயங்
கொண்டோரால்
சரித்திரமாக்கப்
பட்டுவிட்டாய்...!
❀
இனி எப்பிறவியிலும்
இப்படியான
அகால மரணத்தை
ஆண்டவன்
உனக்களிக்க
வேண்டாமென
வேண்டி–
உன்
ஆத்ம சாந்திக்காக
பிரார்த்தித்து
நிற்கிறோம்!

மகாவளையூர் மணியம்
–ஹேவாஎட்டை.

## ஆயிரமாயிரம் மலரட்டுமே!

எந்த முரசு! எந்த முரசு!
அது தமிழ் முரசெனும்
தினமுரசு!
பரவலாக வாழும் தமிழ்க்கரங்களில்
பவனிவரும் தினமுரசே!

பல்சுவை உட்பட அரசியல்,
அதிரடி ஐயாத்துரை,
அல்பிரட் முதல் காமினிவரை,
ஏந்திய எழுத்துக்களால்
தினமுரசு!
தமிழின மிகு தனித்துவம் கொண்ட
தனிப் பெருமை கொண்ட
தமிழ் தினமுரசு!

முதல் முரசு படித்ததும், மறுமுரசு
என்று வருவருமென ஏங்கித்
துடித்த இதயம்!
மலையக மக்களுக்கு
கலங்கரை விளக்காயமைந்த
கருவூலமான முரசு!

மலையகத்தில் மலர்ந்தவன் நான்!
மனோ வலிமைக்கு மெருகூட்டியது
உந்தன் கம்பீர ஆக்கங்கள்!
உந்தன் இதயத்தில் உதித்த படைப்பினை
உலக கரங்களுக்கு அற்புதமாய்
அற்புதன் எனும் புனை பெயரில்
அரும் பெரும் அரசியல் தொண்டினை
அவனிக் களித்தாயே!

வாள் முனையைவிட பேனாமுனை
போராற்றலென்ற பெருமையை
நின் தினமுரசு வாயிலாக
உலக விஞ்சிய படைப்பினை
ஈன்று உள்ளத்தில் முத்திரையாய்
இடம் பெற்றாயே!

உந்தன் மறைவை(க்) கேட்ட
'மலையகம்' மண்புழுபோற்
துடியாய்த் துடித்ததே!
தீர வீர தியாகிகளை
நேர் வழியின்றி அழிக்கும்
கொடுந் துரோகிகளை அழிக்க
அற்புதராஜாவாக ஆயிரமாயிரம்
மலரட்டும் எம்மண்ணில்!

மாஸ்டர் எஸ். பொன்னையா–
கொட்டகலை.

## உள்ளத்தை உலுக்கும் காட்சி



பாலஸ்தீனம் மீதான இஸ்ரேலிய ஒடுக்குமுறைக்கு ஓர் உதாரணம் தான் இந்தக் காட்சி. கைதுகள், வதைகள் எனப் பல கொடூரச் செயல்களைக் கட்டவிழ்த்துவிடும் ஆக்கிரமிப்பாளர்கள்–அச்செயல்களைச் செய்ய அஞ்சுவதும் இல்லை, யார்மீதும் இரங்குவதும் இல்லை.

அப்பாவி பாலஸ்தீன இளைஞன் ஒருவனை இஸ்ரேலிய பொலிஸார் கைது செய்து அடித்து இழுத்துச் செல்கின்றனர். தனது மகன் படும் அவலங்களைக் கண்டு கதறி அழுது கண்ணீர் வடிக்கிறார் அந்த இளைஞனின் தாய். தான் படும் வேதனைகளை மறந்து தன் தாயை ஒரு முறை திரும்பிப் பார்க்கிறான் இளைஞன்.

பார்ப்போர்
மனதை உலுக்கும்
இந்த காட்சியை
எமக்கு அனுப்பியவர்,
எம்.நியாஸ்-டோஹா.

## தேன் கிண்ணம்

## அற்புத மரணம்

உன் மரணம்!
இல்லை...
இல்லை...!
அது மரணம் இல்லை!
..
உன்னை
உலகுக்கு அறிமுகப்படுத்த
இறைவன் தேர்ந்தெடுத்த
மார்க்கம்!
..
உனக்கு
இல்லை இனித் தோல்வி
என்பதையுணர்ந்த
கோழைகள்
உன்னில் நடத்திய
ஈனச்செயல்!
..
உன்னோடு
ஜனநாயகம் சாய்ந்த
பரிதாப
நிமிடம்!
..
உன்னிடம்
காலன் கேட்ட
கடைசிப் பிச்சை
உதிரம் கொடுத்து
நீ செய்த
அற்புத தர்மம்!
..
இல்லை
அது மரணம் இல்லை!

எஸ். காமிலா–
கெக்கிராவை.

## யார் இவர்?



மொழு மொழு கன்னத்துடன் இருக்கும் இந்தக் குழந்தை. இன்று ஒரு முன்னணி கதாநாயகி, குடும்பப்பாங்கான வேடங்களில் வெளுத்து வாங்கும் இவரை யார் என்று கண்டு பிடித்திருப்பீர்கள் தானே? விடையைச் சரிபார்க்க புரட்டுங்கள், 18ம் பக்கத்தை.

## நீ இலையல்ல...! மரம்

அற்புதம் கோடி
அகிலத்தில் நிகழ்த்திய
அற்புத ராஜாவே!
அதிர்ந்து போனேன்...
உன் அகாலம் கேட்டு!
**
உன்னைப்போல்
எத்தனை முத்துக்கள்
இங்கே
உதிர்ந்துபோயின?
**
புத்தாயிரப் புலர்வுக்குமுன்னே
இத்தாயிரத்தோடு
எம்மைவிட்டு
மறைந்து போன
தேசத்து சொத்தே!
உன் இழப்பை
யாம் எங்கு தேடுவது?
**
சிட்டான சின்னப்
பருவத்திலே
ஈன்றவரை
இழந்து தவித்தாய்!
புகழ் பாராது
சேவைப் புரிந்தாய்!
குடும்பத்தோடு
கொஞ்ச நாளே
குதூகலிக்கச் செய்தாய்!
**
உன் பேனையின்
சுழற்சியில்
சமூகம் விழிப்படைந்தது!
துப்பாக்கி ரவையின்
சீறலில்
உன் உயிர் பிரிந்தது!
**
எத்தனை அஞ்சலிகள்
குவிந்தாலும்
அற்புத சேவகன்
அற்புதனை
எங்கே தேடுவது?
**
உன் மறைவு
உதிர்ந்த இலையல்ல;
விழுந்த மரம்!
உன்னை
எம் ஆயுள் வரை
உள்ளம் மறக்காது!

எம். ஸாலிஹ் அஸீம்– புத்தளம்.

## பேனா நண்பர்



பெயர்: ஏ. பர்ஸான்,
வயது: ---
முகவரி: ஹிஜ்ராபுரம், கொழும்பு வீதி, பாலாவி.
பொழுது போக்கு: பத்திரிகை.



பெயர்: ஜே. ஜஸ்ரின்
வயது: 20
முகவரி: 28/1.ஏ.வி.ரோட், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
பொழுது போக்கு: பத்திரிகை.



பெயர்: எம். மயிலாஷன்.
வயது: 19
முகவரி: 1, முதலாம் குறுக்குத் தெரு, சித்தி விநாயகர் வீதி, கல்லடி, மட்டக்களப்பு.
பொழுது போக்கு: ரீ.வி. வானொலி.

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கானா'

05.12.99 முதல் 11.12.99வரை

**மேடம்:**
மனதில் மாற்றம் காணப்படும். எடுத்த விடயங்கள் தடை தாமதத்துடன் நடைபெறும். பணவரவு, பொருள் நன்மைகள் வருவதுடன் வெளியார் உறவு வரவுக்கும் இடமுண்டு. வார இறுதியில் நோய் துன்பமும் மனதில் கஷ்டமும் அலைச்சலும் ஏற்படும். இவ்வாரம் ஓரளவு சீராக அமையும். பரணிக்காரருக்கு பணவசதி ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 2.
அதிஷ்ட திகதிகள் : 7, 11.

**இடபம்:**
ஆறில் சுக்கிரன் சிறப்புப்பெற்றிருப்பதால் மனதில் சந்தோஷம் காணப்படும். பண, பொருள் வசதிகள் உயரும். கல்வி, பரீட்சைகள் சீராக அமையும். சுபகருமங்களுக்காக காத்திருப்போர் நல்ல செய்திகளைப் பெறுவார்கள். ரோகிணி நட்சத்திரருக்கு கடுமையான நோய் துன்பமும் மனகஷ்டமும் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம்: இளஞ்சிவப்பு; எண் : 9.
அதிஷ்ட திகதிகள் : 6, 9.

**மிதுனம்:**
7 இல் புதன் கிரகபல நிலை என்பன சிறப்பான முறையில் உள்ளதால் தொழில் கல்வி. உயர்வுகளைக் கொடுக்கும். புதிய திட்டங்கள் நடைமுறைக்கு வரும். பெண்களுக்கு மகிழ்ச்சியான வாரமாகும். திருவாதிரை, புனர்பூச நட்சத்திரருக்கு வருமான வசதி ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள்: வெள்ளி, திங்கள்.
அதிஷ்ட நிறம்: பச்சை; எண்: 6.
அதிஷ்ட திகதிகள்: 6, 11.

**கடகம்:**
எடுத்த விடயங்கள் நடைதாமதப்படும். உறவினர் வழியில் சிக்கல்கள் ஏற்படும். பணவரவு தடைப்படும். கணவர்-மனைவி வழியில் பிரச்சனைகள் தொடரும். பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி நிலை மனதில் கஷ்டத்தைக் கொடுக்கும். பூச நட்சத்திரர் சில நன்மைகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: வியாழன், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: இளமஞ்சள்; எண்: 2.
அதிஷ்ட திகதிகள்: 11, 09.

**சிம்மம்:**
எடுத்த கருமங்கள் வெற்றிபெறும். புதிய உறவினர் நண்பர்கள் சேர்க்கையும், குடும்பத்தில் தாய்தந்தையர் மகிழ்வும் காணப்படும். தொழில் நிலை பலமாற்றங்களை ஏற்படுத்தும். புகழ்பெறும் காலபலனாக கிரகபலம் காணப்படுகிறது. மக. உத்திரக்காரர்கள் மன மகிழ்வைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 5.
அதிஷ்ட திகதிகள்: 6, 10.

**கன்னி:**
ஏதோ ஒருவித தவிப்புக் காணப்படும். வேலைப்பளு கூடிக்கொண்டிருக்கும். இருப்பிட அமைப்பு நகர்வு ஏற்படும். பண விடயக்குழப்பங்கள், சகோதரர்களுடன் சிக்கல்கள் என்பன ஏற்படும். அத்தப் பெண்களுக்கு பிரயாணபலன் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், புதன்.
அதிஷ்ட நிறம் : மரூன், எண்: 9.
அதிஷ்ட திகதிகள்: 7, 9.

**துலாம்:**
மனதை கொள்ளையிடும் நிகழ்வு நடைபெறும். எதிர்பார்த்த முன்னேற்றம் வீடுதேடிவரும். மனதில் உயர்வு காணப்படுவதுடன் கல்வி வளர்ச்சிகள் சீராகச் செல்லும். வார இறுதி பல முக்கிய நபர்களைச் சந்திக்கும் வாய்ப்புண்டு.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், சனி.
அதிஷ்ட நிறம்: றோஸ்வர்ணம்; எண்: 5.
அதிஷ்ட திகதிகள்: 5, 10.

**விருட்சிகம்:**
பல வருடங்கள் வாட்டிவதைத்த கவலைகள் மறையும். குடும்பத்தில் சுபநிகழ்வு, நல்ல செய்திகள் மனதை தெளிவுற செய்யும். எதிர்பார்த்த பணம் இவ்வாரம் வந்துசேரும். பிள்ளைகளால் பெருமை வந்து சேரும். கேட்டை நட்சத்திரருக்கு யோகபலம் கைக்கூடும்.
அதிஷ்ட நாட்கள்: செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 1.
அதிஷ்ட திகதிகள்: 10, 11.

**தனுசு:**
ஐந்தில் கிரகபலம் கூடுவதால் கல்வி, உயர்வையும், புதிய சந்தர்ப்பங்களையும் தரும். குடும்ப உறவினர்களின் மகிழ்ச்சிக்குரிய சம்பவங்கள் நடைபெறும். ஆலயதரிசனமும் ஏற்படும். இடமாற்ற அமைப்பு திட்டமிடப்படும். உத்திராடக்காரர் நன்மைகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், செவ்வாய்.
அதிஷ்ட நிறம்: இளநீலம்; எண்: 6.
அதிஷ்ட திகதிகள்: 6, 9.

**மகரம்:**
உடல் நலம் பாதிக்கப்படலாம். புகழ், கௌரவம் பாதிக்கப்படும். பல கருமங்கள் ஒத்திப் போடப்படும். அல்லது தாமதமடையும். பிரயாணங்களில் கவனம் தேவை. பெண்களுக்கு சிக்கலான வாரமாக அமையும். திருவோணக்காரர் கவனம் தேவை.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம்: சிவப்பு; எண் : சனி.
அதிஷ்ட திகதிகள்: 5, 10.

**கும்பம்:**
எடுத்த முயற்சிகள் தோல்விகளைக் கொடுத்தாலும் பணவசதிகள் பெருகும். பிறரின் மனக்கஷ்டம் இவர்களைப் பாதிக்கும். தூரதேச தொடர்பு முடக்கப்படும். தொழில் முயற்சிகள் ஓரளவு வெற்றி பெறும். அவிட்ட, சதயக்காரர் கொடுக்கல் வாங்கல்களில் அவதானம் தேவை.
அதிஷ்ட நாட்கள்: வியாழன், செவ்வாய்.
அதிஷ்ட நிறம்: பிங் வர்ணம்; எண்: 11.
அதிஷ்ட திகதிகள்: 11, 10.

**மீனம்:**
சகோதரரின் முன்னேற்றம் சீராக அமைவதுடன், குடும்பத்தில் பாரிய மாற்றம் ஏற்படும். பிள்ளைகளால் உதவியும் புதிய கல்வி, தொழில் முயற்சிகள் கைகூடக் கூடியவாறு காணப்படும். ரேவதி உத்திரட்டாதிகாரர் நன்மையடைவர்.
அதிஷ்ட நாட்கள்: திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம்: வெள்ளை; எண்: 3.
அதிஷ்ட திகதிகள்: 6, 9.

## நில்-கவனி-முன்னேறு

தாழ்வு மனப்பான்மைதான் முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாய் இருக்கிறது. இது நம்முடனே இருந்து கொண்டு நமக்கு எதிராகச் சதி செய்கிறது. பிறரைவிட நம்மைத் தாழ்வாய் எண்ணிக் கொள்ளும் எண்ணமே நம்மைச் செழிப்புடன் வாழ வைக்காமல் செய்து விடுகிறது.

நெப்போலியனுடைய வரலாற்றில் இது இருக்கும் இடம் தெரியாமல் ஓடிவிட்டது. தன்னுடைய தாழ்ந்த குடிப் பிறப்பைப் பற்றியும் சிறிய உடலமைப்பைப் பற்றியும் இவர் கொண்டிருந்த நினைவு அலைகள் தான் ஃபிரான்ஸ் நாட்டு மன்னராக்கியது. இருக்கும் நிலையை விட்டு உயர்வான நிலையை அடைந்தே தீருவது என்று கங்கணம் கட்டிக் கொண்டு செயலாற்றியதன் பலன்தான் மாவீரரானார்.

இளம் வயதில் சர்ச்சிலுக்குச் சொற்கள் திக்கியது. தொடர்ந்து பேச முடியவில்லை. இதனை எப்படியும் மாற்றிக் காட்ட வேண்டும் என்ற வைராக்கியத்துடன் செயலாற்றியதனால்தான் ஆங்கில நாட்டின் அதிபதியானார்.



வலிமையற்ற எண்ணத்தின் காரணமாக நமக்குத் தோல்விப் படுகுழியை நாமே தோண்டிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டு விடுகிறது; நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியையும் கண்டு நகைக்கிறது. நாமும் அதற்கு அடிபணிந்து விடுகிறோம்.

நமக்கு எதிராய் புரட்சி செய்கிறது. இறுதியாய் நம்முடைய நம்பிக்கை, முயற்சி எல்லாம் சின்னாபின்னமாக்கப்பட்டு சிதறடிக்கப்படுகிறது. அளவுக்கு மீறிய எச்சரிக்கையாக இருந்து ஒன்றுமே செய்ய முடியாமல் போய் விடுகிறோம்.

பிறரைக் கண்டு நாம் கொள்ளும் தவறான கூச்சம் நம்முடைய வாயில் பெரிய முத்திரையிட்ட சீலை வைத்து விடுகிறது. எனவே பிறர் முன்னிலையில் நாம் வாயில்லாப் பிராணியாய் தலையாட்டும் பொம்மையாய் ஆகிவிடுகிறோம்.

நம்முடைய வாயிலிருந்து ஒரு சொல் வெளிவர பெரும்பாடுபட வேண்டியிருக்கிறது. இதன் காரணமாக நம்முடன் பேச விரும்புவோர்க்கு தங்களுடைய தொடர்பை விரும்பாது ஒதுக்கித் தள்ளி விடுவது இயல்பாகி விடுகிறது.

நம்மைப் பார்த்து மற்றவர்கள் மிகைப்படுத்தி நினைத்துக் கொள்ள நாமே காரணமாக இருந்து விடுகிறோம். அதற்கு அனுமதியும் அளித்து இருக்கிறோம்.

இதன் காரணமாக ஒருவருக்கு ஒருவர் கொள்ளும் நல்ல எண்ணத்தின்மீது ஏற்பட வேண்டிய அன்புத் தொடர்பு உண்டாக வழியில்லாது போய் விடுகிறது.

அற்ப விஷயங்களுக்கெல்லாம் நம்முடைய தன்மானம் பாதித்து விடுகிறது. பெரிய அவமானம் ஏற்பட்டு விட்டதாகவும் கருதிக் கொள்ள வேண்டியிருக்கிறது. நம்மைப் பற்றி நாமே தவறான தன்மதிப்பைக் கொண்டிருப்பதாலேயே இவ்விதம் எண்ண வேண்டியிருக்கிறது.

நாம் எங்கிருந்தாலும்- எந்த இடத்தில் இருந்தாலும்- நாம் நாமாகவே இருப்போம் என்ற எண்ணம் நமக்கு ஏற்பட்டு விட்டால் எந்தவித தாழ்வு மனப்பான்மைக்கும் ஆட்படமாட்டோம்.

இந்த உலகில் நாம் நிரந்தரமாக நிலைத்து நின்று என்றென்றும் உயிருடன் வாழ்ந்துவிட இயலாது. மரணத்தை நாம் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். இது இயற்கையின் கட்டளை. நாம் கட்டுப்பட்டே ஆகவேண்டும்.

வாழ்க்கையே நிரந்தரமாக இல்லாத போது தாழ்வு மட்டும் ஏன் நீடித்து நிற்கவேண்டும்! இதுவும் நழுவிச் செல்லக் கூடியதுதான்.

அதிகாரத்தின் உருவமாக நின்று அனைவரையும் ஆட்டிப்படைத்த மாபெரும் அரசன் என்பதற்காக மரணம் அவரை விட்டு வைக்காது.

மனித குலத்தின் முன்னேற்றத்திற்காக அல்லும் பகலும் பாடுபட்டு உழைத்து உலகமே புகழும் படியாகவே புதுமைகளைக் கண்டுபிடித்த அறிஞரும் ஒருநாள் மரணத்தைத் தழுவியே ஆக வேண்டும்.

இப்படி மரணம் எல்லோரையும் அழைத்துக் கொண்டே இருக்கும் பொழுது இடைப்பட்ட காலத்தில் ஏற்பட்ட தாழ்வை நம்மால் நீக்கிவிட முடியாதா? கட்டாயம் முடியும்- நாம் முயன்றால்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## தூக்கம் கண்களைத் தழுவ....!



உறக்கம் மிக இன்றியமையாதது. உறக்கத்தை வெறும் ஓய்வு என்று கருதலாகாது. மனோரீதியான சக்திக்கும், உடல் ரீதியான ஆரோக்கியத்திற்கும் உறக்கம் மிகத் தேவையானதாகிறது.

தூக்கம் தொடர்ந்து இல்லாமல் போனால் மனநெருக்கடி ஏற்பட்டு மனநிலை பாதிக்கப்படும்.

நன்றாகத் தூக்கம் வரவேண்டுமானால், வீடு எவ்வாறு அமைந்திருக்க வேண்டும்?

- ❖ படுக்கை அறை ஒருபோதும் சமையல் அறைக்கு அருகில் அமைந்திருக்கக் கூடாது. சமையல் அறையில் இருந்து வெளியேறும் உஷ்ணமும், மணமும் தூக்கத்தைப் பாதிக்கும்.
- ❖ வயிறு நிறையச் சாப்பிட்டுவிட்டு படுக்கைக் குச் செல்லக்கூடாது.
- ❖ தூங்கச் செல்வதற்கு முன்னால் 'காபி' அருந்தக்கூடாது.
- ❖ மது அருந்தினால், தொடர்ச்சியாக வெகுநேரம் தூக்கம் வராது.
- ❖ தூங்கச் செல்வதற்கு முன்னால் கை, கால், முகம் கழுவி பல்லும் தேய்த்து விடுங்கள்.

இவை நன்றாக தூக்கம் வர உதவும்.

- ❖ தலையை கிழக்கு பக்கமாக வைத்து தூங்குங்கள்.
- ❖ வலது புறமாக சரிந்து படுப்பது தூக்கத்திற்கு ஏற்றது.
- ❖ மேற்குப் பக்கமாக தலை வைத்துப்படுத்தால், கெட்ட கனவுகள் தோன்றும்.
- ❖ உடல் நலக்குறைவு இருக்கும்போது, எக்காரணம் கொண்டும் வடதிசையில் தலைவைத்துப் படுக்க வேண்டாம். தூக்கம் கெடும்.
- ❖ இசை கேட்டபடி தூங்கினால் விரைவாக தூக்கம் வரும். உளமும் அமைதியடையும்.

## கண்களைப் பேணுங்கள்

**கண்களின் சக்தியையும் ஆரோக்கியத்தையும் அழகையும் பாதுகாப்பது எப்படி?**

- ♦ முருங்கை இலைக்கீரையை தினசரி உணவில் சேருங்கள்.
- ♦ மேக்-அப் செய்யும் போது 'மஸ்கரா'வை கண்களில் புரட்ட வேண்டாம்.
- ♦ தொடர்ந்து புத்தகம் படிக்காமல் அவ்வப்போது கண்களை மூடி ஓய்வு கொடுங்கள்.
- ♦ அருகில் இருந்தும் தொடர்ச்சியாகவும் தொலைக்காட்சி பார்க்க வேண்டாம்.
- ♦ புத்தகம் படிக்கும்போது இடது பக்கமாக வெளிச்சம் பாய வேண்டும். மங்கலான வெளிச்சத்தில் படிக்கக்கூடாது.
- ♦ தினசரி 5 தடவையாவது சுத்தமான நீரால் கண்களைக் கழுவுங்கள்.
- ♦ பயணம் செய்யும்போது புத்தகம் வாசிப்பதை தவிர்க்கவும்.
- ♦ கண் மருத்துவர்கள் தரும் மருந்தை தவிர வேறு எதையும் கண்களில் விடவேண்டாம்.
- ♦ உணவில் காய்கறிகளை அதிகம் சேருங்கள்.
- ♦ தூங்கும் முன்பு கண்களை சுத்தமான தண்ணீரால் கழுவுங்கள்.
- ♦ கண்களுக்கு தொடர்ந்து சோர்வு ஏற்பட்டால் தலையிலும் கால் பாதங்களிலும் நல்லெண்ணை தேயுங்கள்.
- ♦ கண்களில் துகள் ஏதாவது விழுந்து விட்டால், கண்களை கசக்க வேண்டாம்.

## சிறந்த வழி எது?



உடலை கட்டுப்கோப்பாக வைத்துக் கொள்வதற்கு இன்று பலர் உணவைச் சுருக்குவதுதான் சிறந்த வழி என்று நினைக்கிறார்கள்.

ஆனால் இது பெரிய தவறு என்கிறார் ஜோசப் டபிள்யு. மசோன் என்னும் உணவியல் துறை நிபுணர்.

"உடல் எடையைக் குறைப்பதற்கு உணவு வகைகளை மாற்றி அமைப்பதுதான் சிறந்த வழி. தினமும் ஒரே மாதிரியான உணவு சாப்பிடுவதை தவிர்த்து பலவித கலப்பு உணவுகளைச் சேர்த்துக் கொண்டாலே போதும் உடல் எடை சமப்பட்டு விடும்!" என்கிறார் இவர்.

இதில் இன்னொரு இலாபமும் உள்ளது. இதுபோன்ற கலப்பு உணவுகளைச் சாப்பிடும் போது மாரடைப்பு வருவதும் தவிர்க்கப்படுகிறது.

"கொழுப்பு வகை உணவுகள் அதிகம் சேர்ப்பதை தவிர்த்தாலே போதும். உடல் எடை கட்டுக்குள் இருக்கும்" என்கிறார், ஜோசப் மசோன்.

கலப்பின உணவில் பலவிதமான காய்கறிகள், தானியங்கள், இறைச்சி வகைகள் அடங்கும். இவற்றில் புரோட்டின் சத்தை அளவுக்கு அதிகமாக சாப்பிடுவதும் ஆபத்தானது.

உணவுக் கட்டுப்பாட்டை கடைப்பிடிப்பவர்கள் அதிகமான எடையை இழக்க நேரிடும். இது உங்கள் உடல் நலத்துக்கும் கேடானது. அதனால் 'டயட்' வேண்டவே வேண்டாம்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** GS

பெயர்:.............................

முகவரி:.............................

.............................

தொழில்:.............................

கையொப்பம்:.............................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 11-12-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


வழங்குவது 16 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

மோனிக்கா சுய நினைவுக்கு வந்த வேளையில் ஜனாதிபதி கிளின்ரன் அவளருகில் நின்றார். அவருடைய வலது கரம் அவளுடைய வலது கரத்தை தேடி வந்து தொட்டதை அவள் உணர்ந்தாள். கையை விரித்து கிளின்ரனின் கையை வலுவாக இறுக்கினாள். கிளின்ரனின் முகத்தில் ஒருவித தாப உணர்ச்சியை மோனிக்காவால் உணர முடிந்தது.

கிளின்ரன் அவளுடைய கையை சற்று வலுவுடன் அழுத்தினார். உளவள ஆற்றல் துறையில் ஈடுபாடு கொண்டுள்ள மோனிக்காவால் அந்த அழுத்தத்தின் கருத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது. அவள் விடுத்த வினாவுக்கு விடை கிடைத்து விட்டது. வோஷிங்டன் குளிரிலும் அவளது தேகம் வியர்த்துக் கொட்டியது. அழகும், கவர்ச்சியும் இணைந்த புன்னகையை உதிர்த்துவிட்டு மற்றவர்களுக்குக் கைகொடுக்க நகர்ந்தார். தொடர்ந்து வந்த 10 நிமிடங்களுக்குள் ஒரு நிமிடத்துக்கு ஒரு தடவையாவது கிளின்ரன் மோனிக்காவைத் திரும்பிப் பார்த்துக்கொண்டே நகர்ந்தார்.

இந்தச் சந்தர்ப்பத்தையிட்டு மோனிக்கா பின்னர் கருத்துக் கூறுகையில், "இந்த மனிதன் மீது ஏன் பெண்கள் பித்துப்பிடித்து அலைகிறார்கள் என்பதற்கான பதிலைக் கண்டு கொண்டேன். அவருடைய கை என்னுடைய



கையை அழுத்தியதும், நான் என்னை மறந்தேன். என்னருகில் பலர் நிற்கிறார்கள் என்பதையும் மறந்தேன். அவரும் நானும் தான் எங்கோ வானவெளியில் கை கோர்த்து உலாவுவது போன்ற உணர்வைப் பெற்றேன்.

அவருடைய கண்கள் என் ஆடைகள் அனைத்தையும் நீக்கி என் அங்கங்கள் ஒவ்வொன்றையும் அலசி ஆராய்ந்தன. அந்தப் பார்வையை நான் உளப்பூர்வமாக இரசித்து சுவைத்தாலும், என் காதருகே யாரோ எதையோ கிசுகிசுத்ததை உணர்ந்து சுய நினைவை அடைந்தேன்!" என்று தன் சிநேகிதிகளிடம் கூறினாள்.

மோனிக்காவின் காதில் கிசுகிசுத்தவள் வேறு யாருமல்ல; மோனிக்காவை வெள்ளை மாளிகை பயிற்சிக்காகச் சிபாரிசு செய்தவளான ஜே .'.பூட்லிக்.

அன்றிரவு மோனிக்கா தூங்கவே இல்லை. கண்களை மூடியதும் கருத்தில் கிளின்ரன் அவளுடன் கொஞ்சிக் குலாவ ஆரம்பித்துவிடுகிறார்.

அடுத்த நாட்காலை அலுவலகம் சென்று தன் கடமையிலீடுபட்டாள். ஜனாதிபதியிடமிருந்து அவளுக்கு பிரத்தியேக அழைப்பு வருகிறதோ, என்று தவிப்புத்தான் அதிகமாக இருந்தது.

மதிய உணவு வேளையில் அவளுடைய மேசையில் பிரத்தியேகமான ஒரு கடிதம் கிடந்தது. அவசர அவசரமாகப் பிரித்துப் பார்த்தாள். தனக்கு மட்டும் தான் அத்தகைய கடிதமோ என்று எண்ணினாள். ஆனால் ஏமாற்றம்தான். பயிற்சியாளர்களின் மேசைகளிலெல்லாம் அத்தகைய கடித உறைகள் காணப்பட்டன.

அன்று பிற்பகல் வெள்ளை மாளிகையின் தெற்கு முன்றலில் கிளின்ரனின் 49வது பிறந்த தின கொண்டாட்டத்துக்கான அழைப்பு அது.

இவ்விழாவில் பங்குபற்ற அழைக்கப்பட்டவர்கள் உடனடியாக வீடு சென்று அலங்கரித்துக் கொண்டு வரலாம் என்ற அறிவிப்பும் இருந்தது. காலம் தாழ்த்தாமல் வீடு சென்ற மோனிக்கா, தனக்கு அதிஷ்டத்தைத் தேடித் தந்த இளம் பச்சை ஆடையை பதமாக ஸ்திரி செய்து அணிந்து கொண்டார்.

"முதல் நாளன்று அணிந்த உடையையே மறுநாளும் ஏன் அணியவேண்டும்? ஏன் உன்னிடம் வேறு நல்ல உடைகளே இல்லையா?" என்று அவள் தாய் தொடுத்த வினாவுக்கு பதிலிறுக்க மோனிக்காவுக்கு அவசியமோ அவகாசமோ இருக்கவில்லை.

தெற்கு முன்றலில் விசித்திரமான சோடனைகள் தென்பட்டன. ஜனாதிபதியின் நெருக்கமான அதிகாரிகளும் வகை வகையான உடைகளை அணிந்திருந்தனர். ஜனாதிபதியே மேற்கு அமெரிக்கா பண்ணைகளில் கால் நடைகளைக் கண்காணிக்கும் 'கௌ போய்'களுக்கான உடைகளுடன் வந்திருந்தார். அதே மேற்கு அமெரிக்கப் பாணியிலான இசைவிருந்து பின்னணியில் கேட்டவண்ணம் இருந்தது.

மேலைத்தேய முறைப்படி ஒருவரை ஒருவர் அறிமுகமாகும்போது கை கொடுத்துக் கொள்வது- ஒவ்வொரு தடவையும் இது நடைபெறுவது-சம்பிரதாயமாகப் போய்விட்டது. கையோடு கையை இணைத்துக் கொள்ளும்போது அதனூடே சில

## கிளின்ரனின் குறும்பு

கருத்துக்களையும் பரிமாறிக் கொள்ள வசதிகிட்டுகிறது.

கிளின்ரனுக்கு மோனிக்கா பிறந்தநாள் வாழ்த்துக் கூறும்போது, இருவருடைய வலக்கரங்களும் பேசிக் கொண்டன. அதுமட்டுமா? குறும்புக்காரக் கிளின்ரன் தனது முழங்கையால் வேண்டுமென்றே மோனிக்காவின் முன்னழகு ஒன்றில் தட்டிவிட்டுக் குறும்பாகச் சிரித்தார்.

### கனவல்ல...

'அமெரிக்கா நாட்டுக்குத் தலைவர் என்பது மட்டுமல்லாமல், முழு உலகத்துக்குமே உதார புருடராகக் கணிக்கப்படுபவர் ஜனாதிபதி கிளின்ரன். இவரா இத்தனை சில்லறை



விளையாட்டுக்காரராக விளங்குகிறார்?' என்று எனது மூளையில் ஓர் ஓரத்தில் ஒரு கேள்வி எழுந்து உறுத்தியது. இன்று நடந்த சம்பவம் எல்லாமே, அவர் மீது எனக்கு ஏற்பட்டிருந்த ஒருவகை மோகத்தின் பிரதிபலிப்பினால் ஏற்பட்ட கனவாக இருக்குமோ?' என்று நான் கருதினேன்.

அந்தச் சம்பவத்தை மீண்டும் மீண்டும் என் நினைவில் இரைமீட்டிப்பார்த்தேன். அவர் எனது மார்பில் தற்செயலாக இடித்தாரா, அல்லது வேண்டுமென்றேதான் இடித்தாரா? நிச்சயமாக இது தற்செயலாக இடம்பெற்ற தொன்றல்ல. அச்சம்பவத்தைத் தொடர்ந்து நான் பல தடவைகள் அவரைப் பரிசோதனை செய்து பார்த்தேன். பிறந்தநாள் கொண்டாட்டங்கள் முடியும்வரை நான் ஒரே இடத்தில் நிற்காமல் அங்குமிங்குமாக இடம் மாறி மாறி நின்று பார்த்தேன். நான் எங்கு சென்றாலும் அவருடைய கண்கள் என்னைத் தேடி அங்கும் இங்கும் அலைந்து, இறுதியில் கண்டு பிடித்துவிட்டன. உடனே ஒரு மோகனப் புன்னகையை வீசி என்னை வாட்டி வதைத்த வண்ணமிருந்தார். இத்தனை பெரிய மனிதருக்கு இத்தனை சிறிய சபல புத்தியா? என்றும் எனது மனம் எண்ணிப் பார்த்தது.

உண்மையில், அவரை முதன் முதலில் கண்டபோதே அவருடைய தோற்றத்தில் கண்ட கவர்ச்சியில் சிக்குண்டேன். அவருடன் நெருங்கிப்பழகி அவருடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற துடிப்பும் எழவே செய்தது. என்னைப் போல் வேறு பல பெண்களுக்கும்- குறிப்பாக வெள்ளை மாளிகையில் பணிபுரிவோருக்கும்- கிளின்ரனுடன் நெருங்கி உறவாட ஆசை இருந்தது. ஆனால் எல்லோரையும்விட அவரை நெருங்கும் வாய்ப்பு எனக்கு அதிகமாகவே இருந்தது எனலாம்!

இவ்வாறு அன்றிரவு முழுவதும் மோனிக்காவின் சிந்தனைகள் மோதிய வண்ணமே இருந்தன.

வெள்ளை மாளிகையிலிருந்து வீடு திரும்பியதும் மோனிக்கா, அன்றைய தினம் நடந்த சம்பவங்களை நாசுக்காக தனது தாயாரிடமும் சித்தி தெப்ராவிடமும் கூறினாள். அவளுடைய கதைகளைக் கேட்ட இருவரும் ஆச்சரியப்படவில்லை. அனுபவசாலிகளான அவர்களுக்கு கிளின்ரனைப் பற்றி நன்கு தெரிந்திருந்தது. அவர் ஒரு ஸ்திரி லோலன் என்பதனையும் அறிந்து வைத்திருந்தார்கள்.

இரவு உணவின்போது சித்தி தெப்ரா மோனிக்காவிடம் ஒரு நூலைக் கொடுத்தார். இரவு நேர உல்லாச விடுதிப்பாடகியான ஜென்னி .'.பர் .'.பிளாவேர்ஸ் எழுதிய சுய சரிதை அது. கிளின்ரன் அரக்கன்ஸாஸ் மாநில ஆளுநராகவிருந்த காலத்தில் தன்னுடன் கிளின்ரன் நடத்திய காதல் நாடகத்தினை விலாவாரியாக விமர்சித்திருந்தார் .'.பிளாவேர்ஸ். (வருவாள்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**கொழும்பு வாசகிக்கு அதிஷ்டம்!**

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | லெ.சூரியகலா, 104/38, சங்க மித்த மாவத்தை, கொழும்பு-13. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

**அம்மன் ஜுவல்ஸ் - முரசு இணைந்து வழங்கும்**

**வைரமோதிரப் போட்டியில் அதிஷ்டசாலிகள் இவர்கள்தான்.**

வைரமோதிரப் பரிசு பெறும் அந்த சூப்பர் அதிஷ்டசாலியின் பெயரும், ஆறுதல் பரிசு வெல்லும் ஏனைய ஐந்து அதிஷ்டசாலிகளது பெயர் விபரங்களும் அடுத்தவாரம் இடம்பெறும். சென்றவாரம் 10 அதிஷ்டசாலியின் பெயர்கள் இடம் பற்றன. மேலும் 10 அதிஷ்டசாலிகளது பெயர்கள் இதோ:

1. அனுசியா இராஜமணி, டென்ஸ்வத்தை, தெய்யோவிற்றை.
2. ப.ராதிகா, இல. 48, புதிய வைத்தியசாலை வீதி, கலஹா.
3. வி.கோகிலவநனி, இல. 93/7, கன்னாரத் தெரு, கொழும்பு-13.
4. செ.சுபாசினி, ஞானசூரியம் சதுக்கம், 1வது ஒழுங்கை, மட்டக்களப்பு.
5. வி.ஷாமிலா, இல.29, அல்பேர்ட் பிளேஸ், தெகிவளை.
6. கே.பிரதீபா, இல.318, பாம் வீதி, உப்புவெளி.
7. ஏ.ரோசம்மா, இல. 86/57, பெனடிக் மாவத்தை, கொழும்பு-13.
8. பி.சோமசுந்தரம், பிரதேச செயலாளர் வீதி, அக்கரைப்பற்று-08.
9. இ.திருமலர், இல. 37, பெரேரா ஒழுங்கை, வெள்ளவத்தை.
10. திருமதி அ.துரைசாமி, திருச்செந்தூர் முருகன் வீதி, 4வது ஒழுங்கை, கல்லடி, மட்டக்களப்பு.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





சக்தி தனக்கே உரிமை யாக்கு-அது
சக்தியென்று குழலூதும்-சித்தம்
சக்தி தனக்கே உரிமை யாக்கு-அதில்
சார்வதில்லை அச்சமுடன் சூதும்.

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# எலுமிச்சங்காயளவு சோறு!

ஓர் ஊரில் பெண்மணி ஒருவர் உணவு விடுதி வைத்து நடத்தி வந்தாள்.

வழிப்போக்கன் ஒருவன் கடும் பசியுடன் அந்த விடுதிச்கு வந்தான். அவன் அந்தப் பெண்மணியிடம் "ஒரு சாப்பாடு என்ன விலை?" என்று கேட்டான்.

"பத்து ரூபாய்!" என்று விடுதிக்காரி பதில் சொன்னாள்.

வழிப்போக்கன் பத்து ரூபாயை அவளிடம் கொடுத்து,

"பசி என் உயிரைவாங்குகிறது. ஓர் எலுமிச்சங்காயளவு சோறாவது கெதியாகப் போடு!" என்றான்.

உணவு விடுதிக்காரப் பெண் ஓர் எலுமிச்சங்காயளவு சோற்றை உருட்டிக் கொண்டு வந்து இலையில் போட்டுவிட்டு,

"பத்து ரூபாய்க்கு நீர் கேட்ட மாதிரி சோறு போட்டு விட்டேன்!" என்றாள்.

வழிப்போக்கன் திகைத்து விட்டான்.

"ஒரு பேச்சுக்காகச் சொன்னால் உண்மையிலேயே எலுமிச்சங்காயளவா போடுவது?" என்று கேட்டான் வழிப்போக்கன்.

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. பணம் கொடுத்து விட்டு எவ்வளவு சோறு வேண்டும் என்று கேட்டீரோ அதேயளவு சாப்பாடுதான் போட்டேன். இனி அதைவிட ஒரு பருக்கைகூடப் போட மாட்டேன்!" என்று விடுதிக்காரி தீர்மானமாகக் கூறிவிட்டாள்.

வழிப்போக்கன் நீதிபதியிடம் சென்று முறையிட்டான்.

நீதிபதி விடுதிக்காரப் பெண்ணை வரவழைத்து விசாரணை செய்தார்.

"நீ போட்ட சோறு ஓர் எலுமிச்சங்காயளவு இருந்ததா?" என்று கேட்டார் நீதிபதி.



"ஆமாம்!" என்று விடுதிக்காரி சொன்னாள்.

நீதிபதி தன் வீட்டுக்கு ஆள் அனுப்பி கொஞ்சம் சோறு எடுத்து வரச்சொன்னார்.

சோறு வந்ததும் விடுதிக்காரியிடம் அதைக் கொடுத்து. "நீ கொடுத்த சோற்றின் அளவைக் காண்பி!" என்றார் நீதிபதி.

விடுதிக்காரியும் எலுமிச்சங்காயளவுக்கு சோற்றை உருட்டிக் காண்பித்தார்.

"இது சரியல்ல. சோறு என்பது ஒரு சோற்றுப் பருக்கையைத்தான் குறிக்கும். வழிப்போக்கன் கேட்டது ஓர் எலுமிச்சங்காய் சோற்றுப்பருக்கையைத்தான். வழிப்போக்கன் கேட்டபடி நீ கொடுக்கவில்லை.

பணத்தை வாங்கிக் கொண்டு, அவன் கேட்டதைக் கொடுக்காமல் ஏமாற்றி இருக்கிறாய். அதனால் வழிப்போக்கனிடம் பெற்ற பணத்தைத் திருப்பிக் கொடுத்து விடவேண்டும்.

அத்துடன் அபராதமாக மேலும் பத்து ரூபாய் அவனுக்குக் கொடுத்து விடவேண்டும்!" எனத் தீர்ப்பு வழங்கினார் நீதிபதி.

## அதிசயம் - ஆனால் உண்மை!



➔ ஐரோப்பாவில் 'மார்ஷ் வோர்ப்னர்' என்ற குருவியினம் உள்ளது. இவற்றால் மற்றப் பறவைகளைப் போல குரலை மாற்றிக் கூவ முடியும். பனிக்காலத்தில் ஆபிரிக்காக் கண்டத்துக்குச் செல்லும் இவை, திரும்பிவரும்போது 200 வெவ்வேறு பறவைகளின் குரலைக் கற்றுக் கொண்டு வந்துவிடும்.


↓ இந்தியாவின் கேரள மாநிலத்தில் உள்ள கொச்சின் என்ற இடத்தில் கோவில் ஒன்று உள்ளது. கடந்த வருடம் அந்தக் கோவிலில் இருந்த 8வது ஆலமரத்திற்கும், 4வது வேப்பமரத்திற்கும் திருமணம் செய்து வைத்துள்ளனர்.





➔ உலகிலேயே மிக உயர்ந்த இடத்தில் அமைக்கப்பட்டுள்ள வீதி இமயமலையில் உள்ளது. திபெத்திற்கும், சீனாவுக்குமிடையே 18 ஆயிரத்து 480 அடி உயரத்தில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் நீளம் 180 கிலோமீட்டர்.

## அழிப்பான் (எரேஸர் ERAZER)



மனிதன் எழுதக் கற்றுக் கொண்டபோது அதை அழிப்பதற்கு எந்த உபகரணத்தையும் கண்டுபிடிக்கவில்லை. எனினும் காலப்போக்கில் தான் எழுதியதை மாற்றி அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.


அப்போதுதான் அவர்களுக்கு அழிப்பான்கள் (எரேஸர்கள்) தேவைப்பட்டது. அழிப்பான்களை முதலில் பயன்படுத்தியவர்கள் பாபிலோனியர்கள்.

களிமண்ணால் செய்யப்பட்ட பலகைகளைப் பயன்படுத்தியபோது அதைக் கைகளாலேயே அழித்து எழுதினர். பின் எகிப்தியர்கள் பாபிரஸ் என்ற தாவர இலையைப் பயன்படுத்தி எழுதும்போது அதை ஈரத்துணியால் அழித்துவிட்டு எழுதினார்கள்.

முதன் முதலில் இரப்பரை அழிப்பான்களாகப் பயன்படுத்தலாம் என்பதை 1839ல் கண்டறிந்தனர். அமெரிக்காவைச் சேர்ந்த ஹைமேன் எல்.லிப்மேன் என்பவர் 1858ல் பென்சிலின் மறுமுனையில் சிறிய அழிறப்பரைப் பொருத்தி விற்பனை செய்தார். இது மக்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

இன்று எத்தனையோ விதமான இரப்பர் அழிப்பான்கள் வந்துவிட்டன. பலவித வடிவங்களிலும் பல்வேறு வாசனைகளிலும்கூட வந்துள்ளன.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **11.12.1999**.

**வர்ணம் தீட்டும் போட்டி இல: 322**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 320

**பரிசுக்குரியவர்:**
சந்திரமோகன் கிஷாந்த்,
ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, திருகோணமலை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| த. விதுரன்,<br>புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. | ∴பாத்திமா இம்ரானா கரீம்,<br>அலியார் வீதி, கல்முனை-07. |
| கே.டி. ஸ∴புவான் மொஹமட்,<br>மஹாவெல முல்ல முஸ்லிம் வித்தியாலயம், வெள்ளவாய. | தர்மிக்கா தர்மதாஸ்,<br>புனித சவேரியார் பெண்கள் கல்லூரி, மன்னார். |
| பொன்னம்பலம் கமல்ராஜ்,<br>விநாயகர் ம.வி., கோளாவில்-01. அக்கரைப்பற்று. | மதிவாணன் ஜனகன்,<br>தலவாக்கல தமிழ் வித்தியாலயம், தலவாக்கலை. |
| ஏ.ஜே. ∴பாத்திமா நிஸ்ரத்,<br>தி/அல் ஹிறா மகளிர் ம.வி. கிண்ணியா-03. | ஆறுமுகம் அருண்,<br>சென் ஜோன் பொஸ்கோஸ்கோ பாடசாலை, ஹட்டன். |
| டி.எஸ். கிளின்டன்,<br>கதிரேஷன் கனிஷ்ட வித்தியாலயம், நாவலப்பிட்டி. | என்.எம். பாத்திமா நுஸ்ஹா,<br>மட்/ அறபா வித்தியாலயம், ஏறாவூர். |

## விடுகதைகளும் விடைகளும்

1. பச்சைச் சட்டிக்குள்ளே பாயாசம்.
   அது என்ன?
2. நூறு பாஷை பேசும் வாயில்லா ஊமை, மணி அடித்துக் காட்டும் கையில்லா ஆமை.
   அது என்ன?
3. வெள்ளைக்காரனுக்கு மஞ்சள் சட்டை.
   அது என்ன?
4. ஆடு மேயுது தோல் காயுது.
   அது என்ன?
5. காட்டில் பொங்கல் வைத்தேன். கழுகும் தின்னலை; காக்கையும் தின்னலை.
   அது என்ன?
6. சுத்தினால் நிற்பான்; நின்று விட்டால் படுத்துவிடுவான்.
   அவன் யார்?
7. சிட்டுக்குருவிக்கு எட்டு முழச் சேலை.
   அது என்ன?
8. முக்காடு போட்டால் மூலையில் உட்கார்வான்; காகிதத்தைக் கண்டால் கண்ணீர் விடுவான்.
   அவன் யார்.

**விடைகள்**

1. இளநீர் 2. தொலைபேசி
3. வாழைப்பழம் 4. பாம்பு
5. சுண்ணாம்பு 6. பம்பரம்
7. வெங்காயம் 8. பேனா.

## பெயர் வரக் காரணம்


பாராளுமன்றத்தின் சபாநாயகரை ஆங்கிலத்தில் 'ஸ்பீக்கர்' (SPEAKER) என்று அழைக்கிறார்கள். இந்த வார்த்தை எப்படி வந்தது என்று தெரியுமா?

இந்த வார்த்தை இங்கிலாந்து நாட்டில் இருந்துதான் வந்தது. இங்கிலாந்தின் பாராளுமன்றத்தின் சார்பில் மகாராணியிடம் பேசுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்படுபவரே 'ஸ்பீக்கர்' என்று அழைக்கப்பட்டார்.

இலங்கை முன்பு இங்கிலாந்தின் ஆதிக்கத்திற்கு உட்பட்டிருந்ததால் இங்கும் அதே வார்த்தை பழக்கத்திற்கு வந்தது.



## எப்படித் தெரியுமா?



பென்சில் எழுதுவது எப்படி என்று தெரியுமா?

பென்சிலுக்கு உள்ளே மெல்லிய காரீயம் கிராஃபைட் குச்சி உள்ளது. கிராஃபைட், கார்பனில் இருந்து தயாரிக்கப்படுகிறது. கார்பன் என்பது கறுப்பு நிறமுள்ள ஒரு வழவழப்பான மசகுப் பொருள். அது எழுதும்போது பதிவுகளை இட்டுச் செல்கிறது. அதனால்தான் காகிதத்தில் எழுத்து வருகிறது.

கிராஃபைட் குச்சி உடையாமல் இருப்பதற்காக இது மரக்குச்சியின் நடுவே பிணைக்கப்பட்டுள்ளது. எளிதாகப் பிடித்து எழுதுவதற்கும் மரக்குச்சி உதவுகிறது.

கிராஃபைட் பென்சில் 1795ல் நிக்கொலஸ் காண்டே என்பவரால் கண்டு பிடிக்கப்பட்டது.

## ஒரு வரிச் செய்திகள்

- ஐரோப்பாவின் மிக நீளமான நதி- வோல்கா.
- பெட்ரோலியத்தை சுத்திகரிக்கும் அமிலம்- கந்தக அமிலம்.
- விட்டமின் 'ஏ'யைக் கண்டுபிடித்தவர்- ஹொப்கின்ஸ்.
- பூகம்பத்தைப் பதிவு செய்யும் கருவியின் பெயர்- சீஸ்மோ கிரா∴ப்.
- புற ஊதாக்கதிரின் பயனைக் கண்டு பிடித்தவர்-∴புன்சென்.
- மிகக் குறைந்த எழுத்துக்களைக் கொண்ட மொழி- ஹவாய் மொழி.
- இந்தியாவில் அதிகம் மழை பெய்யும் மாநிலம் -அஸ்ஸாம்.
- ஃபிரான்ஸ் நாட்டின் தேசிய மலர்- லில்லி.
- மனித மூளையின் எடை மனித உடல் எடையில் 2 சதவீதம் ஆகும்.

## பறவைகளின் தூக்கம்



கடல் புறாக்கள் கடல் நீரில் மிதந்து கொண்டே தூங்கும். இவை இறகுகளை நீட்டி விரித்துக் கொண்டு தூங்குவதும் உண்டு.

வாத்துக்களும் அன்னங்களும் தண்ணீரில் மிதந்து கொண்டே தூங்கும். குளிர் நாடுகளில் இரவில் திடீரென நீர் உறைந்து விடுவதால் பனிக்கட்டிகளில் அவை மாட்டிக்கொள்வதும் உண்டு.

சூட்டிடெர்ன் என்ற பறவையும் நீரில் மிதந்து கொண்டே தூங்கும். ஆனால் அதனால் சில நிமிஷங்களுக்குத்தான் அப்படித்தூங்க முடியும். ஏனென்றால் அதன் சிறகுகளுக்கு நீர் ஒட்டாத தன்மை குறைவு. நெடுநேரம் மிதந்தால் சிறகுகள் நீரில் ஊறிப் போய் அது நீரில் மூழ்கிவிடும்.

அமெரிக்காக் கண்டத்தில் உள்ள கறுப்பு வாத்துக்கள் நீரில் மிதந்தவாறே தூங்கும் போது காற்றடித்தால், தூக்கத்திலேயே ஒரு காலை ஆட்டித் துடுப்புப்போல- காற்று அதன் இருப்பிடத்தை விட்டுத் தள்ளி விடாமல் பார்த்துக் கொள்ளும்.

திரஷ் என்ற பறவை குளிர்காலத்தில் ஒருநாளைக்கு 15 மணித்தியாலங்கள் தூங்கும். ஆனால் கோடை காலத்தில் 4 மணித்தியாலங்கள்தான் தூங்கும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## திக் திக் தொடர்

# சிகப்பு வணக்கம் 04

க்ரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்

ப்ரஸ்மீட் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்க, இப்போது எல்லா நிருபர்களின் கைகளிலும் குளிர்பான பாட்டில்கள் இடம் பிடித்திருந்தன. ஸ்ட்ராக்களை உதடுகள் கவ்வியிருக்க, ஆரஞ்சு நிற திரவ மட்டம் ஸ்லோமோஷனில் அவர்களின் தொண்டைக் குழிக்குள் இறங்கிக் கொண்டிருந்தது.

நரேஷிடம் மூத்த நிருபர் ஒருவர் எழுந்து கேள்வி கேட்டுக் கொண்டிருந்தார்.

"கிரிகெட் வீரர்கள் இப்போதெல்லாம் நிறைய விளம்பரப் படங்களில் நடித்து லட்சக்கணக்கில் பணம் சம்பாதிக்கிறார்கள். அந்தப் பணத்தில் ஒரு சிறு பகுதியையாவது தொண்டு நிறுவனங்களுக்குக் கொடுத்து உதவலாமே.? அந்த எண்ணம் ஏன் கிரிக்கெட் வீரர்களுக்கு வருவதில்லை?"

நரேஷ் சிரித்தான். "சினிமா நடிகர்கள் கோடிக்கணக்கில் சம்பாதிக்கிறார்கள். அவர்களுக்கு உதவி செய்ய மனம் வருகிறதா என்ன..? உதவி செய்வது என்பது வருகின்ற பணத்தைப் பொறுத்தது அல்ல. இருக்கின்ற மனத்தைப் பொறுத்தது!"

"உங்களுக்கு அந்த மனம் இருக்கிறதா?"

"நிச்சயமாய் இருக்கிறது. நான் பிறந்து வளர்ந்த ஊரில் ஒரு நல்ல ஹாஸ்பிடல் கிடையாது. ஸோ, என்னுடைய வருமானத்தில் ஒரு பகுதியை ஒதுக்கி அங்கே ஹாஸ்பிடல் ஒன்றைக் கட்ட..."

நரேஷ் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, நிருபர்களுக்கு நடுவில் சின்னதாய் ஒரு பதட்டம்.

குளிர்பான பாட்டில் ஒன்று கீழே விழுந்து மண்டையை உடைத்துக் கொள்ளும் சத்தம் கேட்டது. கூடவே பதற்றக் குரல்கள்.

"என்னாச்சு...?"

"அந்தப் பொண்ணு திடீர்னு மயக்கமாயிடுச்சு!"

"என்னவோ தெரியலை. எனக்கும் லேசா கிட்டினஸ் இருக்கு."

"எனக்கும் தலையைச் சுத்தற மாதிரி இருக்கு."

"டாக்டர் யாரையாவது கூப்பிடுங்க...."

இரண்டாவது வரிசையில் இருந்த ஒரு பெண் சொல்லிக் கொண்டிருக்கும் போதே அவளுக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த ஒரு பெண் சாய்ந்தாள். அவளைத் தொடர்ந்து இன்னொரு பெண்.

அறை வாசலில் ஆர்ச்சார்யா, தன் மார்புக்குக் குறுக்காக கைகளைக் கட்டிக் கொண்டு மயக்கம் போட்டு விழுகிற பெண்களை ஒரு புன்னகையோடு பார்த்துக் கொண்டிருந்தார்.

✤✱✤

சென்னையின் ஆரவாரங்கள் எட்டிப் பார்க்காத புறநகர்ப் பகுதியில், ஒரு மாடி வீடு சவுக்கு மரங்களால் சூழப்பட்டிருக்க, மேல் போர்ஷன் அறையில் நாற்காலிகளை அரை வட்டமாய்ப் போட்டுக்கொண்டு அந்த நான்கு இளைஞர்கள் அலட்சியமாய் சாய்ந்திருந்தார்கள். இரண்டு பேர்களின் உதடுகளில் சிகரெட் தொற்றியிருக்க, அவர்களுடைய நாசியிலும் கடைவாயிலும் புகை, நூலிழைமாதிரி வெளிப்பட்டுக் கொண்டிருந்தது.

ஒருவன் தோள்களைக் குலுக்கி பெருமூச்சு விட்டான்.

"என்ன முரளி...! ஏர்போர்ட்டிலிருந்து ஒரு நியூஸும் வரலை.."

தாடிக்கார இளைஞன் முரளி, தாடையின் அரிப்பை இடது கையின் ஆட்காட்டி விரலால் சொறிந்து கொண்டவனாய், மற்ற மூன்று பேரையும் பார்த்துச் சொன்னான்.

"எனக்கும் அதே கவலைதான். இந்நேரம் ஏர்போர்ட்டில் பைரவி காரியத்தை முடிச்சிருக்கணும். அந்த நியூஸை ஏர்போர்ட்டுக்கு வெளியே நிக்கிற கஜா, செல்ஃபோன்ல இந் நேரம் நமக்குக் கன்வே பண்ணியிருக்கணும். அங்கே ஏதாவது பிரச்சினையாக இருந்தாலும் உடனடியாகத் தெரிவிக்க வேண்டியது தானே?"

"நீயே ஃபோன் பண்ணிப்பாரு முரளி..." சிகரெட் புகை கசியும் வாயோடு இன்னொரு இளைஞன் சொல்ல, முரளி தன் இடுப்புப் பக்கமாய் கையைக் கொண்டு போய், செல்ஃபோனை எடுத்து எண்களைத் தட்டினான்.

சில விநாடிகளுக்குப் பிறகு எலெக்ட்ரானிக் ரீங்காரச் சத்தம். ஒரு குரல் கர கரத்தது.

"ஹலோ..."

"யாரு கஜாவா..?"

"ம்..."

"நான் முரளி பேசறேன். அங்கே என்னடா பண்ணிட்டிருக்கே...? பைரவி ஏர்போர்ட்டுக்குள்ளே போயிட்டதா அரைமணி நேரத்துக்கு முன்னாடியே சொன்னே... இன்னும் ரிசல்ட் கிடைக்கலையே?"

"நான் என்ன பண்ணட்டும் முரளி...? பைரவி எதுக்காக ஏர்போர்ட்டுக்குப் போனாளோ அந்தக் காரியம் இன்னும் நடக்கவேயில்லை.

"ப்ரஸ்மீட் நடந்துட்டிருக்கா இல்லையா?"

"நடந்துட்டிருக்கு..."

"பின்னே காரியத்தை பைரவி முடிக்க வேண்டியதுதானே...? இவளும் மத்த ரிப்போர்ட்டர்ஸ் மாதிரி நிஜமாவே பேட்டி எடுக்க ஆரம்பிச்சுட்டாளோ என்னவோ..."

"எனக்கும் ஒண்ணும் புரியலை முரளி! வெடிச்சத்தம் எப்ப கேக்கும்னு காதைத் தீட்டி வெச்சிக்கிட்டு காத்திட்டிருக்கேன்..."

"ஏதாவது பிரச்சனையா?"

"அது மாதிரியும் தெரியலையே?"

"போலீஸ் செக்யூரிட்டி எப்படியிருக்கு?"

"அவ்வளவு கெடுபிடி கிடையாது. போலீஸும் வேடிக்கை பார்க்க வந்தவங்க மாதிரிதான் கும்பல் கும்பலா நின்னு பேசிக்கிட்டிருக்காங்க...."

"கிரிக்கெட் வீரர்களை ரிஸீவ் பண்ண வந்த ரசிகர்கள் கூட்டம் இன்னமும் அப்படியே இருக்கா?"

"இல்லை... பாதிக் கூட்டம் போயிடுச்சு..."

"பைரவி இப்படி லேட் பண்ண மாட்டாளே? ரிமோட் கண்ட்ரோல் சிஸ்டம் ஏதாவது காலை வாரி விட்டுடுச்சா?"

"அப்படியிருந்தாலும் இந்நேரம் வெளியே வந்திருப்பாளே... சரி முரளி...! நான் போய் உள்ளே பார்த்துட்டு வரட்டுமா..?"

"வேண்டாம் கஜா...! ப்ரஸ் மீட்டுக்குள்ளே போயிருக்கிற பைரவி, காரணம் இல்லாமே லேட் பண்ணமாட்டா... ஒரு பத்து நிமிஷம் வெயிட் பண்ணிப்பாரு...அதுக்கப்புறமும் எதுவும் நடக்கலைன்னா எனக்கு ஃபோன் பண்ணு..."

"சரி..."

"இப்ப நீ ஏர்போர்ட்டுக்கு வெளியே எந்த இடத்துல நின்னுட்டிருக்கே..?"

"டாக்ஸி ஸ்டாண்ட்டுக்குப் பக்கத்துல ஒரு மே ஃப்ளவர் மரம் இருக்கு. அதுக்குக் கீழே நின்னுட்டிருக்கேன்..."

"உன்னை யாரும் வாட்ச் பண்ற மாதிரியிருந்தா சந்தேகம் வராதபடிக்கு நழுவி, வேற ஏதாவது பக்கமா போய் ஒதுங்கிக்கோ..."

"என்னைப் பத்தின கவலையே உனக்கு வேண்டாம் முரளி. நான் இப்ப நின்னுட்டிருக்கிற இடமே ஸேஃப்டி ப்ளேஸ்தான்."

"சரி.. டேக் கேர்..! அடுத்த பத்து நிமிஷத்துக்குள்ளே உன்கிட்டயிருந்து சந்தோஷமான நியூஸை எதிர்பார்க்கிறேன்..."

முரளி செல்ஃபோனை அணைத்து விட்டு, மற்ற மூன்று நண்பர்களைப் பார்த்தான்.

"பைரவி ஏன் லேட் பண்றாள்னு தெரியலை?"

"எனக்குத் தெரியும்..."- சிகரெட் புகைத்துக் கொண்டிருந்த இரண்டு பேரில், ஒருவன் இறுகிய முகத்தோடு சொன்னான்.

முரளி அவனை ஏறிட்டான்.

"பீட்டர்..! நீ என்ன சொல்றே..? உனக்குக் காரணம் தெரியுமா...?"

"தெரியும்..."

"என்ன காரணம்?"

பீட்டர், தன் கையில் இருந்த கடைசி சென்டிமீட்டர் சிகரெட்டை பூட்ஸ் காலுக்குக் கீழே போட்டுக் கூழாக்கி விட்டு கேலியாய்ப் புன்னகைத்தான்.

"காரணம்... அவ ஒரு பொண்ணு. அவளை மனித வெடிகுண்டா செலக்ட் பண்ணும்போதே நான் வேண்டாம்னு சொன்னேன். பைரவி ஸ்பாட்டுக்குப் போகிறவரை தான் வீரமாப் பேசுவா. அதுக்கப்புறமா அவளாலே ஒரு மனித வெடிகுண்டா செயல்பட அவளோட மனசு இடம் கொடுக்காதுன்னு சொன்னேன். உங்கள்ல யாருமே கேட்கலை. தன்னையும் அழிச்சுகிட்டு மத்தவங்களையும் அழிக்கிறதுக்கு பாறை மாதிரி இறுகின மனசு வேணும். அந்த மனசு பைரவிகிட்ட மிஸ்ஸிங்கிறதை நான் எப்பவோ கண்டுபிடிச்சுட்டேன். அவளுக்குப் பதிலா நான் இந்நேரம் ஸ்பாட்ல இருந்திருந்தா காரியம் முடிஞ்சு, சேதி வந்து கால்மணி நேரத்துக்கு மேல ஆகியிருக்கும்!"

முரளி தலையாட்டினான்.

"நோ... பீட்டர்! பைரவியைப் பத்தின உன்னோட அபிப்பிராயம் தப்பு. பெயருக்கேத்தமாதிரி அவ பைரவிதான். அவளுக்கு எதையுமே துல்லியமா செஞ்சுதான் பழக்கம். இன்னும் பத்து நிமிஷத்துக்குள்ளே நமக்கு எப்படியும் தகவல் வரத்தான் போகுது. லெட் அஸ் வெயிட் அண்ட் ஸீ."

"எனக்கு நம்பிக்கையில்லே முரளி."

"அப்படிச் சொல்லாதே... இன்னும் பத்து நிமிஷத்துக்குள்ளே கஜா ஃபோன் பண்ணுவான் பார்..."

"பார்க்கலாம்..."- பீட்டர் இரண்டாவது சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டான்.

ப்ரஸ்மீட்டில் பதினொரு பெண் நிருபர்களும் தத்தம் நாற்காலிகளிலேயே துவண்டுபோய் மயக்கத்தில் இருக்க, கிரிக்கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யா மைக்கைப் பிடித்தபடி, கலவர முகங்களோடு நின்று கொண்டிருந்த கிரிக்கெட் வீரர்களுக்கும் ஆண் நிருபர்களுக்கும் நடுவே நின்றபடி பேசிக்கொண்டிருந்தார்.

"யாரும் பயப்பட வேண்டியது இல்லை. நமக்குக் கிடைத்த ஒரு தகவலின்படி ஒரு பெண் நிருபர் மனித வெடிகுண்டாக மாறி, ப்ரஸ்மீட்டில் நுழைந்திருப்பதாகச் செய்தி. அதை உறுதிப்படுத்திக் கொள்ளவும், முறியடிக்கவும்தான் இந்த நடவடிக்கைகள்.

இந்த பதினொரு பேர்க்கும் குளிர்பானத்தில் மயக்கமருந்து கலந்து கொடுத்திருக்கிறோம். இந்த மயக்கம் இன்னும் ஒரு மணி நேரம் வரைக்கும் நீடிக்கும். பெண் போலீஸார் உள்ளே நுழைந்து இந்தப் பதினொரு பேரையும் ஒரு முழுமையான சோதனைக்கு உட்படுத்த இருக்கிறார்கள்.

உங்களிடம் நான் கேட்டுக் கொள்வதெல்லாம் ஒன்றே ஒன்றுதான். நீங்கள் எல்லோரும் இந்த அறையை விட்டு வெளியேறும் போது, பதட்டம் காட்டாமல் வெளியேற வேண்டும். வெளியே ஏர்போர்ட்டில் காத்திருக்கும் ஜனங்களுக்கு இந்த விஷயம் தெரியக் கூடாது."

ஆச்சார்யா சொல்ல, கிரிக்கெட் வீரர்களுடன் ஆண் நிருபர்களும் வெளிறிப்போன முகங்களோடு மெல்ல வெளியேறினார்கள்.

ஏர்போர்ட் ஆபீஸர் ருத்ராவும், போலீஸ் கமிஷனர் லட்சுமிபதியும் வேக வேகமாய் ஆச்சார்யாவை நெருங்கினார்கள்.

"பெண் போலீஸார் உள்ளே வர தயாராய் இருக்கிறார்கள். அனுப்பி விடலாமா?"

ஆச்சார்யா தலையசைக்க, லட்சுமி பதி அறைக்கு வெளியே எட்டிப் பார்த்துக் கைகாட்டினார்.

பெண் போலீஸ் ஆறுபேர் உள்ளே வந்தார்கள். முகங்களில் பயத்தோடு கூடிய வியர்வை.

ருத்ரா சொன்னார்.

"இந்தப் பதினொரு பெண் நிருபர்களையும் சர்வ ஜாக்கிரதையாய் சோதனையிட வேண்டும். மனித வெடிகுண்டுப்பெண் யார் என்பது தெரிந்ததும் அவளை மட்டும் தனிமைப்படுத்திவிட்டு எங்களுக்குத் தகவல் கொடுக்க வேண்டும். நாங்கள் வெளியே காத்திருக்கிறோம். அறைக்கதவை உட்பக்கமாய்த் தாழிட்டுக் கொள்ளுங்கள்."

ஆச்சார்யா, ருத்ரா, லட்சுமிபதி மூன்று பேரும் அறையை விட்டு வெளியேற, பெண் போலீஸார் கதவைத் தாழிட்டுக் கொண்டார்கள். பின் நாற்காலிகளில் மயங்கிக் கிடந்த அந்தப் பெண் நிருபர்களை நோக்கி மெல்ல நடைபோட்டார்கள்.

"இந்தப் பதினொரு பேர்களில் யார் மனித வெடிகுண்டு..."

முதல் பெண்ணை நாற்காலியிலிருந்து தூக்கிக் கொண்டு வந்து தரையில் மெதுவாய்க் கிடத்தி பின் அவளுடைய உடைகளைக் களைந்தார்கள்.

வியப்பு காத்திருந்தது!

(தொடர்ந்து வரும்)



---

'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி. சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.

# தர்ம யுத்தம் 14

தர்மயுத்தம் பிறந்த கதை

"அந்த இடம் எங்கப்பா இருக்கு?" என்றேன். "நீங்க வாங்க, நான் எப்படியும் கண்டுபிடிச்சிருவேன்" என்றார்.

ஒருவழியாக எங்கள் கார் கே.கே. நகர் பகுதிக்குள் நுழைந்தது. அடுத்து, எனது உதவியாளர் ஜாவுதீன் சொன்ன அடையாளம் தேடும் பணி ஆரம்பமானது. அது என்ன அடையாளம் என்பதையும் அவர் எங்களுக்குச சொல்லவில்லை.

ஒவ்வொரு ரோடாக, ஒவ்வொரு சந்தாகப் புகுந்து, புகுந்து வந்துகொண்டிருந்தோம். அவரும், 'இந்த இடம் இல்ல, லெ.ஃப்டுல போங்க. அடுத்த தெருன்னு நெனைக்கிறேன். ரைட்ல வாங்க' என்று எங்களை அலைக்கழித்துக் கொண்டிருந்தார்.

அப்போது மணி இரவு பதினொன்றை நெருங்கிக் கொண்டிருந்தது. எங்களுக்குள் புதிய கேள்வி. 'இன்னைக்கு பார்ட்டி நடக்குமா? இல்லை,இப்படியே விடிய, விடிய சுத்திக்கிட்டிருக்கப் போறோமா?'

கடைசியில் அந்த இடத்தைக் கண்டு பிடித்துவிட்டார் ஜாவுதீன். கார் அந்த அலுவலக வாசலில் போய் நின்றது. அங்கு எங்களுக்கு



அடுத்த அதிர்ச்சி காத்திருந்தது. எப்போதுமே அலுவலகத்தில் இருக்கும் பையன், கதவைப் பூட்டிவிட்டு எங்கோ போய்விட்டிருந்தான்.

இடத்தைக் கண்டுபிடித்தும் எங்களுக்கு சந்தோஷம் இல்லை. உடனே ஜாவுதீன், "பையன் பக்கத்துல எங்காவது கடைக்குப் போயிருப்பான். இப்ப வந்துருவான். இருங்க, நான் பாத்துட்டு வர்றேன்" என்று சொல்லி, அங்கும், இங்கும் அலைந்து கொண்டிருந்தார்.

## என்ன செய்யலாம்?

அவ்வப்போது திரும்பிவந்து, 'பையன் வந்துட்டானா?' என்று எங்களையே கேட்டு விட்டுப் போவார். நாங்களும் பொறுமையைக் கடைப்பிடித்து, காரிலிருந்து இறங்கி அந்த இருட்டில், என்ன செய்வது என்று புரியாமல்



பேசிக் கொண்டிருந்தோம்.

திரும்பி வந்த ஜாவுதீன், "பையன் சினிமாவுக்குப் போயிருப்பான்னு நெனைக்கிறேன். திரும்பி வர்றதுக்கு ஒரு மணி, ரெண்டு மணி ஆகும். என்ன செய்யலாம்?" என்றார்.

அப்போது திடீரென்று ஒரு யோசனை தோன்றியது ஒருவருக்கு "இது நம்ம ஆபீஸோட மொட்டைமாடிதானே?" "ஆமாம்" என்றதும், "ஒண்ணு செய்யலாம், பையன் வர்ற வரைக்கும் இந்தச் சுவத்து மேல ஏறி, மொட்டை மாடி போயி, அங்க ஆரம்பிச்சிரலாம்" என்றார். அவர் சுட்டிக் காட்டியது அடுத்த வீட்டுச்சுவர்.

இதைக் கேட்டதும் கேமிராமென் பாலகிருஷ்ணன் சார் நடுங்கிப் போய்விட்டார். இருட்டில் என்னைத் தனியாக அழைத்து, "இந்த வம்பெல்லாம் நமக்கு வேணாம் சார், யாராவது பக்கத்து வீட்டுக்காரங்க, திருடன்னு நெனைச்சு சத்தம் போட்டாங்கன்னா, ரொம்ப ஆபத்தா போயிரும். என்னை விட்ருங்க, நான் வீட்டுக்குப் போறேன்" என்றார்.

அந்த நேரம், என்ன செய்தாரோ தெரியாது... ஜாவுதீன் அந்த வெளிக்கதவிலிருந்த பூட்டை உடைத்துவிட்டார். "ம், வாங்க, வாங்க, பூட்டை உடைச்சாச்சு" என்று கதவைத் திறந்தார்.

எல்லோர் மனதிலும் ஒரு தயக்கம், உள்ளே போகலாமா, வேண்டாமா என்று. "நம்ம ஆபீஸ் தான் சார், வாங்க, யாரு கேக்குறது?" என்று உள்ளே போய் லைட்டைப் போட்டுவிட்டு, சேர், டேபிள் எல்லாம் எடுத்துப் போட்டு, ஏற்பாடுகள் செய்தார்.

நடுநிசி. பார்ட்டி துவங்கியது. பார்ட்டி முடிய காலை மணி மூன்றாகி விட்டது. மறு நாள் ஷூட்டிங் மகாபலிபுரம் போகும் வழியில் இருக்கும் முதலைப் பண்ணையில். எனவே சீக்கிரம், சீக்கிரமாக முடிக்க வேண்டும் என்று ஆரம்பித்து, எல்லா பார்ட்டிக்கும் உரிய கால தாமதத்துடன் முடிந்தது.

## பொறுமை

இவ்வளவு குழப்பங்களிலும் ரஜினி அவர்கள் காட்டிய பொறுமையும், நிதானமும் இன்றும் என் நினைவில் இருக்கிறது. நான் என் வீட்டில் வந்து இறங்கிக் கொள்ளும்போது காலை மணி நான்கு. அதற்கு மேல் புகாரிக்கோ, கஜேந்திர விலாஸுக்கோ போக வேண்டும் என்று ஒரு புரோகிராம் இருந்தது. நான் தப்பிப் பிழைத்து வீடு வந்து சேர்ந்தேன்.

மறுநாள் முதலைப் பண்ணையில் படப்பிடிப்பு நடந்த வேளையில், முந்தைய நாள் பார்ட்டிக்காக பட்ட கஷ்டங்களையும், அதனால் ஏற்பட்ட அனுபவங்களையும் சொல்லி சிரித்துக் கொண்டிருந்தோம்.

எனக்குள் மாத்திரம் ஒரு ஆச்சரியம், ரஜினி எப்போது படுத்தார், எத்தனை மணிக்கு எழுந்தார் என்று தெரியாது. ஆனால் படப்பிடிப்புக்கு சரியான நேரத்தில் வந்துவிட்டார். '.ஃபன்ச்சுவாலிட்டி' என்ற வார்த்தைக்கு அவர் ஒரு உதாரணம். எல்லாவற்றையும்விட ஹைலைட்டான விஷயம், நாங்கள் முந்திய இரவு பூட்டை உடைத்து, ஆ.ஃபீஸுக்குள் சென்று வந்ததைத் தாமதமாகத் தெரிந்துகொண்ட அந்த பட அதிபர் எனது இனிய நண்பர் சின் மணி, 'அடப்பாவிகளா, என்னையும் கூப்பிட்டுருக்கக் கூடாதா? நானும் வந்துருப்பேனே!" அவரது கவலையெல்லாம் பூட்டை உடைத்தது பற்றியல்ல; பார்ட்டியில் தான் கலந்து கொள்ள முடியாமல் போனதே என்பது தான். இதைச் சொல்லிச் சொல்லி சிரித்துக் கொண்டிருந்தோம்.

அப்போது ரஜினி சொன்ன வார்த்தை, "சார், நேத்து நைட்டு நெஜமாவே த்ரில்லிங்கா இருந்துது சார். நமக்கு சாதகமான இடத்துல உக்காந்து பார்ட்டி நடந்திருந்தா, இந்த சுவாரஸ்யம் இருந்திருக்காது சார். லைப்னா இப்பிடித்தான் இருக்கணும். எதிர்பாராத இடைஞ்சல்களை எதிர்நோக்குறதுதான் லை.ஃப்" என்று சொன்னார்.

உண்மைதான், படம் முடிவதற்குள் எத்தனை எதிர்பாராத நிகழ்வுகள்; அவற்றை நாங்கள் எதிர்கொண்ட அனுபவங்கள். இன்னும் நிறைய உண்டு.

(அனுபவங்கள் தொடரும்)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வீரன் தான் பிரீன்

11

**தமிழில் ப.ராமஸ்வாமி**

ஐரிஷ் விடுதலைப் போராட்டம் 750 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட நெடிய வரலாறு கொண்டது! 1900ம் ஆண்டு ஆரம்பம் வரை ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள் பிரித்தாளும் பிரித்தானியரால ஏமாற்றப்பட்டனர். இந்நிலையில் 1913ம் ஆண்டு ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை உருவானது. இதுவே பிற்காலத்தில்– 1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது. ஐரிஷ் தொண்டர் படையின் வீரன் தான் பிரீன். மனதை உலுக்கும் எழுச்சிமிகு உண்மை வரலாறு இது.

அப்பக்கத்தில் மூவர் சென்றதாக அவர்கள் யாரிடத்திலேனும் சொல்லிவிடக்கூடும்.

ஆதலால் மூவரும் யாரையும் கண்டு-கேளாமல் கால்கள் போன இடமெல்லாம் சுற்றித்திரிந்தனர். வட்டங்கள் சுற்றினர். வழி தெரியாமல் திகைத்தனர். இடையில் ஸீன் டிரீஸி இருபதடி ஆழமுள்ள ஓர் ஓடையில் வீழ்ந்துவிட்டான். அவன் மடிந்தான் என்றே மற்றவர்கள் கருதினார்கள். ஆனால் அவர்கள் அவனைத் தூக்கி வெளியே விட்டபொழுது அவன், வேண்டும்! என்று கர்ஜித்தான். அவர்கள் மீண்டும் மலையுச்சியை நோக்கிச் சென்றனர். அம்மலையைத் தாண்டி மறுபக்கத்திற்குப் போய்விட்டால், அவர்களுடைய கவலை ஒழியும்.

உயரே போகப் போகக் குளிர் அதிகமாயிருந்தது. கோடை நடுவிலேயே அம்மலையில் பனி பெய்யும். அந்த மாரிக்கால இருளிலே அங்கு குளிர் தாங்க முடியவில்லை.

மூன்று மணி நேரம அவர்கள் மலையில் ஏறிச் சுற்றிய பின்னால் முன்னால் பார்த்த இரண்டு மலை ஆடுகள் நின்ற இடத்திற்கே திரும்பிவந்து விட்டனர்! அதைக் கண்டு மனம் வருந்தினர்.

இனி அம்மலையைத் தாண்டு வது இயலாது என்று மலைத்தனர். அப்பொழுது ஸீன் ஹோகன் "கவிபாடுகிற புலவர்கள் மட்டும் மலைகள் மாண்புடையவை என்றும், அழகின் உறைவிடம் என்றும் வர்ணிக்கிறார்களே! அவர்கள் வீட்டில் இருந்து கொண்டே ஆனந்தமாய்ப் பாடிவிடுகிறார்கள்.

நம்மைப் போல் பட்டினியும் பசியுமாய்க் குளிரில் வந்து நடந்தால், அவர்கள் ஏழு ஜன்மத்திலும் இயற்கை அழகைப் பற்றிப் பாடவே மாட்டார்கள்!' என்று வேடிக்கையாகப் பேசினான்.

பின்னர் அவர்கள் வேறு வழியில் செல்லவேண்டுமென்று தீர்மானித்தனர். இருப்புப் பாதை வழியாகக் காஹிர் என்ற இடத்தை நோக்கிப் புறப்பட்டனர்.

இந்த யோசனை தோன்றியது அவர்களுடைய நல்லதிஷ்டமே. ஏனென்றால், வீதி வழியாக எந்தப் பக்கம் சென்றிருந்தாலும், அவர்கள் பட்டாளத்தார் கையில் சிக்கியிருப்பார்கள். நாலு பக்கத்தாலும் பட்டாளத்தார் மோட்டார் லொறிகளில் சுற்றிக்கொண்டேயிருந்தனர்.

வழி நடப்பதில் இருப்புப்பாதை வழியாகச் செல்வதைப் போல் கஷ்டமானது வேறில்லை. அதிலும் இரவு. அந்த அந்தகாரத்தின் நடுவே அவர்கள் முன்னும் பின்னும் எச்சரிக்கையுடன் கவனித்துக்கொண்டே சென்றனர்.


தான் பிரீன் திடீரென்று முன்னால் சிறிது தூரத்தில் கறுப்பாக ஓர் உருவம் நிற்பதைக் கண்டான். உடனே றிவேல்வரைக் கையில் பிடித்துக்கொண்டு, 'யாரது? கைகளை மேலே தூக்கு!' என்று உத்தரவிட்டான். அந்த உருவம் உத்தரவை அசட்டை செய்துவிட்டு, அசைவற்று நின்றது.

தான் பிரீன் நீட்டிய றிவேல்வருடன் நெருங்கிச் சென்று பார்த்தான். அந்த நெடிய உருவம் ஒரு ரயில்வே கம்பம்! அதைக் கண்டதும் அவன் அடைந்த வெட்கத்திற்கு அளவேயில்லை. அந்தக் கம்பத்தில், 'உத்தரவில்லாமல் இங்கு பிரவேசிப்பவர்கள் கைது செய்யப்படுவார்கள்' என்று ஓர் அறிக்கை தொங்கிக்கொண்டிருந்தது. கூட இருந்த நண்பர்கள் இருவரும் சிரிப்பை அடக்க முடியாமல் கொக்கரிப்பதைக் கண்டு, தான் பிரீனும் அவர்களுடன் சேர்ந்து சிரிக்கலானான்.

சிறிது தூரம் சென்றதும் ஸீன் ஹோகனுடைய பூட்ஸுகளில் ஒன்று அறுந்து கிழிந்து போய்விட்டது. அடிக்கடி நின்று அதைக் கட்டவேண்டியிருந்தது.

இத்தகைய கஷ்டங் களையெல்லாம் மறந்து நடக்கும்படி ஸீன் டிரீஸி வழியெங்கும் வேடிக்கையான கதைகள் கூறி நண்பர்களை மகிழ்வித்து வந்தான். காஹிர் எவ்வளவு தூரம் என்று யாராவது கேட்டால், அடுத்த வளைவு திரும்பியதும் வந்துவிடும் என்று அவன் கூறிவந்தான்.

ஒரு வளைவிலிருந்து மற்றொரு வளைவுக்குச் சுமார் மூன்று மைலுக்குக் குறைவில்லை. அடுத்த வளைவுக்குப் போனவுடன், அவன் அதற்கடுத்த வளைவென்று கூறி வந்தான். வருந்தி, வாடும் உள்ளத்திற்கு அவனுடைய வேடிக்கைச் சொற்கள் அமிர்தம் போலிருந்தன. வழியில் ஆங்காங்கே சில மணல் மேடுகளில் ஐந்து நிமிஷ நேரம் இளைப்பாறிக்கொண்டு அவர்கள் முன்னேறிச் சென்றனர்.



முடிவில் காஹிர் வந்து சேர்ந்தனர். அவர்களுடைய களைப்புக்கும் உடல் வலிக்கும் அளவேயில்லை. எந்த நிமிஷம் எலும்புகள் ஒரே குவியலாக வீழ்ந்து விடுமோ என்று எண்ணும்படி அவர்கள் விளங்கினார்கள். ஆதலால் மேற்கொண்டு யோசிப்பதில் பயனில்லை என்றும், எங்காவது இளைப்பாற வேண்டுமென்றும் கருதி நேராக ஊருக்குள் சென்றார்கள்.

காஹிர் லோலோ ஹெட்பக்கிலிருந்து பதினைந்து மைல் தூரத்திலிருந்தது. யாரிடம் சென்று இருப்பிடம் கேட்பது என்று அவர்களுக்குப் புலப்படவில்லை. பசி கொடூரமாயிருந்தது. குளிரோ உதிரத்தைக் கட்டியாக உறையும்படி செய்து விட்டது. கால்கள் கெஞ்சித் தடுமாறின. தான் பிரீனுக்கு ஒரு நண்பனுடைய ஞாபகம் வந்தது.

டாபின் என்ற ஒரு மாதின் வீட்டிற்கு அவன் நண்பர்களை அழைத்துச் சென்றான். அவள் வந்த விருந்தினரை மிக்க உவகையுடன் உபசரித்தாள். அவர்களுக்கு வேண்டிய படுக்கை முதலானவற்றைக் கொடுத்தாள். அந்நிலையில் அம்மூவரும் அங்கு சிறிது இளைப்பாறினார்கள்.

மறுநாள் காலையில் அவர்கள் எழுந்தவுடன் பத்திரிகைகளை வாங்கி ஆவலுடன் பார்த்தனர். லோலோஹெட்பக் விஷயமாய் என்ன செய்திகள் வெளிவந்திருக்கின்றன என்பதைக் கவனித்தனர்.

'திப்பெரரி அக் கிரமம்!' 'பயங்கரமான செயல்!' 'இரட்டைப் பொலிஸார் கொலை!' முதலிய தலைப்புகள் கொட்டை எழுத்துக்களில் பொறிக்கப்பட்டிருந்தன. இறந்த பொலிஸாரின் பெயர்கள் மக்டோன்னல், ஓ'கானல் என்று அச்சிடப்பட்டிருந்தன. அவர்களுடைய மரண விசாரணையும் வெளிவந்திருந்தது.

பின்னால் நாட்கள் போகப்போக, நம் தொண்டர்களுக்குப் பல தகவல்கள் தெரிய வந்தன. கொலைகள் சம்பந்தமாக இரண்டு வாலிபர்கள் கைது செய்யப்பட்டனர். இரண்டு மாணவர்களும் சிறையிலிடப்பட்டார்கள்.

எங்கும் பொதுக்கூட்டங்களிலும், மாதா கோயில்களிலும் கொலைகளைப் பற்றி கண்டனங்கள் கூறப்பட்டன. அவைகளைக் கண்டிக்காத பத்திரிகையே கிடையாது. ஸின்பீன் சங்கங்கள் கூடக் கண்டனத்தில் கலந்து கொண்டன!

திப்பெரரியின் தென்பாகம் இராணுவப் பிரதேசமாக அறிவிக்கப்பட்டது. அதாவது அரசாங்கத்தார் அங்கு இராணுவச் சட்டத்திற்கு நிகரான கொடிய சட்டத்தை அமுல் நடத்த ஆரம்பித்தனர். எங்கும் பொலிஸும் இராணுவமும் குழுமி நின்றன. கண்ட இடமெல்லாம் பாணாத்தடிகளும் துப்பாக்கிகளும்! நின்றவர், நடந்தவர், சந்தேகிக்கப்பட்டவர், யாவரும் சோதிக்கப்பட்டனர்.

வீடு தோறும் சோதனை, தெருக்கள் தோறும் பாதுகாப்பு! சந்தைகள், கூட்டங்கள், விழாக் கள் யாவும் தடுக்கப்பட்டன. ஒரு சிறு சம்பவம் ஆங்கில அரசாங்கத்தின் சகல சக்திகளையும் கிளப்பிவிட்டு விட்டது! அதன் கோர உருவத்தை உலகுக்குத் திறந்து காட்டி விட்டது.

மேற்கொண்டு பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளில் இருந்து தான் பிரீன் முதலியோர், தங்களைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கும், பிடிப்பதற்குத் துப்புக் கூறுவோர்க்கும் ஆயிரம் பவுண் பரிசு கொடுப்பதாக அரசு விளம்பரப்படுத்தியிருந்ததைத் தொடந்து கொண்டனர். பின்னால் இந்தப் பரிசு பதினாயிரம் பவுணாக உயர்த்தப் பட்டது. அவர்களுடைய தலைகளின் விலை பதினாயிரம் பவுண் என்று தீர்மானிக்கப் பட்டு விட்டதால், அவர்கள் அதிக எச்சரிக்கையுடன் நடமாட வேண்டியிருந்தது.

மக்களில் யாரும் அவர்களைக் காட்டிக் கொடுக்க முன் வரவில்லை. ஆனால் பொலிஸாரில் சிலர் மட்டும் பரிசு பெறும் நோக்கத்துடன் ஊரூராய்த் தேடினார்கள். நாளடைவில் அவர்களும் சிரத்தை குறைந்து ஒதுங்கி விட்டனர்.

டாபின் அம்மாளுடைய வீட்டில் இரண்டு நாள் தங்கிவிட்டு, தான் பிரீன் முதலானவர்கள் வேறிரண்டு நண்பர்களுடைய வீடுகளுக்குச் சென்றனர். அங்கிருந்து டுப்பிரிட் என்னும் இடத்திலிருந்த ரியான் என்பவருடைய வீட்டுக்குச் செல்ல நினைத்திருந்தார்கள். அங்கு வரப்போவதாகத் தகவல்களும் சொல்லிவிட்டிருந்தார்கள்.

அதிஷ்டவசமாக அவர்கள் அங்கு செல்லாமல், கடைசி நேரத்தில் மிச்செல்ஸ் நகரத்திற்குப் புறப்பட்டுவிட்டனர். அவர்கள் ரியான் வீட்டுக்குச் செல்வதற்காகத் தீர்மானித்திருந்த நேரத்தில், அங்கு எட்டுப் பொலிஸார் அந்த வீட்டைச் சூழ்ந்து ரியானையும் கைது செய்து கொண்டு போயினர்.

மிச்செல்ஸ் நகருக்குப் போகும் பொழுது அவர்கள் இடையில் ஒபிரியன் என்பவருடைய வீட்டில் விருந்தினராக இருந்தனர். அவர்கள் மேல் மாடியிலே படுத்திருந்தனர்.

அப்பொழுது திடீரென்று பல பீலர்கள் (ஐரிஷ் பொலிஸார்) கீழே வீட்டுக்குள் நுழைந்து உரத்த குரலில் பேசிக் கொண்டிருந்தனர். தொண்டர்கள் சண்டை நெருங்கி விட்டது என்று எண்ணித் துப்பாக்கிகளைக் கையிலெடுத்துக் கொண்டனர்.

மாடிப்படிகளிலே பீலர்கள் காலெடுத்து வைக்கவேண்டியதுதான் தாமதம், அவர்களை எமலோகத்திற்கு அனுப்பிவிடவேண்டுமென்று துடித்துக் கொண்டிருந்தனர். ஆனால், பீலர்கள் மாடிப்படிகளில் ஏறவுமில்லை, எமலோகத்திற்குப் போகத் தயாராகவும் இல்லை, பின்னால் விசாரித்ததில், நாய்களின் அனுமதிச் சீட்டுக்கு (லைசென்ஸுக்கு)ப் பணம் செலுத்துவது பற்றி விசாரிக்கத்தான் அவர்கள் வந்ததாகத் தெரிந்தது.

பிறகு தொண்டர்கள் மிச்செல்ஸ் கிழக்கு லிமெரிக் நகர்களைத் தாண்டி லாகெல்லி நகரையடைந்தனர். அங்கு ஒரு வாரம் தங்கியிருந்தனர்.

அங்கே அவர்கள் இருந்த நிலைமையைக் கண்டால், கல்லும் கசிந்துருகும், அவர்களை ஒத்த பிற வாலிபர்கள், தங்கள் அறிவையும் ஆற்றலையும் விற்று, அந்நிய அரசாங்கத்தின் கீழே வேலை பார்த்தும், வேறுபல தொழில்கள் செய்தும் ஏராளமாகச் சம்பாதித்துப் பெற்றோர், பெண்சாதி, பிள்ளை குட்டிகளுடன் இன்ப வாழ்க்கை நடத்துகையில் அவர்கள், துப்பாக்கியும் தேச பக்தியுமே துணையாய்க் கொண்டு, காடும் மலையுமாக அலைந்து கொண்டிருந்தனர்.

உணவுக்கும், உடைக்கும், உட்காரும் இடத்திற்கும் அவர்கள் பிறர் கையை எதிர்பார்க்க வேண்டியிருந்தது. கையில் ஒரு சதமேனும் காசு இல்லை.

சொந்த நாட்டில் பகலில் வெளியே தலைநீட்ட வழியில்லை. திருடர்களைப் போல் நள்ளிரவில் நடக்கவேண்டியிருந்தது. இரண்டு இரவுகளை ஒரே ஊரில் கழிக்க வழியில்லை. குட்டிபோட்ட பூனை போல், ஊரூராய்த் திரியும்படி நேர்ந்தது. இதைப் பார்க்கிலும் இன்னும் எத்தனை கஷ்டங்களையும் அவர்கள் தாய்த்திரு நாட்டிற்காக ஏற்றுக் கொள்ளத் தயாராயிருந்தனர்.

ஆயினும் ஒரு விஷயத்தை மட்டும் அவர்கள் நெஞ்சு பொறுக்கவில்லை. நாட்டில் அவர்களை ஆதரிப்பார் எவருமில்லை. அவர்களைப் பற்றி மலைமலையான கண்டனங்கள் குவிந்தனவேயன்றி, அணுவளவு ஆதரவுமில்லை. ஸின்பீனர்கள் அவர்களை ஆதரிக்கவில்லை.

(பயணம் ...தொடரும்)

---

# அரங்கம் அந்தரங்கம்

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.**

36

**கவியரசு கண்ணதாசன்**

அதன் பாதுகாப்பிலேயே பெண்மையின பவித்திரத் தன்மை இருந்தது.

காதல் என்பது ஒரு வரையறைக்குள்ளும், இலக்கிய நாகரிகத்தோடும் இன்றும் நமது கிராமங்களில் இருந்து வருகிறது.

காம சுகத்தை ஒரு தெய்வீகத் தன்மையாகக் கருதுகிற பண்பு, இன்றும் நமது பெண்மையில் அடங்கிக் கிடக்கிறது.

மனித வர்க்கம் தோன்றிய பொழுது எது அதனை ஆட்டிப் படைத்ததோ, அதையே ஆட்டிப் படைக்கக் கூடிய வைராக்கியம் இந்திய மண்ணிலேதான் எழுந்தது.

இன்று உலகம் இந்து நாகரிகத்தைத் தேடி ஓடிவருகிறதென்றால், மனிதத் தன்மைக்கு அது வகுத்த உன்னத இலட்சியங்களே காரணம்.

இவ்வளவு இருந்தும் இந்திய சமுகத்தின் ஒரு பகுதி மிருகத்தனமாக வெளி நாகரிகங்களை விசேஷ விருந்தாக ஏற்றுக் கொண்டிருக்கிறது.

ஆடைக் குறைப்பு. ஆள்மாற்றி ஆள் பிடித்தல், அர்த்த ஜாமச் சாப்பாடு, இடம்தெரியாமல் உறங்குதல், நள்ளிரவில் தூங்கி, உச்சி வேளையில் கண் விழித்தல்- ஹிப்பி இனத்தின் பரிசுப் பதிப்புகள் இவை.

இந்த உணர்ச்சிகளோடு பணமும் சேர்ந்துவிட்டால் இவற்றுக்கு முடிவே இல்லாமல் போய் விடுகிறது.

★★★

இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!

அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.

இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!

நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.

இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.

–கண்ணதாசன்–

ஆம்: பம்பாயில் குமாரசாமியும், லலிதாவும் அப்படித் தான் ஆகிவிட்டார்கள்.

ஓரளவுக்கு வரை முறையோடு வளர்ந்த லலிதா, இப்போது வரம்பற்ற உடல் சுகத்தைக் கண்டு விட்டாள்.

அதைத் தடுக்க வேண்டிய அவளது கணவனோ, அவளை அனுமதிப்பதன் மூலம் தனக்கும் ஒரு 'லைசென்ஸ்' பெற்றுக் கொண்டுவிட்டான்.

மதன் லாலின் விருந்தினர் விடுதி அவர்களது சொந்த வீடாகவே ஆகி விட்டது.

காலையில் இருந்து மாலை வரை அவர்கள் கணவன் மனைவியாக வாழ்ந்தார்கள். இருவரும் தங்களுடைய அனுபவங்களையும் பரிமாறிக் கொண்டார்கள். சமயங்களில் கணவன்- மனைவியாகவும் நடந்து கொண்டார்கள்.

இந்தப் பழக்கம் சென்னை நகரிலே கூட பல குடும்பங்களிலே இருப்பதால், தங்கள் நடத்தை பற்றி அவர்கள் பயப்படவும் இல்லை; கவலைப்படவும் இல்லை.

ஆனால், மார்வாரிப் பெண் ராஜியின் தொடர்பு குமாரசாமிக்கு அதிகமாகிவிட்டது.

லலிதா மற்றொருவனோடு உறவாடினால் அதைச் சந்தோஷமாக அனுமதித்த குமாரசாமி, ராஜி யாரோடு பேசினாலும் கோபப்பட ஆரம்பித்தான்.

குமாரசாமியைச் சந்தித்த பிறகு ராஜி வேறொருவரை விரும்பவில்லை. ஒரு கசப்பான விஷயத்தைச் சொல்வதானால், நாராயணசாமி பம்பாயில் தங்கி இருந்தபோது அவளை நெருங்க முயன்றதையும், அவள் உடல் நிலையைக் காட்டி மறுத்ததையும் சொல்ல வேண்டும்.

இந்த நிலையில் மலபார் ஹில், 'கீ சேஞ்ச்'சில் குமாரசாமி லலிதாவைக் கூட்டிப் போவானே தவிர, ராஜி வரக்கூடாதென்று கூறிவிட்டான்.

மதன்லாலோ, லலிதாவுக்காகவே அங்கு வரத் தொடங்கினார்.

லலிதாவின் சாவி யார் கையில் கிடைத்தாலும் அதை அவர்கள் மதன்லாலிடம் கொடுத்து விடுவது வழக்கம்.

லலிதாவுக்கு அன்று வேறொரு வாலிபன் மீது கவனம் திரும்பியது. அந்த வாலிபன் வேறு யாருமல்ல; இந்திப் பட உலகில் பிரபலமான நடிகர் இந்திரகுமார்தான் அவர்.



அவரை விரும்பிய லலிதா மதன்லாலை ஒதுக்க விரும்பினாள். அவரோடு ஆடிக் கொண்டிருக்கும்போது ஒரு சொட்டு விஸ்கி கூடக் குடிக்காமல் அவரைத் தள்ளாட வைத்துத் தனியறையில் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டு மெதுவாக ஆடிக் கொண்டிருந்த கூட்டத்திற்குள் நுழைந்தாள்.

நடிகர் இந்திரகுமார் அவளைக் கவனித்தார்.

வடநாட்டு நடிகர்களுக்குத் தென் நாட்டுப் பெண்கள் மீது எப்போதுமே ஒரு கண் உண்டு.

லலிதா மெதுவாக இந்திரகுமாரின் தோளில் கை வைத்து, 'கொஞ்சம் சாப்பிடலாம்' என்றாள்.

இந்திரகுமாரும், அவரோடு ஆடிய பெண்ணும், ஆட்டத்தை நிறுத்திவிட்டு ரிசப்ஷன் சோபாவில் லலிதாவோடு உட்கார்ந்து சாப்பிட ஆரம்பித்தார்கள்.

லலிதா முதல் கிளாசிலே அதிகம் ஊற்றிக்கொண்டாள்.

அவர்களோ ஒரு மணி நேரமாகச் சாப்பிட்டவர்கள்.

அவர்களுக்கு உள்ள போதை தனக்கும் சீக்கிரம் வர வேண்டும் என்று அவள் மடமடவென்று குடிக்க ஆரம்பித்தாள்.

மது, மனிதர்களின் மரியாதை உணர்ச்சியைக் கட்டுப்படுத்தி அனுபவிக்கும் உணர்ச்சியை அதிகரிக்கிறது.

பத்துப் படிக்கட்டுக்கள் ஏற முடியாத ஒருவன், குடித்துவிட்ட நிலையில் ஐம்பது படிக்கட்டுக்கள் ஏறி விடுகிறான்.

தன்னை மறந்த துணிச்சலை அந்தப் போதை உண்டாக்கி விடுகிறது.

(அந்தரங்கம் வரும்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முடிவில்லாத முகாரிகள்

**-கல்லாறு சதீஷ்-**

*சென்னை-'மணிமேகலைப்பிரசுரம்' வெளியிட்டுள்ள 'பனிப் பாறைகளும் சுடுகின்றன' என்ற சிறுகதைத் தொகுதியிலிருந்து-சுவிஸிலிருந்து 'கல்லாறு சதீஷ்' எழுதிய இக்கதை எடுத்து மறுபிரசுரம் செய்யப்படுகிறது.*

*'இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை' என்பது போல், பிறநாடுகளுக்குச் சென்றாவது தங்கள் குடும்பங்களின் துயர் துடைக்கத் துடிக்கும் எத்தனையோ இளைஞர்களின் உண்மை நிலையை எடுத்துக் காட்டும் கதை இது.*

**'ஏன்** பிறந்தேன்?' என்று எண்ணி ஏங்காத நாட்கள் அவன் வாழ்வில் ஏற்பட்டது அருமைதான். இனிமை என்னும் பக்கங்கள் அவனது இதயத்தில் என்றுமே உதயமானதில்லை. பசியை ருசித்து, பட்டினியை அணைத்து அவன் கழித்த காலங்கள் அநேகம். சுவிஸில் என்றாலும் சுகம் கிடைக்கும் என்றுதான் எதிர்பார்ப்புகளை ஏராளமாக்கிக் கொண்டு விண்ணில் பறந்து இந்த மண்ணில் அவன் பாதம் பதித்தான்.

'சுவிஸ்!' சொந்த நாட்டில் இருந்து கற்பனை பண்ணிப் பார்க்கும்போது சொர்க்கபுரியாக எண்ணத்தைத் தொட்ட இடம். ஆத்மாவை எங்கேயோ அடகு வைத்ததைப் பற்றி கவலைப்படாதபோது அந்தக் கற்பனை நிஜம்தான். ஆனால் நாம் மனித குலத்தில் எத்தனையாவது இடத்தில் இருந்தோம்; வந்த நாட்டில் அகதியாக எம்மை ஏற்றுக் கொள் என்று அழுது கிடக்கின்றோம்; ஏற்றுக் கொள்ளும் பட்சத்தில் காலமெல்லாம் அகதியாக வாழவே ஆசைப்படுகின்றோம். அதற்குள், எமக்குள் எத்தனை உயர்வு-தாழ்வுகள்-பேதங்கள். அனைத்தும் உணர்ந்த சக்தியொன்றிருந்து அதன் வேண்டாப் பிள்ளைகளாக வீசிவிட்டவர்களா நாங்கள்? இல்லையேல் ஏன் எமக்கிந்த இழிவு நிலை?

எண்ணங்கள் தொடராக அவனை வாட்டின.

சொந்த நாட்டிலே மூளை உழைப்பாளிகள். எப்படிப்பட்ட படிப்பாளிகள், படைப்பாளிகள், டொக்டர்கள், என்ஜினியர்கள், பட்டதாரிகள்-பலர் இந்த நாட்டின் சாதாரணமான ஒருவரின் கீழ் வேலையாட்கள். அவனுக்கு சுவிஸிலே நடைபெறும் எம்மவர்களின் நிலைமைகள் நினைவலைகளில் நீங்காமல் நீச்சலிட்டன.

வாழ்வில் ஒரு வசந்தத்தை எனினும் வரவேற்று விடலாம் என்றுதான் அவனும் விடை தேடினான். இந்த வசந்தமென்பது சகல சௌந்தர்யங்களையும் உடைய புத்தொளி வீசும் புதுவாழ்வல்ல. இன்றைய எமது இடம் பெயர்ந்த சமுதாயம் எதிர்பார்க்கும் வசந்தம் ஒரு ஃபக்ட்ரியிலோ ரெஸ்டோரண்டிலோ ஏதாவதொரு வேலை கிடைத்தால் அது வசந்தம்தான். ஆனால் அது கூடக் கிடைக்காது என்றுதான் அவன் வந்த இந்த இரண்டு வருடங்களும் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறது.

அன்றும் அவன் வழமை போல் பல இடங்களில் வேலை தேடி ஏறி இறங்கி அலுத்துக் களைத்து வந்த போது, வெறுமை என்னும் பக்கங்கள் புதிது புதிதாக முளைவிட்டிருந்தன. அவனுக்காக இல்லையென்றாலும் அவனை நம்பி வாழும் ஜீவன்களுக்காக வென்றாலும் ஒரு வேலை கிடைக்காதா?

கடிதப் பெட்டியில் நீலக் கடிதம் அவனுக்காகக் காத்திருந்தது. அவனது தங்கை எழுதியிருந்தாள். கடிதத்தை வாசித்தபோது அவன் கண்கள் என்றுமில்லாதவாறு கண்ணீரைச் சிந்தியது. இதயம் கனத்தது. 'ஓ' வென ஓலமிட்டான்.

மூன்று சகோதரிகளுக்கு மூத்தவனாகப் பிறந்தவன்தான் அவன். மூன்றாம் வகுப்பிலேயே தாய் தந்தையர் விபத்தில் இறந்துவிட பத்து வயதிலேயே பாடசாலையை முடித்து பக்கத்து வீட்டார்களின் உதவியுடன் பல வியாபாரங்கள் செய்து சகோதரிகளைக் காப்பாற்றி வந்தான்.

ஆனால் அவர்கள் வாழ்வில் எண்ணெயில்லா குப்பிவிளக்குகள் எரிய மறுத்த நாட்களும் ஏராளம். உணவில்லா வயிறுகள் பற்றியெரிந்த நாட்களும் ஏராளம். எப்படியோ வறுமைப் புயலோடு பல ஆண்டுகள் போராடி பெண்களை பருவ வயதுக்கு பாதுகாத்து வந்தான்.

பாசவலையில் சிக்கிய சகோதரங்கள் ஒருவர்க்காக ஒருவர் உருகி வாழ்ந்தனர். தங்கைகள் வாழ்வுக்காக சில இலட்சங்கள் தந்தால் தன் உயிரைக்கூட கொடுக்க அவன் தயாராகவிருந்தான். ஆனால் உயிரைக் கொடுக்காமலே பல இலட்சங்களைக் கொடுக்க முன்வந்தான் நவா.

நவா பணக்கார குடும்பமொன்றின் ஒரே வாரிசு. ஆனால் எப்பொழுதும் ஏழைகளையே நாடும் உள்ளம் கொண்டவன். நவா சிறுவயது முதலே அவனோடு நட்பாக பழகி வந்தான். அவர்கள் குடும்பத்தையும் குணத்தையும் நன்கே புரிந்திருந்தான். அதனால் அவனின் முதல் சகோதரியை மணம் முடிக்கவும் துணிந்து கொண்டான். நவாவின் சம்மதத்தை அறிந்தவன் சந்தோஷமாக மணம் முடித்து வைத்தான். நவாவால் சேர்க்க முடிந்த அதிக தொகை வரை எடுத்து அவனை சுவிஸிற்கு அனுப்பி வைத்தான். விமான நிலையத்தில் இறுதிவரை அவனுடன் நவாவே உள்ளே சென்றான்.

இப்படியான நல்ல உள்ளம் கொண்ட நவா தனக்கு மச்சானாக வந்ததில் அவன் தன்னை மறந்தான். சகோதரிகளை விட்டுப் பிரியும்போது என்றுமில்லாத ஏக்கம் அடைத்துக் கொள்ள நவாவை இறுதியாகக் கட்டியணைத்து முத்தமிடும் போது "என் உழைப்பால் எம் குடும்பம் உயரும்!" என்று கூறி நவாவிடம் இருந்து விடைபெற்றான்.

விமானம் உயரே, உயரே கிளம்பி பறக்கும் போது தம் வாழ்வும் உயரப் போவதாக நினைத்து நிறைவடைந்தான். திட்டமிட்டபடி சுவிஸ் வந்ததில் சொல்லிக் கொள்ள முடியாத ஒரு புத்துணர்வை முதன் முதலாக உணர்ந்தான்.

சந்தோஷ சரங்களாக பல மடல்களை சகோதரிகளுக்கும், நவாவுக்கும் அனுப்பினான். அவர்கள் வாழ்வில் ஒளியேற்றி வைத்த நாயகனாக நவாவே விளங்கினான்.

சுவிஸிலே மூன்று மாதங்கள் வரை வேலையின்றி முகாமிலே இருக்க வேண்டும். அவனும் முடிந்த மூன்று மாதங்களின் பின் முயற்சியில் இறங்கினான். உதவி நிறுவனம் கொடுக்கும் பணத்தை வீட்டிற்கு அனுப்பினான். தங்கைக்கு முதல் குழந்தை பிறந்த செய்தி கேட்டு பரவசமானான். ஆனால் இந்தப் பரவசங்களும் மகிழ்வுகளும் நிலையானதுதானா, என்பது கேள்விக்குறி.

சுவிஸிற்கு வந்ததும் அவனை வாழ அனுமதித்த மாநிலத்தில் அமைந்த அகதிகள் முகாம் அனைத்து வசதிகளையும் செய்து, வந்தோரை நன்கு பராமரித்தது. அவனுடன் வந்த பல இளைஞர்களுக்கு மூன்று மாத முடிவில் வேலைகள் கிடைத்தன. ஆனால் அந்த வேளையில் பயங்கரமான அம்மை நோயால் அவன் பாதிக்கப்பட்டிருந்தான். அந்த நோயின் பாதிப்பு அவனை



நலிவடைந்த தோற்றமுடையவனாக மாற்றி விட்டது.

அவனது வயதை உடைய வாலிபர்களெல்லாம் உதவி நிறுவனம் கொடுக்கும் பணத்திலேயே உல்லாசமாக வாழும்போது அவன் மட்டும் உதவி நிறுவனம் கொடுத்த உடைகளையும் வரும்போது அணிந்து வந்த உடைகளையுமே தொடர்ந்தும் அணிந்து கொள்வான். அவனுக்கு வாழ்ந்து கொண்டிருக்கும் மனிதநேயம் மிக்க இதயத்தைப் புரிந்து கொள்ள முடியாத சில இளைஞர்கள் அவனை நப்பி, பிசினி என்றெல்லாம் நக்கலடிக்கும்போது அவன் தனிமையைத் தேடிச் சென்று அழுது வடிப்பான். எவரும் இல்லாத இடத்தில் அவன் சிந்தும் கண்ணீரையும் அதன் காரணத்தையும் அறியவோ ஆதரவளிக்கவோ அந்த இடத்தில் எவரும் இல்லையென்றே அவனுக்கு பட்டது.

நாட்டில் நடக்கும் பிரச்சினை ஒரு புறம், வயதை மீறிய வறுமை மறுபுறம் வாட்டும் போதே அவன் இங்கு வந்தான். தனக்கென்றொரு வாழ்வைவிட தன் தங்கைகளுக்கென்றே தன் வாழ்வை அர்ப்பணித்திருந்தான். அந்த நிலையில் அவனால் உதவிப் பணத்தை எடுத்து தங்கத்தில் மாலைகளும் கைக்காப்புகளும் மோதிரங்களும் செய்து போட்டு தான் ஒரு செல்வந்தன் என்று பறைசாற்ற அவன் விரும்பவில்லை. அவனுக்கு கசினோக்களும் டிஸ்கோக்களும் என்ன கலர் என்றே தெரியாது. வேலை தேடுவது, முகாமிற்கு வருவது என்றிருந்தான். யாரும் இதுபற்றி பேசினாலோ நக்கலடித்தாலோ மனதுக்குள் ரணவேதனையை ஏற்படுத்திக் கொண்டிருக்கும் சோகங்களை எல்லாம் புதைத்து புன்னகைத்து விட்டு தன்பாட்டில் வாழ்ந்து கொண்டிருந்தான்.

வரும்போது பழகியவர்களும் தெரிந்தோர்களும் பிறந்தநாள், திருமணம், பூப்புநீராட்டு விழா என்று அழைப்பு மடல்களைக் கொடுப்பார்கள். அவனது வறுமை தெரியாது வாழ்த்து அழைக்கும்போது வரவேற்கவும் முடியாது வெறுக்கவும் தெரியாது வெறுமையை நினைத்து வேதனை கொண்டான். ஒவ்வொரு அழைப்பு மடலும் குறிப்பிட்ட ஒரு தொகைப்பணத்தின் வரவேற்பு மடல்களல்லவா?

அவனது தாய்தந்தையர் தங்கள் இன்பத்தில் பிரசவித்த குழந்தைகளை இடைநடுவே விட்டு பரலோகம் சென்றது அவன் செய்த தவறா?

அவனது வயதை உடையவர்கள் வசந்தம் தேடி உலகெல்லாம் வலம்வரும்போது வந்த இடத்தில் வாழ்விழந்து தவிக்க வேண்டிய விதி அவனுக்கு மட்டும் என்ன விந்தையோ?

பெற்றோரையும் செல்வத்தையும் பறித்துவிட்ட இறைவன் பாசத்தை மட்டும் அதிகம் கொடுத்து சகோதரிகளின் ஒவ்வொரு சிறு வேதனைக்கும் இவனை புழுவாக துவள விட்ட கொடுமை! இறைவா!! ஏன் ஒரு சமநிலையற்ற வாழ்வை இந்த மனிதர்களுக்கு நீ கொடுத்து அணு அணுவாக வதை செய்து கொண்டிருக்கிறாய்? வாழ்வில் வளமாக வளரமுடியாத மனிதர்களை சிசுவாக வளரும்போதே சிதைத்துவிட உனது வல்லமையை பயன்படுத்தலாமே!

அவனுக்கு தன்னைப்பற்றி வரும் கற்பனைகளில் தினமும் இவைகள் வந்து வலித்துக் கொண்டிருந்தன.

தொடர்ந்தும் சுவிஸிலே வேலை தேடுவது முடியாத காரியமாகிவிட்டது. பல வருடங்கள் வந்து வேலை செய்தவர்களுக்கே வேலையில்லை. வேலையிழப்பு பணம் பெறுவோர் தொகை நாளாந்தம் அதிகரித்த வண்ணமே இருந்தது. அகதிகள் வருகையும் எண்ணிக்கையில்லா எல்லையைத் தொட்டது. நாட்டில் வாழும் போது இளைஞர்களுக்கேயுரிய உயிர்ப் பிரச்சனை காரணமாக இருந்தாலும் உயிரைக் காக்க செலவளித்த இலட்சங்களை எடுக்க உழைப்பது தவிர்க்க முடியாததாகி விடுகின்றதல்லவா?

உதவிப்பணத்தை சிறிது சிறிதாக சேமித்தான். எப்படியும் இந்த நாட்டை விட்டு வெளியேறுவது என்ற திட்டத்துடனேயே வேலை தேடிக் கொண்டிருந்தான். பலரிடம் தன்னிலையைச் சொல்லி வேலை பெற்றுத் தருமாறு கேட்டிருந்தான்.

பலர் பெற்றுத் தருவதாகச் கூறினாலும், வேலை வரும் போது தங்கள் உறவினர்கள் நண்பர்கள் என்று உதவி செய்தனர். இந்த நிலையில் எவராவது ஒரு வேலை பெற்றுக் கொடுத்திருந்தால் அவருக்காக இவன் நாயினும் மேலாக நன்றியுடையவனாக இருந்திருப்பான். ஆனால் இந்த உலகத்தில் உள்ளத்தைப் பார்க்கும் உணர்வுகள் மறைந்து சுயநலம் தேடும் மனிதர்கள் மலிந்துவிட்டபோது எப்படி அவன் போன்ற ஏழைகளுக்கு ஆறுதல் கிடைக்கும்? சிறுகச் சிறுக சேமித்த பணத்தைக் கொண்டு மேலும் இங்கு தாமதிக்காது வேறு நாடு செல்வதென்னும் திட்டம் பூரணமாக அவனுள் முழுமை பெற்றுவிட்டது.

இறுதி முயற்சியாக அன்றும் வேலை தேடி விட்டு வந்தபோதுதான் தங்கையின் கடிதம் வந்திருந்தது. கடிதத்தில் கரைந்திருந்த நீல மை தன் தங்கையின் அழுகுரலை அவன் காதுகளில் ஒலிக்க வைத்தது.

அவன் தன் தங்கையின் கடிதத்தை வாசித்தான். *"அண்ணா, நவா அத்தான் வேலைக்கு சென்று வரும்போது நகரில் ஏற்பட்ட கண்ணி வெடி காரணமாக பலரைக் கைது செய்த போது அவரையும் பிடித்து விட்ட னர். அவரை பார்க்க போன எம்மை பார்க்கவிடாது துரத்தி விட்டனர். சித்திரவதை செய்து அவரது காலை உடைத்து விட்டதாக ஒருவர் எமக்கு கூறினார். அவரை வெளியே எடுத்து தருவதற்கு 30.000 ரூபாய் காசிருந்தால் நம்பிக்கையான ஒருவர் விடுதலை செய்து தருவதாக கூறியுள்ளார். உன்னால் முடிந்தால் உடனடியாக பணம் அனுப்பி வைக்கவும்."*

அவனுக்கு உலகமே இருள்வது போல் தோன்றியது. சாண் ஏற முழம் சறுக்கும் என்பார்கள். அவன் சாணேறு முன்பே பல மைல்கள் சறுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டான். தனக்கு உயிர் கொடுத்து உதவிய நவாவுக்கு இல்லாத பணம் தனக்கெதற்கு என்று கருதி அப்படியே அவன் சேகரித்த பணத்தை அனுப்பிவிட்டு படுக்கையில் வீழ்ந்தான். ▲

# சிவந்த மண்

**ரூபராணி**

**"பா**ட்டி எனக்கு அம்மாருக்கா பாட்டி?"

"இல்லை!"

"அப்பா?"

"அவருமில்ல. நானிருக்கேன்." பார்வதிப் பாட்டியின் வாய்க்குள் வார்த்தைகள் தடுமாறின.

அந்த நாலு வயதுச் சிறுவன் 'சுகு'வின் முகம் தொட்டாச்சிணுங்கியாய்ச் சுருங்கியது.

"அவங்க எல்லாம் எங்க பாட்டி?" மீண்டும் கேள்வி கேட்டான் சிறுவன்.

"சாமிற்றப் பொமிற்றாங்கப்பா," பாட்டியின் நா குழறியது.

"எப்பிடி?"

"செத்து!" பாட்டியை அறியாமல் ஒரு வேகத்தில் வார்த்தைகள் வெளியே வந்து விழுந்து துடித்தன.

"நான் எப்ப செத்துப் போற பாட்டி? சாமிற்றப் போய் அம்மாவையும் அப்பாவையும் பார்க்கணும்!"

அந்தச் சிறுவன் தன் புறங்கையால் கண்ணைக் கசக்கிக் கொண்டு அழ ஆரம்பித்துவிட்டான். தன்பேரனை அள்ளி மடியில் போட்டு அவனைச் சமாதானப்படுத்த பாட்டி பட்டபாடு பெரும்பாடாய்விட்டது. அவளுக்குத் தெரிந்த பழைய தாலாட்டுப் பாடல்கள் ஒன்றும் கைகொடுக்கவில்லை. தட்டில் கிடந்த பாண்துண்டுகள் தீண்டுவாரற்றுக்கிடந்தன.

பார்வதிப்பாட்டி தன் தலைவிதியை நொந்து அழுதாள். தன் வாழ்க்கையில் இப்படி ஒரு திருப்பம் வரும் என்று அவள் கொஞ்சங்கூட எதிர்பார்க்கவில்லை. பேரனின் அழுகை தேய்ந்து சிணுங்கலாக மாறியது.

"சுகுக் கண்ணா, ஆமிக்காறன் வரப்போறான். சீக்கிரம் தூங்கு!" என்று தன் கால்கள் இரண்டையும் நீட்டி தலையணையைப் போட்டுப் பேரனை வசதியாக வளர்த்தித் தன்கால்களை ஆட்டத் தொடங்கியதும், சுகு தன்னை மறந்து உறங்கிப்போனான். 'ஆமிக்காறன் வரப்போறான்' என்றதும் எவ்வளவு சீக்கிரம் சுகு உறங்கிப் போனான் என்று எண்ணிய பார்வதிப்பாட்டியின் கண்களில் இருந்து நீர் அருவியாய் ஓடியது. ஊர் அடங்கிப் போனாலும் ஆங்காங்கே நாய்களின் ஊளைச் சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது. இரவு மணி ஏழைத் தாண்டினால் நாய்களின் விதவிதமான ராக ஆலாபனைகள் கேட்கத் தொடங்கிவிடும். வாழைப் பாத்தியுள் சுருண்டு கிடந்த ஜிம்மிநாயின் குரல் மட்டும் கேட்காதது பார்வதிப்பாட்டிக்கு என்னவோபோல் இருந்தது.

பார்வதிக்கு வயது அறுபதைத் தாண்டியிருக்க முடியாது. ஆனாலும் எழுபது வயதுக்கு மேற்பட்ட தளர்ச்சி. வாழ்க்கையின் பயங்கர அனுபவங்களைச் சுமக்கும் அவள் முகத்தில் துயரத்தின் தழும்புகள் தெளிவாகத் தெரியும். பேரனை நெடு நேரமாகக் காலில் வைத்திருந்ததாலோ என்னவோ, பார்வதிப் பாட்டியின் கால் விறைத்தது. அவனைத் தூக்கி பக்கத்தில் கிடந்த பாயில் மெதுவாகக் கிடத்தினாள்.

"முருகா!", என்று பெருமூச்சுவிட்ட பார்வதிப்பாட்டி கண்களை மூடினாள். அவள் கண்ணுக்குள்.



**ப**ங்குனிவெயில் காலை ஒன்பது மணிக்கெல்லாம் சுள் என்று உறைக்கத் தொடங்கியது. அழுக்கு உடுப்புகளையெல்லாம் கிணற்றடியில் அள்ளிப் போட்டுக் கழுவிக் கொண்டிருந்தாள் பார்வதி. அவள் கணவன் கந்தையா வேலியோரமாயிருந்த முருங்கையின் உச்சியில் தொங்கிய காய்களைக் கொக்கைத் துறட்டியால் பிடுங்கிக் கொண்டிருந்தார்.

"பிள்ள, றோகினி!" பார்வதி தன் மூத்த மகளுக்குக் குரல் கொடுத்தாள். அவள் தன் இரண்டரை வயதுக் குழந்தையோடு கிணற்றடிக்கு விரைந்தாள். றோகினி, "புட்டுமட்டும் அவிச்சி வச்சிருக்கிறன், முட்டையப் பொரித்து அப்பாவையும் கூப்பிட்டுச் சாப்பாட்டைக்குடு. தம்பி, ரியூட்டறிக்குப் போகுமுன்னம் சாப்பிட்டு விட்டான்"

பார்வதி சொல்லி வாய் மூடுமுன் எங்கோ வெடித்த குண்டுச் சத்தம் மனித உடல்களை உலுக்கி எடுத்தது. பூமி அதிர்ந்தது. நாலா பக்கமும் சரமாரியாகக் கேட்ட துப்பாக்கி வேட்டுக்கள் உயிரை உறைய வைத்தது.

கசக்கிய உடுப்புகளை உதறித்தள்ளிய பார்வதி "என்ர கதிராமத்தய்யனே!" என்று பதறி முருங்கை மரப்பக்கம் ஓடினாள். அவள் கையில் சோப்பு நுரை முட்டை முட்டையாய் ஒட்டியிருந்தது. அவள் புருஷன் கந்தையா நெஞ்சை இரு கைகளாலும் பொத்திக்கொண்டு நடுங்கினார். ரியூட்டறிக்குப்போன கமலனை எண்ணியதும் பார்வதிக்கு வயிற்றைப் பிசைந்தது.

இராணுவ வாகனத்தின் உறுமல் அருகாமையில் கேட்டதும் றோகினி வீட்டுக்குள் ஓடினாள். நாய்களின் அலறலும் அயலவர்களை அழுகுரல்களும் நடக்கப்போகும் பயங்கரத்துக்குக் கட்டியம் கூறின. குழந்தை சுகு வீரிட்டு அழ, றோகினி அவன் வாயைப் பொத்தி அடக்குவதில் தோற்றுப் போனாள். தன் புருஷனை இழுத்துக் கொண்டு பார்வதியும் கந்தையாவும் இருந்த இடத்துக்கு ஓடிவந்து அழுதாள். படையினரின் காலடி ஓசை வீட்டுக்குள் கேட்கத் தொடங்கியது. பாத்திர பண்டங்கள் உருண்டன. பொருட்கள் அடித்து நொறுக்குஞ் சத்தம் கேட்டதும் பயத்தில் பனிக்கட்டியாய் உறைந்து போனது பார்வதியின் குடும்பம்.

துவக்குகளை நீட்டியபடி இராணுவம் கிணற்றடிப் பக்கம் விரைந்தது. முருங்கை மரப்பக்கம் நனைந்த கோழிக் குஞ்சுகளாய் நடுங்கிய பார்வதியின் குடும்பத்தை நோக்கி அவர்கள் அட்டகாசமாய்க் கூச்சல் போட்டு நகர்ந்தார்கள். பார்வதி பரிதாபமாகக் கதறி அவர்கள் காலைப் பிடித்துக் கெஞ்சினாள். ஒரு உதையில் அவள் நிலைகுலைந்து வீசப் பட்டு மயங்கிப் போனாள். கந்தையா கையெடுத்துக் கும்பிட்டு உருக்கம் வழிய தனக்குத் தெரிந்த அரை குறைச்சிங்களத்தில் ஏதோ சொன்னார். துவக்குப் பிடியால் ஓங்கி விழுந்த அடியில் அவர் மண்டை பிளந்து குருதி கொட்டச் சாய்ந்தார். சிவந்த மண்ணில் குழந்தையுடன் விழுந்து அழுத றோகினியின் நீண்ட சடையைப் பிடித்து இராணுவம் இழுக்க குழந்தை சுகு மண்ணில் உருண்டு வீரிட்டான். றோகினியின் கணவன் மனைவியைக் காப்பாற்றப் போராடியதில் இருவரும் பலமாக தாக்கப்பட்டுக் குற்றுயிராய் வீழ்ந்தார்கள். குருதி எங்கும் ஆறாய் ஓடியது.

ரியூட்டரிக்குப் போன பெடியன்களை ஏற்றிக் கொண்டு பேரிரைச்சலுடன் ஒரு இராணுவ வாகனம் புழுதியைக் கிளப்பி மறைந்தது. சில மணித்தியாலங்களில் வீசிய பயங்கரச் சூறாவளி ஓய்ந்து எங்கும் மயான அமைதி நிலவியது. பார்வதி மயக்கம் தெளிந்து எழுந்தபோது கந்தையா, றோகினி புருஷன் மூவரும் மீளாத் துயில் கொண்டு கிடந்தார்கள். சுகு மட்டும் தாயின் மார்பில் முகம் புதைத்து விளையாடிக் கொண்டிருந்தான்.

பார்வதிப் பாட்டியின் மூடிய கண்களிலிருந்து ஓடிய நீர் அவள் பேரனின் கால்களைத் தொட்டு வழிந்தது. அவன் வாய் "பாட்டி நான் எப்ப செத்துப் போற?" என்று முணுமுணுக்கிறது. ●


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மறுமை உலகம்...?

"மறுபிறப்பு என்று ஒன்றிருக்கிறதா குழலி?"

மாறன் பிடியில் துவண்டு கிடந்தவளுக்கு, சிந்தை கேள்வியை வாங்கிக் கொள்ளும் நிலையில் இல்லை.

அரைக் கண் மூடிய நிலையில் இந்த உலகப் பிரக்ஞை அற்றிருந்தாள் அவள்.

கைகளுக்குள் கிடந்த அவளை நெஞ்சோடு இறுக்கி உலுக்கினான் மாறன்.

தன்னை மறந்த நிலையிலும் உதடுகளைக் குவித்தபடி "ச்சீ...வேண்டாம்..." என்று சிணுங்கினாள் பூங்குழலி.

காதல் நோய் தந்த பஞ்சத்தினால் நொந்திருந்த அவள் இதழ்கள் முத்த நிவாரணத்திற்கு ஏங்கின.

"ஏய்...குழலி! கேட்டதற்குப் பதில் சொல்லேன்....!"

விழித்துக்கொண்டு "என்ன" என்றாள் ஈனஸ்வரத்தில்.

"மறுபிறப்பு இருக்கிறதா குழலி?"

"என்ன இது திடீர்க் கேள்வி?" அலுப்புடன் உதிர்ந்த அவள் சொற்கள் காற்றில் கள்ளைக் கலந்தன.

"சொல்லேன்...!"

"சற்றைக்கெல்லாம் முன்பு அந்த உலகத்தில்தான் இருந்தேன். நீதான் மறுபடி இங்கே அழைத்து வந்துவிட்டாய்!"

"விளையாடாதே குழலி! இறந்தாலும் நீயும் நானும் போகும் அந்த உலகத்தில் மறுபடியும் ஒன்று சேர்ந்திருக்க வழிகாண வேண்டும்!"

சொல்லியபடியே அவளைத் தன் முகத்தோடு சேர்த்தான். "என் காதல் நோய் மிக வலியது தேவி! ஒரு பிறப்போடு அறுந்துவிடாது. ஒவ்வொரு பிறவியிலும் தொடர்ந்துவரும்..."

"க்கும்... அடுத்த பிறவியில் நீ எங்கு பிறக்கிறாயோ நான் எங்கேயோ...?"

"முட்டாள் பெண்ணே! இருவரும் தனித்தனியாக இருந்தால்தானே போகும்போது பிரிந்துபோக நேரிடும். என்னை உருக்கிக் குழம்பாக்கி உன் உயிருக்குள் ஊற்றி வைத்திருக்கிறேன். உன்னையும் எனக்குள் ஊற்றி வைத்திருக்கிறேன். காற்றிலிருந்து வாசனையை வடிகட்டிப் பிரித்துவிட முடியுமா, கண்ணே...? உனக்குள் நான், எனக்குள் நீ."

"ம்..." ஒரு சமுத்திரத்தை அடக்கிவைத்த ஒற்றைச் சொல் அவளிடமிருந்து வெளிப்பட்டது. வெளியேறிய ஒற்றைச் சொல்லின் அர்த்தச் சுமை தாங்காமல் அவள் உடல் புரண்டது. அவன் வலிய கரங்களை மீற முடியாமல் நெளிந்து திரும்பியது. கணப்பொழுதில் அந்தச் சொல் வெளியேறிய வாசலைக் கவ்வி, தன் உதடுகளுக்குள் வாங்கிக் கொண்டான் மாறன்.

இருவரும் இவ்வுலகைத் துறந்தனர்.

துன்பத்தில் உழல்கிறவர்களெல்லாம் தொடர்ந்தும் வாழ்வதற்குக் காரணமாய் மறு உலக இன்பத்தை எதிர்பார்ப்பாய் வைத்துக் கொள்கின்றனர். உண்மையோ பொய்யோ அந்த நம்பிக்கையால்தான் சாகாமல் உயிர் பிழைத்து வாழ்கின்றனர்.

காதலரின் உலகிலும் மூட நம்பிக்கைகளுக்கு முதன்மையான இடம்தான்.

தலைவன்- தலைவி இரகசியமாகச் சந்தித்துக் கொள்வதைக் கேள்வியுற்ற தலைவியின் பெற்றோர், அவளை வீட்டை விட்டு வெளியே அனுப்புவதில்லை என்று முடிவு செய்கின்றனர். இதை, தோழி மூலம் அறிந்துகொள்கிறான் தலைவன். திகைப்பில் பிதற்ற ஆரம்பித்துவிடுகிறான்.

பக்தர்கள், பைத்தியக்காரர்கள், காதலர்கள் மூவருமே தமக்குத் தாமே பேசிக்கொண்டிருப்பதில் ஒரே [illegible]கையினர்.

தலைவன் தனக்குத்தானே பேசிக் கொள்கிறான்.

"நெஞ்சே! வருந்தாதே. இனி அவளை எளிதிலே காணமுடியாதுதான். ஆயினும், அவளுடைய கூந்தலிலே என்றும் கமழும் நறுமணம் போல, என்னுடைய காதல் நோயும் என்றும் தொடர்வது. வலிமையான தேரை உடைய ஓரி என்னும் மன்னன் வறியோர்க்கு வரையாது வழங்கும் வள்ளல். அவனுடைய காட்டிலே படிந்து வீசுகின்ற காற்றில் மிதந்து வந்த வாசனை இவளுடைய அடர்ந்த கூந்தலைத் தான் தன் குடியிருப்பாக மாற்றிக்கொண்டிருக்கிறது. என்றும் நறுமணம் கமழும் குளிர்ச்சியான கூந்தலை உடையவள் என் தலைவி. அவளிடம் நான் கொண்டிருக்கும் காதல் வலிமையானது; என்றும் அழிந்துவிடாது.

தொடர்ந்து மறுவுலகத்திலும் நாம் மகிழ்ச்சியோடு இருப்போம். இவ்வுலகில் அவளை என்னிடமிருந்து பிரித்து வைத்திருப்பவர்கள் ஏமாளிகள். எங்கள் காதலின் வலிமையை அறியாதவர்கள்."

இதைச் சொல்லும் குறுந்தொகைப் பாடல்.

இது பாணர் என்னும் புலவர் செய்யுள். குறிஞ்சித் திணையில் வருவது.

பெறுவது இயையாது ஆயினும், உறுவது ஒன்று
உண்டு மன்; வாழிய நெஞ்சே; திண்தேர்க்
கைவள் ஓரி கானம் தீண்டி
எறிவளி, கமழும் நெறிபடு கூந்தல்
மையீர் ஓதி, மா அயோள் வயின்,
இன்றை யன்ன நட்பின், இந்நோய்
இறுமுறை என ஒன்று இன்றி,
மறுமை உலகத்தும் மன்னுதல் பெறுமே.

## இலக்கிய நயம்

எழுதுவது

முழடில்யன்

## ஸ்போர்ட்ஸ்

## "இந்தியாவை விட திறமையானது பாகிஸ்தான்"

### அவுஸ்திரேலிய அணித்தலைவர் கூறுகிறார்.



"அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியுடன் விளையாடிய 3 டெஸ்ட் போட்டிகளிலும் பாகிஸ்தான் படுதோல்வியடைந்துள்ளது. எனினும் அது இந்தியாவைக் காட்டிலும் திறமையான அணியே" என்று அவுஸதிரேலிய அணித் தலைவர் ஸ்டீவ் வோவ் கூறியுள்ளார்.

தற்போது அவுஸ்திரேலியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்துள்ள இந்திய அணி, உள்ளூர் போட்டிகளில் விளையாடி வருகிறது.

"தனது தாய் நாட்டில் மட்டுமே இந்திய அணி வலுவுடன் விளங்குகிறது. கடந்த 10 ஆண்டுகளாக வெளிநாடுகளில் நடைபெற்ற போட்டிகளில், வெகு சில டெஸ்ட் பந்தயங்களில் மட்டுமே இந்தியா வெற்றி பெற்றுள்ளது.

அதாவது வெளிநாடுகளில் விளையாடும் இந்திய அணிக்கும் உள்நாட்டில் விளையாடும் இந்திய அணிக்கும் நிறையவே வேறுபாடுகளைக் காணலாம்" என்றும் ஸ்டீவ் வோவ் கூறியுள்ளார்.

அடிலெய்ட் நகரில் டிசம்பர் 10-14, மெல்ஃபோர்ணில் டிசம்பர் 26-30, சிட்னியில் ஜனவரி 2-6 ஆகிய திகதிகளில் இந்தியா- அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டிகள் நடைபெறுகின்றன.

இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா ஆகிய 3 நாடுகளுக்கிடையிலான அவுஸ்திரேலியாவில் நடைபெறும் ஒருநாள் போட்டிகள் வருகின்ற ஜனவரி 9ம் திகதி ஆரம்பமாகவுள்ளன.

## ஜடேஜா தென்னாபிரிக்கா செல்கிறார்



வலது தோள்பட்டை சிகிச்சைக்காக இந்திய கிரிக்கெட் வீரர் அஜய் ஜடேஜா தென்னாபிரிக்கா சென்றுள்ளார். இவர் அங்கு மார்க் பெர்குஸன் என்ற மருத்துவரிடம் சிகிச்சை பெறுகிறார்.

அவரது தோள்பட்டை காயம் குணமாக 4 வாரங்கள் பிடிக்கும் எனத் தெரிகிறது. இதனால் ஜடேஜா, அவுஸ்திரேலியாவுடன் இந்தியா விளையாடும் 3 டெஸ்ட் போட்டிகளிலும் விளையாட மாட்டார்.

அடுத்த ஜனவரியில் நடைபெறும் இந்தியா, பாகிஸ்தான், அவுஸ்திரேலியா ஆகிய 3 நாடுகள் பங்கேற்கும் போட்டிகளுக்குள் அவர் குணமாகி விடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவுஸ்திரேலியா செல்லும் இந்திய அணியில் இவரது பெயர் முன்னதாக இடம்பெற்றிருந்தது. இறுதியில் காயம் காரணமாக அவரால் அணியில் இடம்பெறமுடியவில்லை.

அஜய் ஜடேஜாவுக்குப் பதிலாக சகலதுறை ஆட்டக்காரரான ரிஷிகேஷ் கனிட்கர் இந்திய அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

## தென்மண்டலத்திற்கு கப்டன்



இந்திய அணியில் இருந்து நீக்கப்பட்டிருக்கும் முகமட் அஸாருதீன் இந்தியாவில் உள்ள தென் மண்டல அணிக்கு கப்டனாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவில் நடைபெறும் முக்கிய உள்ளூர்க் கிரிக்கெட் போட்டிகளில் ஒன்றுதுலிப் கோப்பைப் போட்டி. டிசம்பர் 1ம் திகதி முதல் இப்போட்டிகள் நடைபெறுகின்றன.

இந்தியாவின் தென் மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடக வீரர்களை ஒன்று சேர்ந்ததுதான் தென் மண்டல அணி. இவ்வணிக்கு துணைக்கப்டனாக தமிழக வீரர் ரொபின் சிங் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

## 'ஹேராம்' பட முன்னோட்டம்



தன்னம்பிக்கை தாழாதவர். கடின உழைப்பாளி. வித்தியாசமான சிந்தனை கொண்டவர். தூங்கும் நேரத்தைவிட தனது தொழிலைப் பற்றியே சிந்திப்பார். தனது தொழிலை ஆத்மார்த்தமாகச் செய்பவர்.

இப்படி இவரைப் பற்றி இன்னும் சொல்லிக் கொண்டே போகலாம். இவற்றிற்கெல்லாம் சொந்தக்காரர் கமலஹாசன்.

இப்போது அவரது சிந்தனையெல்லாம் தான் பெரும் பொருட் செலவில் தயாரித்து, நடித்து முதன் முறையாக இயக்கி வரும் (இந்தி 'அவ்வை சண்முகி'யை சில காரணங்களால் அவரே இயக்க நேரிட்டது வேறு விடயம்) 'ஹேராம்' படத்தைப் பற்றித்தான்.

இந்தியப் பண மதிப்பில் சுமார் 16 கோடி ரூபாய் செலவில் இதைத் தயாரித்துள்ளார் கமல். முதலில் 'ஹேராம்' நவம்பர் 7ம் திகதி வெளியாக இருந்தது. நவம்பர் 7 தீபாவளி தினம் அதனால் தான் அந்தத் திகதியில் வெளியிடுகிறார் என்று நினைத்தால் தவறு. அன்று கமலின் பிறந்த தினம். அதுவும் காரணம் அல்லவாம்.

அன்றுதான் கமலின் தந்தை அமரரான தினம். தான் முதன் முதலில் இயக்கியிருந்த படத்தை சமர்ப்பணம் செய்ய எண்ணியிருந்தார். தனது எதிர்ப்பார்ப்பிற்கு அமையும் வண்ணம் இருப்பதற்காக, இறுதிக் கட்ட வேலைகளில் கூடிய கவனம் செலுத்தி வருகிறார். இதனால் வெளியீட்டுத் திகதியையும் தள்ளிவைத்துவிட்டார்.

அடுத்த நூற்றாண்டின் முதல்படமாக 'ஹேராமை' உலகம் முழுவதும் வெளியிட எண்ணியிருக்கிறார் கமல்.

சரி, படத்தைப்பற்றிப் பார்ப்போம்.

காந்தியை சுட்டுக் கொன்றபோது, அவர் 'ஹேராம்' என்று கூறியபடி விழுந்ததாகச் சொல்கிறார்கள். இதற்கும் படத்திற்கும் என்ன சம்பந்தம்? படம் வந்ததும் பார்ப்போம்.

ஐயங்கார் குடும்பத்தைச் சேர்ந்த சாகேத் ராம் என்பவரின் 89 வருடகாலச் சரித்திரம்தான் 'ஹேராம்' படத்தின் கதை. படத்தில் நடிக்கும் பெரும்பாலான வேடங்களில் அந்தந்தச் சாதி, மத, இனத்தவர்களையே கமல் பயன்படுத்தியுள்ளார். இது உலக சினிமா வரலாற்றில் ஒரு சாதனை.

கமலின் மனைவியாக ஐயங்காரப் பெண் மைதிலியாக நடிக்கும் வசுந்த்ரா ஓர் ஐயங்கார். கமலின் இன்னொரு ஜோடியாக வங்காளப்பெண் அபர்ணாவாக நடிப்பவர் வங்காள நடிகை ராணி முகர்ஜி.



வசுந்த்ரா

கமலின் முஸ்லிம் நண்பராக அம்ஜத் அலிகானாக ஷாருக்கான் நடிக்கிறார். முஸ்லிம் டாக்டராக அப்பாஸ். இப்படி அந்தப் பட்டியல் நீள்கிறது.

அது மட்டுமன்றி கற்பனைக் கதாபாத்திரங்களோடு சில நிஜக் கதாபாத்திரங்களையும் நடிக்க வைத்துள்ளார் கமல். இவர்களில் முக்கியமானவர் மோகினி மாத்தூர். மகாத்மா காந்தி சுடப்பட்டபோது நேரில் பார்த்தவர் இவர்.

இவர்களுடன் இளவயதுக் கமலாக கமலின் சகோதரி மகன் கௌதம் நடிக்கிறார். கமலின் மகள் ஸ்ருதியும் நடித்துள்ளார்.



முதியவர் மேக்-அப்பில் கமல்.

கமலுக்கு ஜோடியாக அறிமுகமாகும் வசுந்த்ராவின் குரல் 'ஹேராம்' வருவதற்கு முன்னரே ரசிகர்களுக்கு பரிச்சயமாகிவிட்டது. 'முதல்வன்' படத்தில் இடம்பெறும் 'ஷக்கலக்க பேபி...' என்ற கலக்கல் பாடலைப் பாடியவர் சாட்ச்சாத் இவரேதான்.

இப்படத்தில் கமல் நான்கைந்து கெட்-அப்களில் நடிக்கிறார். அவற்றில் முக்கியமானது 89வயது முதியவராக நடிப்பது. இதற்காக முதன் முறையாக மொட்டையடித்துள்ளார். முதியவராக மாற பல மணி நேரம் மேக்-அப்பிற்கு செலவழித்தாராம்.

இப்படிப் பல எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்தியிருக்கும் 'ஹேராம்' வெற்றி பெறுவது நிச்சயம்.



ஷாருக்கான்

## இவர்தான் அவர்



தேவயாணி

## தமிழர் இருவர்

அவுஸ்திரேலியா சென்றிருக்கும் இந்திய அணியில் இரண்டு தமிழர்கள் இடம் பிடித்துள்ளனர். ஒருவர் நமக்கு நன்கு அறிமுகமானவர். அவர் சடகோபன் ரமேஷ். மற்றவர் திருநாவுக்கரசு குமரன்.

தமிழ்நாட்டின் சென்னையைச் சேர்ந்த திருநாவுக்கரசு- ஆனந்த வல்லி தம்பதிகளின் மகன்தான் குமரன். சண்டிகாரில் உள்ள கபில் அகடமியில் பந்துவீச்சுப் பயற்சி பெற்றவர்.



இந்திய கிரிக்கெட் அணியில் காலம் தாழ்த்தியே அவருக்கு வாய்ப்புக் கிடைத்தது. இருப்பின் கிடைத்த வாய்ப்பை நழுவ விடாமல் பிடித்துக்கொண்டார் குமரன். மணிக்கு 150 கிலோ மீட்டர் வேகத்தில் பந்து வீசும் குமரனைப் பற்றி கபில்தேவ் சொன்னது இது.

"அகர்கர் மாதிரி 'ரிவர்ஸ் ஸ்விங்' போட்டு மிரட்டுகின்ற இந்த இளைஞரின் எதிர்காலம் படுபிரகாசமாக இருக்கும்."

வசிஷ்டர் வாயால் பிரம்மரிஷிப் பட்டம் பெறுவது என்பது இதைத்தானோ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 26

ஆண்டவர் தமக்குரிய பணிகளை மாநிடருக்கு எடுத்துக்கூறி, அவர்களை நல் வழியில் இட்டுச் செல்வதற்காகவே இயேசுபிரானை மண்ணில் அவதரிக்க வைத்தார். ஆனால் யூத மக்களில் பெரும்பாலானோரே இயேசுபிரானின் அறிவுரைகளை ஏற்க மறுத்தனர். ஆலயக் குருமாரும் மறைநூல் ஆசிரியர்களும் பரிசேயர்களுமே, யூத மக்களை, இயேசுபிரான் மீது நம்பிக்கைவைக்க அனுமதிக்காமல் தடை போட்டவண்ணம் இருந்தனர்.

ஆண்டவரின் பேரைச் சொல்லி மக்களை ஏமாற்றி, தமது வாழ்வை வளப்படுத்தும் சுயநல நோக்கமுடையவர்களான மேற்படியானவர்கள், இயேசுவின் போதனைகளை வெறுத்தனர். எங்கே தங்கள் வயிற்றுப்பிழைப்புக்கே பாதகம் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சமே அவர்களிடம் குடிகொண்டிருந்தது.

இக்காரணத்தினால்தான், எப்போதும் இயேசு பெருமானின் போதனைகளிலும் சாதனைகளிலும் குற்றம் கண்டுபிடிப்பதையே அவர்கள் தமது பெரும் கடமையாகக் கொண்டிருந்தனர். தமது அடிவருடிகளை, இயேசுபிரானுடன் நெருங்கிச் சென்று, அவருடைய யைச் சிதறடிக்கும். கூலிக்கு மேய்ப்பவருக்கு ஆடுகளைப்பற்றிக் கவலை இல்லை.

நல்ல ஆயன் நானே! தந்தை என்னை அறிந்திருக்கிறார்; நானும் தந்தையை அறிந்திருக்கிறேன். அது போல நானும் என் ஆடுகளை அறிந்திருக்கிறேன்; என் ஆடுகளும் என்னை அறிந்திருக்கின்றன. அவைகளுக்காக எனது உயிரைக் கொடுக்கிறேன். இக்கொட்டிலைச் சேரா வேறு ஆடுகளும் எனக்கு உள்ளன. நான் அவற்றையும் நடத்திச் செல்ல வேண்டும். அவையும் எனது குரலுக்குச் செவிசாய்க்கும். அப்போது ஒரே மந்தையும் ஒரே ஆயரும் என்னும் நிலை ஏற்படும். தந்தை என்மீது அன்பு செலுத்துகிறார். ஏனெனில் நான் என் உயிரைக் கொடுக்கிறேன்; அதை மீண்டும் பெற்றுக் கொள்ளவே கொடுக்கிறேன்.

என் உயிரை என்னிடமிருந்து யாரும் பறித்துக் கொள்வதில்லை. நானாகவே அதைக் கொடுக்கிறேன். உயிரைக் கொடுக்கவும் எனக்கு அதிகாரம் உண்டு; அதை மீண்டும் பெற்றுக்கொள்ளவும் அதிகாரம் உண்டு. என் பறித்துக் கொள்ளமாட்டார். அவற்றை எனக்கு அளித்த என் தந்தை அனைவரையும் விடப் பெரியவர். அவற்றை என் தந்தையின் கையிலிருந்து யாரும் பறித்துக்கொள்ள இயலாது. நானும் தந்தையும் ஒன்றாய் இருக்கிறோம்!" என்றார்.

இயேசுபிரான் கூறிய இவ்வரிய மொழிகளிலும் பரிசேயருக்கு தெளிவு ஏற்படவில்லை. அவர்மீது கற்களை வீசுவதற்குச் சிலர் கற்களைப் பொறுக்கிச் சேர்த்தனர். இதனை இயேசுபிரான் கண்டுகொண்டார். அவர்களைப் பார்த்து, இயேசு பிரான் "தந்தையின் சொற்படி பல நற்செயல்களை உங்கள் முன் செய்து காட்டியிருக்கிறேன். அவற்றுள் எச் செயலுக்காக என்மேல் கல்லெறியப் பார்க்கிறீர்கள்?" என்று கேட்டார்.

இயேசுபிரானின் இவ்வினாவுக்கு பதிலாக யூதர்கள், "உமது நற்செயல்களுக்காக உம்மை நாங்கள் இம்சிக்க நினைக்கவில்லை. நீர் இறைவனைப் பழித்துரைக்கிறீர். அதற்காகவே உமக்குத் தண்டனை தர எண்ணுகிறோம்!" என்றனர். "உம்மையே நீர் கடவுளாக்கிக் கொள்ளுகிறீர்!" என்றும் குற்றஞ்சாட்டினர்.

இதற்கு மறுமொழியாக இயேசுபிரான், "'நீங்கள் தெய்வங்கள் என நான் கூறினேன்' என்று உங்கள் மறைநூலில்

# "இறைவனைப் பழிக்கிறாய்!"



போதனைகளைக் கேட்போருடன், அனுப்பி வைத்து, இயேசுபிரானுக்குத் தொல்லைகளை விளைவித்தனர்.

இறைவனால் அருளப்பட்டு, தன் வாய்மொழி மூலம் வெளிவரும் கருத்துக்களை, மறுதலிப்போரை இயேசுபிரான், 'பார்வையற்ற பாவிகள்' என்று குறிப்பிட்டார். இதனால் வெகுண்டெழுந்த பரிசேயர், பலவிதமான கேள்விக் கணைகளை வீசினார்கள். இவர்களின் அறியாமையைப் போக்கும் நோக்குடன், ஆட்டுக் கொட்டில் பற்றிய உவமைக் கதைகளை இயேசுபிரான் கூறலானார்:

### நானே வாயில்

"ஆட்டுக்கொட்டிலின் வாயில் வழியாக நுழையாமல் வேறு வழியாக ஏறிக் குதிப்போர் திருடர் அல்லது கொள்ளையராய் இருப்பர். வாயில் வழியாக நுழைபவர் ஆடுகளின் ஆயர். அவருக்கே காவலர் வாயிலைத் திறந்து விடுவார். ஆடுகளும் அவரது குரலுக்கே செவிசாய்க்கும். அவர் தம்முடைய சொந்த ஆடுகளைப் பெயர் சொல்லிக் கூப்பிட்டு வெளியே கூட்டிச் செல்வார். தம்முடைய சொந்த ஆடுகள் அனைத்தையும் வெளியே ஓட்டிவந்தபின் அவர் அவற்றிற்கு முன் செல்வார். ஆடுகளும் அவரைப் பின்தொடரும். ஏனெனில் அவரது குரல் அவற்றுக்குத் தெரியும். அறியாத ஒருவரை அவை பின் தொடரா. அவரை விட்டு அவை ஓடிப்போகும். ஏனெனில் அவரது குரல் அவற்றுக்குத் தெரியாது.

ஆடுகளுக்கு வாயில் நானே. எனக்கு முன்பு வந்தவர் அனைவரும் திருடரும் கொள்ளையருமே. அவர்களுக்கு ஆடுகள் செவி சாய்க்கவில்லை. நானே வாயில். என் வழியாக நுழைவோருக்கு ஆபத்து இல்லை. அவர்கள் உள்ளே போவர்; வெளியே வருவர்; மேய்ச்சல் நிலத்தைக் கண்டுகொள்வர்.

திருடுவதற்கும் கொல்வதற்கும் அழிப்பதற்குமன்றித் திருடர் வேறெதற்கும் வருவதில்லை. ஆனால் நான் ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும்பொருட்டு வந்துள்ளேன். நல்ல ஆயன் நானே. நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்.

கூலிக்கு மேய்ப்பவர் ஓநாய் வருவதைக் கண்டு ஆடுகளை விட்டு விட்டு ஓடிப் போவார். ஏனெனில் அவர் ஆயரும் அல்ல; ஆடுகள் அவருக்குச் சொந்தமும் அல்ல. ஓநாய் ஆடுகளைப் பற்றி இழுத்துக்கொண்டு போய் மந்தை

தந்தையின் கட்டளைப்படியே நான் இப்படிச் செய்கிறேன்."

இயேசுபிரான் கூறிய இக்கருத்துரை அங்கிருந்த யூதமக்கள் மத்தியில் பலத்த வாதப் பிரதிவாதங்களை ஏற்படுத்திவிட்டது. சிலர், "இவனுக்குப் பேய்பிடித்துவிட்டது; இவனுடைய பேச்சை எவரும் கேட்க வேண்டாம்!" என்று குரலெழுப்பினர். ஆனால் அவர்களில் வேறுபலர், "பேய் பிடித்தவனோ அல்லது பித்துப்பிடித்தவனோ இப்படியா பேசுவான்?" என்று கூறி இயேசுபிரானைத் தொடர்ந்தனர்.

# இராஜகுமாரன்

### அர்ப்பண விழாவில்

அப்போது நல்ல குளிர்காலம். கோவிலில் அர்ப்பணவிழா நடைபெறுவதற்கான ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. ஆலயத்தின் சாலமோன் மண்டபத்தில் இயேசுபிரான் உலவிக் கொண்டிருந்தார். அவரை அணுகிய யூதர்களில் சிலர்; "நீர் ஆண்டவரால் அனுப்பி வைக்கப்பட்ட மேசியாவானால் அதனை வெளிப்படையாகச் சொல்லிவிடும்!" என்று கேட்டனர். இயேசுபிரான் இவ்வாறு பதிலளித்தார்:

"நான் உங்களிடம் சொன்னேன்: நீங்கள்தான் நம்பவில்லை. என் தந்தையின் பெயரால் நான் செய்யும் செயல்களே எனக்குச் சான்றாக அமைகின்றன. ஆனால் நீங்கள் நம்பாமல் இருக்கிறீர்கள். ஏனெனில் நீங்கள் என் மந்தையைச் சேர்ந்தவர்கள் அல்ல. என் ஆடுகள் எனது குரலுக்குச் செவிசாய்க்கின்றன. எனக்கும் அவற்றைத் தெரியும். அவையும் என்னைப் பின்தொடர்கின்றன. நான் அவற்றிற்கு நிலைவாழ்வை அளிக்கிறேன். அவை என்றுமே அழியா. அவற்றை எனது கையிலிருந்து யாரும்

எழுதியுள்ளது அல்லவா? கடவுளுடைய வார்த்தையைப் பெற்றுக்கொண்டவர்களே தெய்வங்கள் என்று சொல்லப்படுகிறார்கள். மறைநூல் வாக்கு என்றும் அழியாது. அப்படியானால் தந்தையால் அர்ப்பணிக்கப்பட்டு அவரால் உலகுக்கு அனுப்பப்பட்ட நான் என்னை 'இறைமகன்' என்று சொல்லிக்கொண்டதற்காக 'இறைவனைப் பழித்துரைக்கிறாய்' என நீங்கள் எப்படிச் சொல்லலாம்? நான் என் தந்தைக்குரிய செயல்களைச் செய்யவில்லை என்றால் நீங்கள் என்னை நம்பவேண்டாம். ஆனால் நான் அவற்றைச் செய்தால், என்னை நம்பாவிடினும் என் செயல்களையாவது நம்புங்கள்; அதன் மூலம் தந்தை என்னுள்ளும் நான் அவருள்ளும் இருப்பதை அறிந்துணர்வீர்கள்!" என்றார்.

### இலாசரும் சகோதரிகளும்

பெத்தானியாவில் இயேசுபிரானுடைய நண்பர் ஒருவர் இருந்தார். இலாசர் அவருடைய பெயர். அவருக்கு மரியா மற்றும் மார்த்தா என்ற இரு சகோதரிகளும் இருந்தனர். மரியா என்பவர்தான் முன்னர் இயேசுபிரானின் கால்களுக்கு நறுமணத் தைலம் பூசி தனது தலைமுடியினால் துடைத்துவிட்டவர்.

இலாசர் அப்போது கடும் சுகயீனமுற்று, உயிருக்காக மன்றாடிக் கொண்டிருந்தார். இத்தகவலை இயேசுபிரானுக்கு சகோதரிகள் அறிவித்தனர். இதன்பின்னர் இயேசுபிரான்,

"இந்நோய் சாவில் போய் முடியாது. கடவுளின் மாட்சி விளங்கவே இவன் நோயுற்றான். இதனால் மானிடமகனும் மாட்சி பெறுவார்." என்றார். மார்த்தாவிடமும் அவருடைய சகோதரியான மரியாவிடமும் இலாசரிடமும் இயேசு அன்புகொண்டிருந்தார். இலாசர் நோயுற்றிருந்ததைக் கேள்விப்பட்ட பிறகு, தாம் இருந்த இடத்தில் இன்னும் இரண்டு நாள் அவர் தங்கியிருந்தார்.

பின்னர் தம் சீடரிடம், "மீண்டும் யூதேயாவுக்குப் போவோம், வாருங்கள்!" என்று கூறினார். அவருடைய சீடர்கள் அவரிடம், "போதகரே இப்போது தானே யூதர்கள் உம்மேல் கல்லெறிய முயன்றார்கள்; மீண்டும் அங்கு போகிறீர்களா?" என்று கேட்டார்கள். இயேசு மறுமொழியாக, "பகலுக்குப் பன்னிரண்டு மணி நேரம் உண்டு அல்லவா? பகலில் நடப்பவர் இடறி விழுவதில்லை; ஏனெனில் பகல் ஒளியில் பார்க்க முடிகிறது. ஆனால் இரவில் நடப்பவர் இடறி விழுவார்; ஏனெனில் அப்போது ஒளி இல்லை." என்றார். இவ்வாறு கூறியபின், "நம் நண்பன் இலாசர் தூங்குகிறான்; நான் அவனை எழுப்புவதற்காகப் போகிறேன்!" என்றார். அவருடைய சீடர் அவரிடம் "ஆண்டவரே, அவர் தூங்கினால் நலமடைவார்," என்றனர். இயேசு அவருடைய சாவைக் குறிப்பிட்டே இவ்வாறு சொன்னார். வெறும் தூக்கத்தையே அவர் குறிப்பிட்டதாக அவர்கள் நினைத்தார்கள். அப்போது இயேசு அவர்களிடம், "இலாசர் இறந்து விட்டான்" என்று வெளிப்படையாகச் சொல்லிவிட்டு, "நான் அங்கு இல்லாமல் போனதுபற்றி உங்கள் பொருட்டு மகிழ்கிறேன்; ஏனெனில் நீங்கள் என்னை நம்புவதற்கு இது ஒரு வாய்ப்பாகிறது. அவனிடம் போவோம், வாருங்கள்!" என்றார். திதிம் என்னும் தோமா தம் உடன் சீடரிடம் "நாமும் செல்வோம், அவரோடு இறப்போம்!" என்றார்.

(தொடர்ந்து வரும்)

---

**திருமறை [பு.ஆ] 23 விடை: 30 வெள்ளிக்காசுகள்**

**பரிசு பெறுவோர்:**

1. செல்வி இ. தயாழினி, கரம்பன் தென்கிழக்கு, ஊர்காவற்றுறை.
2. எஸ். இராஜேந்திரன், இரணசிங்ஹகம. லேமஸ்தொட்ட, நிக்கப்பொத்த.
3. எம்.ஐ. நஸீ.பா ஹலீம்ஸ், இல. 12 ஹப்புத்தளை வீதி, பண்டாரவளை.
4. சித்தி பளீலா கனி, சிட்டி டிஸ்பென்சரி, தைக்கா வீதி, வாழைச்சேனை.
5. வ. விஜயலஷ்மி, 1180, பாலையூற்று திருகோணமலை.

**திருமறை [பு.ஆ] 26 வினா :-** கொட்டிலுக்குள் வாயில் வழியால் நுழையாதவர் யாராக இருக்க முடியும்?

டிசம்பர் 11 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:

**திருமறை – பு.ஆ.26 – தினமுரசு வாரமலர், த.பெ.இல – 1772, கொழும்பு.**

---

# அறிஞர்கள் வாழ்வில்....



நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின் கிளி வளர்க்க வேண்டும் என்று விரும்பினார். ஒரு கடையில் கிளி ஏலம் விட்டுக் கொண்டிருந்தார்கள். சாப்ளினும் ஏலப் போட்டியில் கலந்து கொண்டார். கடைசியில், ஏலம் முடிந்து கிளியை வாங்கிக் கொண்டு வெளியே வந்ததும் அவருக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டது. திரும்பிக் கடைக்குள் வந்து கடைக்காரரிடம், "இந்தக் கிளி பேசுமா?" என்று கேட்டார். கடைக்காரர் சிரித்துவிட்டு, "இத்தனை நேரம் நீங்கள் ஏலம் கேட்டுக் கொண்டே வந்தீர்களல்லவா? உங்களுக்குப் போட்டியாக ஏலத் தொகையை உயர்த்திக் கொண்டே போயிற்றே, இன்னொரு குரல், அது இந்தக் கிளிதான்" என்றார்.

அறிவியல் மேதை ஐன்ஸ்டின் ஒருமுறை தொடர் வண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தபோது சிற்றுண்டி சாப்பிட ஆசைப்பட்டார். தொடர் வண்டி நிர்வாகத்தின் கீழ் உள்ள சிற்றுண்டிச் சாலையில் சாப்பிட வந்த ஒருவர் தம் கைகளில் வைத்திருந்த சிற்றுண்டிகளின் பட்டியலை அவரிடம் காட்டினார். ஐன்ஸ்டின் அதனை படித்தறிவதற்காக தாம் பயன்படுத்தும் மூக்குக் கண்ணாடியை வெகு நேரம் தேடியும் கிடைக்கவில்லை. மறதி காரணமாக அவர் எங்கேயோ தொலைத்து விட்டார். வேறு வழியின்றிப் பட்டியலைக் கண்ணாடி இல்லாமலேயே படிக்க முயன்றார்.

ஒன்றையும் புரிந்துக் கொள்ள முடியவில்லை. மனம் சலித்தபடியே, "நீயே இதைப் படித்துக் கூறு" என்றார் ஐன்ஸ்டின். "மன்னிக்க வேண்டும் நான்கூட தங்களைப் போல படிக்காதவ " தான்" என்றார் அவர்.





பெல்ஜியம் நாட்டு ஆசிரியர் மேட்டர்லிக் என்பவருக்குத் தாம் எழுதிக் கொண்டிருக்கும்போது யாராவது குறுக்கிட்டுப் பேசினால் கடுமையான கோபம் வரும். ஒருமுறை அவர் தீவிரமாய் எழுதிக் கொண்டிருந்தார். அச்சமயத்தில் வீட்டிற்குத் திரும்பிய அவர் மனைவி, சந்தடி செய்யாமல் தன் அறைக்குச் சென்றாள். அங்கே அதிர்ச்சி அடைந்த அவள், ஓடிவந்து கணவரிடம், "நீங்கள் எழுதிக் கொண்டிருக்கும் போது ஓசைபடாமல் யாரோ என் நகைகளைத் திருடிக் கொண்டு போய் விட்டார்களே" என்று அலறினாள்.

"ஒரு திருடன் என் வேலைக்குக் காட்டும் மரியாதையைக்கூட உனக்கு காட்டத் தெரியவில்லையே" என்று பதிலுக்குக் கத்தினார், மேட்டர்லிக்.






"அதோ அந்த அப்பக் கடையில் நேற்று ராத்திரி இடி விழுந்துடுச்சு!"

"ஐயய்யோ பிறகு என்ன ஆச்சு?"

"இப்ப அது இடிஅப்பக் கடை ஆயிடுச்சு!"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Regd. as a News Paper at the G.P.O.(QD/40/NEWS/99)




அருள் ஜுவலர்ஸ்

ARUL JEWELLERS

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை:

105. காலி வீதி,வெள்ளவத்தை,கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11

3 செட்டியார் தெரு, கொழும்பு 11

436331


# துளைக்கப்பட்டவர்






ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்

SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11

5 செட்டியார் தெரு, கொழும்பு 11

323657


→ எமது நாட்டுப் பெண்கள் காதுகளிலும் மூக்கிலும் தங்க நகைகளை மாட்டுவதற்காகத் துளை போட்டுக் கொள்வார்கள். ஆலயத் திருவிழாக்களில், தங்கள் நேர்த்திக் கடனைச் செலுத்துவதற் காக முதுகில் செதில் குத்திக் காவடி எடுப்பார்கள். உடலில் சில பாகங்களில் மட்டும் வெள்ளி வேல்களைக் குத்திக் காவடி எடுப்பார்கள்.

படத்தில் காணப்படும் பெல்ஜியம் நாட் டைச் சேர்ந்த அலெக்ஸ் லம்பிறேச் என்பவர் தனது உடம்பு முழுவதும் துளைபோட்டு உலோகத்தாலான அணிகளை மாட்டிக் கொண்டுள்ளார். மொத்தம் 137 உலோக அணிகளை கடந்த 40 ஆண்டுகளாக தன் உடம்பில் மாட்டிக் கொண்டிருக்கிறார். தனது மறை விடத்திலும் 50 அணிகளை மாட்டியிருக்கிறார்.

லம்பிறெச் தனதுடம்பில் மாட்டியுள்ள அணிகள் விலை உயர்ந்த உலோகத்தாலானவை. இவற்றின் மொத்தப் பெறுமதி 11,400 டொலர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. ☼



# வியாபாரி

← தாய்லாந்தின் தலைநகரான பாங்கொக்கின் புறநகர்ப் பகுதியான நகோன் பிரதாம் பகுதியில், பலூன்களை விற்று அன்றாட உணவைத்தேடும் 34 வயதான வினாய் பிம்சசை என்பவரே படத்தில் காணப்படுபவர். இவருடைய பலூன் விற்பனையில் மிகவும் குறைந்த வருமானமே கிடைத்து வந்தது.

ஒருநாள் இவர் தெருவில் ஒரு காரில் மோதிக் குற்றுயிராய்க் கிடந்த ஒரு நாயை எடுத்துக் காப்பாற்றினார். அன்றிலிருந்து அந்த நாயே பிம்சசையின் உற்ற தோழனாகவும் வியாபாரப் பங்காளியாகிவிட்டது. அந்த நாய்க்கு ரி-சேட்டையும் கறுப்புக் கண்ணாடியையும் அணிவித்து தெருமுனையில் தனது பலூன் வியாபாரத்தைத் தொடக்கினார். பலூன் விற்கிறதோ இல்லையோ, நாயின் வாயில் தொங்கும் வாளியில் பணம் நிரம்பி விடுகிறது. நன்றியுள்ள நாய், தன் உயிர்காத்த தோழனின் குடும்பத்தைக் காக்கும் கைங்கரியத்தை ஏற்றுள்ளது. ☼



# விலை உயர்ந்தது

→ ஒரு வேளை உணவை இன்றுள்ள விலைவாசிப்படி பத்து ரூபாய்க்குள் முடித்து விடுவோருமுண்டு. சில உல்லாச விடுதிகளில் ஒருவேளை உணவுக்காக ஒருவர் ஓராயிரம் ரூபாவைச் செலவிடுபவர்களும் எம் நாட்டிலேயே இருக்கிறார்கள்.

படத்தில் காணப்படும் அம்மையார் ஜப்பான் தலைநகரான டோக்கியோவிலுள்ள உணவு விடுதி ஒன்றில் நீலச் செதில் ரியூனாமீன் உணவை ரசித்து உண்ணுகிறார்.

1992ம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 324 கிலோ (715 இறாத்தல்) ரியூனா மீன் ஜப்பானில் பிடிபட்டது. இம்மீன் 83,000 டொலருக்கு (சுமார் 58 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா) விற்கப்பட்டது. இதன்படி ஒருகிலோ மீனின் விலை 115 டொலர். (8 ஆயிரத்து 50 ரூபா) இதிலிருந்து 2,400 கோப்பைக் கறி தயாரிக்கப்பட்டு அதே அளவு தொகையினருக்கு ஒருவேளை உணவுக் காகப் பரிமாறப்பட்டது.

இவ்வுணவுக்காக ஒவ்வொருவரும் செலுத்திய கட்டணம் எவ்வளவு தெரியுமா? ஆக 75 டொலர் (5 ஆயிரத்து 250 ரூபா) ஆக இந்த ரியூனா மீனிலிருந்து பெறப்பட்ட நிகர வருமானம் ஒரு இலட்சத்து 80 ஆயிரம் டொலர். (1 கோடியே 26 இலட்சம் ரூபா)

விலைகூடிய உணவு என்ற வகையில், இவ்வம்மையார் உட்கொள்ளும் உணவே மிகவும் 'விலை உயர்ந்த உணவு' என்ற சாதனையை எட்டிப்பிடித்துள்ளது. ☼

## 1வது - 4வது பிறந்தநாள் வாழ்த்து



திலக்ஷன் (22.11.99) திலோஜன் (02.10.99)

சாவகச்சேரி நுணாவிலைச் சேர்ந்த மகேஸ்வரன்-மகாலட்சுமி தம்பதிகளின் செல்வப் புதல்வர்கள் திலோஜன் தனது 1வது பிறந்தநாளை 02.10.99 அன்றும் திலக்ஷன் தனது 4வது பிறந்தநாளை 22.11.99 அன்றும் நோர்வே ஒஸ்லோவில் கொண்டாடினார்கள்.

இவர்களை அன்பு அப்பா, அம்மா இலங்கை அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, அத்தைமார், மாமாமார், சித்தப்பா, சித்தி, மச்சாள்மார், மச்சான் அண்ணைமார், சற்குணம் மாமா, மாமி, கீதாச்சித்தி, இத்தாலி பெரியப்பாமார், பெரியம்மாமார், அக்காமார் தம்பி, தங்கை, மனோமாமா, சுவிஸ சிறிமாமா, சேயோன் சித்தப்பா, ரூபாச்சித்தி, ஃபிரான்ஸ் பெரியப்பா, பெரியம்மா, ஜேர்மன் பெரியப்பா, பெரியம்மா, அக்காமார் ரஞ்சன் மச்சான், டென்மார்க் பகுசுச்சித்தப்பா, சித்தி, தங்கை, கனடா நந்தினி அத்தை, மாமா, அண்ணா, நோர்வே வசந்தன் சித்தப்பா, வாவாசித்தி, இலங்கேஸ் மச்சான், மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் திலக்ஷனையும் திலோஜனையும் பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் மருதங்குளத்துப் பிள்ளையார் அருள் பெற்று வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

தகவல்:T.Maheshwaran. Enebakkvn-168, 0680, Oslo, Norway.

## முதலாவது பிறந்த நாள் வாழ்த்து



ரவீணா ரவிச்சந்திரன் 30.11.1999

யாழ்ப்பாணம் காரைக்காட்டு லேன் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த ரவிச்சந்திரன் ஷகிதா (சிமி) தம்பதியினரின் செல்வப்புதல்வி ரவீணா தனது முதலாவது பிறந்தநாளை (30.11.1999) TORONTO CANADAவில் தனது இல்லத்தில் கொண்டாடுகிறார். இவரை யாழ்ப்பாணத்தில் வசிக்கும் அன்பு அப்பப்பா, அம்மம்மா, அன்பு அப்பா, அம்மா (CANADA) சந்திரன் சித்தப்பா (கனடா), சிறிமாமா (டோகா), நந்தா அத்தை, ஹம்சினி மச்சாள், வினோதன் மச்சான், இத்தாலியில் வசிக்கும் கரிந்திரன் மாமா, சுமா அத்தை கண்ணன் சித்தப்பா, கிளி சித்தப்பா, ஜெர்மனியில் வசிக்கும் கிருபன் மாமா, வாந்துகுட்டி அத்தை, சிவானி மச்சாள், யாழ்ப்பாணத்தில் வசிக்கும் தர்சினி அத்தை, சொக்கு தம்பி சித்தப்பா, விச்சு சித்தப்பா, சுவிஸ் தயா மாமா குடும்பத்தினர், சுவிஸ் ஸ்ரிபன் மாமா, ஃபிரான்ஸ் நந்தினி சித்தி குடும்பத்தினர், மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அனைவரும் பல்கலையும் கற்று வெக்காளி அம்மனின் அருளால் நீடூழிகாலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: சி. காராளசிங்கம்- அப்பப்பா (லப்பான்)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்